தமிழாக்கம்

# Character Development

Berean Scripture Lessonson

## தூஷணமும், பொல்லாத பேச்சுக்களும், வதந்திகளும்



# தூஷணமும், பொல்லாத பேச்சுக்களும், வதந்திகளும்

## 1. தூஷணமான பேச்சுகள் என்றால் என்ன?

யாக் 3:8-10 - "நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனை துதிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது."

**R2443 (col. 1 P5 – col.2 P1): -**

ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தங்களுடைய நாவினால் சபிக்கிறார்கள் என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு எந்தக் கோணத்தில் கூறுகிறார்? மேலும், அனைவருக்கும் இவ்வளவு வெளிப்படையான எச்சரிப்பு தேவையா? நிச்சயமாக எந்தக் கிறிஸ்தவனும் தங்களுடைய சகோதரர்களை எந்தவிதமான பிரதிக்கினையோடு அல்லது முன்திட்டமிட்டு, பக்தியற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி சபிக்கமாட்டர்கள். ஆனால் நம்முடைய நாவு மற்றவர்களைக் காயப்படுத்தி, சபிப்பதற்கு மற்ற வழிகள் ஏதும் உண்டா? உபயோகத்தில் இருக்கும் **"curse"** என்ற ஆங்கில வார்த்தையின் பொருள், கடந்த நூற்றாண்டில் சற்று மாற்றப்பட்டுள்ளதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். பொதுவாக, **"curse"** என்ற வார்த்தைக்கு "காயப்படுத்துவது" என்ற பொருள் முழுமையாக தொலைந்துபோனது. அதற்குப் பதிலாக "ஆணையிடுதல்" மற்றும் "பக்தியற்ற பேச்சுகள்" என்று பொருள்படுத்தப்பட்டது. ஆணையிட்டு சபித்தலைக் குறிக்கக்கூடிய வெவ்வேறு வார்த்தைகள் கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்டது. (அநாத்தீமா மற்றும் அநாத்தீமாட்டிஸோ என்ற வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் பத்து முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.) மேலும், பகிரங்கமாக கூறக்கூடிய சாபங்களைக் குறிப்பதற்கும் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டது. (அதாவது காட்டாரா மற்றும் காட்டாராயோமாய் என்ற வார்த்தைகள் - எதிராக பேசுதல், தீமையாக பேசுதல் அல்லது பேச்சின் மூலமாக காயப்படுத்துவதை பொருள்படுத்தும்) இரண்டாவதாக சொல்லப்பட்ட வார்த்தையை அப்போஸ்தலனாகிய யாக்கோபு பயன்படுத்துகிறார். ஒரே நாவினால் நாம் தேவனை துதிக்கிறோம் அதே நாவினால் நம்முடைய சகோதரர்களை தவறாகவோ அல்லது காயப்படுத்தியோ, புறம் கூறுகிறோம் என்று பொருள்படும்படி அவர் கூறுகிறார். "உங்களை சபிப்பவர்களை (தீமையாக பேசுபவர்களை) ஆசீர்வதியுங்கள்" என்று நம்முடைய ஆண்டவர் இதே வார்த்தையை பயன்படுத்துகிறார். "ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள்" என்று அதே வார்த்தையை பவுலும் தேவனுடைய ஜனங்களுக்கு எச்சரிப்பாக கூறுகிறார். மேலும் "இனி ஒருபோதும் கனிக்கொடுக்கமாட்டாய்" என்று இயேசு இதே வார்த்தையைக் கூறி சபித்தார் என்று வாசிக்கிறோம். வருங்காலத்தில் அது வளர்ச்சி அடையாமல், சாதகமற்ற சூழ்நிலையில் இருக்கும் என்பதை முன் அறிவித்தார். இப்படியாக நியாயப்பிரமாணத்திற்கு கீழ் இருந்த யூதர்கள், சாபத்திற்கு கீழ் இருந்ததாக பவுல் அறிவிக்கிறார். நியாயப்பிரமாணம் தீமையானது அல்ல, ஆனால் மாம்சத்தில் அபூரணமாக இருந்த இஸ்ரயேல் ஜனங்கள் அதன் தீர்ப்பின் (சாபம்) கீழ் வந்துவிட்டார்கள். "கிறிஸ்து நமக்காகச் (முன்னே யூதர்களுக்கு) சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு (தீர்ப்புக்கு) நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்." (கலா 3:10-13) என்றும் பவுல் அறிவித்தார். இதே காரியத்தை கீழ்க்காணும் வசனத்திலும் காணலாம்.

“இந்த பூமி முள்ளும் குறுக்கையும் முளைப்பிக்கும்” என்று இந்த பூமியை சபித்தபோது, அந்த நிலம் பயிரிடுவதற்கு ஏற்றதாக இருக்கவில்லை. மாறாக, அதன் களைகள் பிடுங்கப்பட்டு சுட்டெரிக்கப்பட்டபின் அது விளைச்சலுக்கு ஆயத்தமாக இருக்கும்.” - மத் 5:44, ரோம 12:14, மாற் 11:21, எபி 6:8.

இந்த உண்மையான வார்த்தையையும், அதை பயன்படுத்தின முக்கியமான நோக்கத்தையும் நம்முடைய சிந்தைக்குமுன் கொண்டுவந்து பார்க்கும்போது ஓரளவுக்குச் சரியாக மொழிப்பெயர்த்திருந்தாலும், இக்காலத்து பொதுவான கல்வி அறிவின்படி பயன்படுத்தப்பட்ட விதமானது - அந்த வார்த்தையின் முக்கியமாக அர்த்தம் மறைந்தேவிட்டது என்று தெரிகிறது. (அதேபோல, “தீமை” என்ற வார்த்தையின் விரிவான அர்த்தமும் தொலைந்துவிட்டு, நிலையான ஒழுக்ககேடு, தவறு, தீமை, துன்மார்க்கம் என்று பொருள்படுத்துகிறது. ஆனால் விரும்பப்படாத எந்தக் காரியத்திற்கும் அல்லது நன்மை அல்லாதவைகளும் - தீமை என்று பொருள்படும்)

## 2. கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் மத்தியில் இந்தத் தவறுகள் சாதாரணமாக காணப்படுவது எப்படி?

**R2443 (col.2 P2): -**

இந்தக் கோணத்திலிருந்து அப்போஸ்தலரின் வாக்கியத்தை காணும் போது, அவருடையக் குற்றச்சாட்டு, இன்றைய கிறிஸ்தவ ஜனங்களுக்கு அபாய ஒலியாயிருக்கிறது. எத்தனை பேர் தங்களுடைய நாவினால் சக கிறிஸ்தவர்களைக் காயப்படுத்துகிறார்கள்? அதே நாவினால் தேவனுக்கு துதிகளையும் செலுத்துகிறார்கள். உடன்படிக்கை செய்த தேவனுடைய ஜனங்கள் வேறு எல்லா பாவங்களை விட இந்தத் தவறை அதிகதிகமாக செய்து கொண்டு வருகிறார்கள். எந்த விதமான உணர்வும் இல்லாமல் இதில் தவறுகிறார்கள். சுவாசிப்பது போல இயல்பாக செய்யப்படும் இந்தத் தவறுகள் அநேகரிடம் காணப்படுகிறது. அவதூறாக பேசுவதையும், தீமையாக பேசுவதையும் எதிர்த்து, வேத வசனங்களில் உள்ள கட்டளைகளை காண்பித்து பிரசங்கிக்கும் அநேகர் உண்டு. இந்தப் பாடங்களை நன்கு புரிந்திருக்கிறார்களோ இல்லையோ தெரியவில்லை. ஏனெனில் அவர்களின் சொந்த நடத்தை அல்லது ஒழுக்கத்தை மறந்தவர்களாக மற்றவர்களைக் குறித்து அவதூறு பேசிக் கொண்டிருக்கிறார்கள். அநேக வருடங்களாக புது சிந்தையின் கவனத்திற்கும் வராதளவுக்கு இந்தத் தீமை விழுந்துபோன மனித சிந்தையில் ஆழமாக பதிந்திருப்பதற்கு ஆதாரமாக நாம் இதை கூறுகிறோம். ஏனெனில், தேவனுடைய வார்த்தைகளின் படி நடந்து, உண்மையான தேவ ஜனங்களாக இருக்க விரும்புவோர், தங்களை திருத்திக்கொள்வார்கள், ஆனால் இந்தச் சிந்தையில்லாதவர் இந்தப் பாவத்தை கவனியாமல் விட்டுவிடுகிறார்கள்.

## 3. நாவின் வல்லமை என்ன?

யாக் 3:1-18

“என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக. நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்.பாருங்கள்,குதிரைகள்

நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம் போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம். கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிப்பட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். அப்படியே, நாவானது சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினாலே கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது. உங்களிலில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன். உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்திற்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு. பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதனத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.”

**F586-F588**

“தேவனை துதிப்பதும், மனுஷரை சபிப்பதும்”

முழுமையான விஷம் நிறைந்ததும், கட்டுக்கடங்காத அவயமாக யாக்கோபு நாவை குறிப்பிடுகிறார். மேலும், ஆச்சரியமல்ல அதை கட்டுப்படுத்துவது மிக கடினம் என்றும் வலியுறுத்துகிறார். அது நெருப்பைப் போல அனைத்தையும் கொளுத்திவிடும் என்றும் கூறுகிறார். (யாக் 3ம் அதிகாரம்) இந்த அனுபவங்களைப் பெறாதவர்கள் ஒருவரும் இல்லை. வாழ்க்கையில் ஏற்படும் அதிகமான பிரச்சனைகளுக்கு உண்மையில்லாத நாவு தான் காரணம், என்று கண்டுபிடிக்கப்பட்டது. துரிதமானதும், மூர்க்கமானதும், உக்கிரமானதுமான வார்த்தைகளினால் மில்லியன் கணக்கான பணமும், ஆயிரக்கணக்கான உயிர்களையும் சேதப்படுத்துகிற - யுத்தங்களை ஏற்படுத்தியது. மேலும் இப்படிப்பட்ட அநேக காரியங்கள், நீதி மன்றங்களில் தொடுக்கப்படும் வழக்குகளுக்குக் காரணமாக இருக்கிறது.மேலும், கடந்த 6000 வருடங்களாக மனித

இனத்தைப் பாதிப்புக்குள்ளாக்கிய முக்கிய காரணமும் இதுவே. “அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது.” என்று, நாவைப் பற்றி அப்போதலர் கூறுகிறார். அயல்வீட்டுக்காரனை கொலைச் செய்யமாலும், அவனிடம் திருடாமலும் இருக்கும் ஒரு நிலையை ஒரு கிறிஸ்தவன் அடைந்திருக்கலாம், ஆனால் அதே அயலானை நாவினால் கீறி, காயப்படுத்தி, அவருடைய நல்ல பெயரைக் கெடுத்துகொண்டிருக்கிறாரே, இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் சரியான வழியில் நடப்பவர்களாக இருந்தாலும், பரலோக நிலையை அடைவதற்கு வெகு தூரத்தில் இருக்கிறார்கள்.

நம்முடைய விழுந்துபோன நிலையில் இப்படிப்பட்ட துன்மார்கமான குணம் இருப்பதை நன்கு உணர்ந்தபோதிலும் நாவை அடக்குவது எவ்வளவு கடினமாக காரியம் என்று அனைவரும் அறிந்திருக்கிறோம். ஆகவே இந்த நாவை அடக்குவதற்கு சரியான வழியை யோசித்து அதில் கவனம் செலுத்தவேண்டும். அதாவது இருதயத்திலிருந்து இந்த மாற்றம் வரவேண்டும். “இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்” என்று ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகள் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நம்முடைய இருதயத்தில் உள்ள பிரச்சனைகள் அதிகமாக இருப்பதன் காரணமாகவே நம்முடைய நாவின் பிரச்சனைகள் அதிகமாக காணப்படுகிறது. ஆகவே, நம்முடைய இருதயத்தின் சிந்தைகளை சரிப்படுத்தினால் நம்முடைய நாவை அடக்குவது சற்று எளிதாக இருக்கும். தொடர்ந்து மற்றவர்களை அலட்சியமாகவும், இகழ்ந்தும் பேசக்கூடிய உதடுகள் தங்களுக்குள் இருக்கும் பெருமையயும், அகந்தையையும், கர்வத்தையும், அதிகமான தன்னம்பிக்கையயும் வெளிப்படுத்துகிறது. தொடர்ந்து மற்றவர்களை மறைமுகமாகவோ, நேரடியாகவோ தவறாக பேசும் உதடுகள் சுத்தமில்லாததும், தேவனுடைய அன்பின் ஆவியினால் நிரப்பப்படாமலும் இருக்கிறது. ஏனெனில் “அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது” அது அவனைக் குறித்து பொல்லாங்கை யூகிக்க அனுமதிக்காது. அனுகூலமற்ற குணங்களை யூகிப்பதைவிட அனுகூலமான குணங்களை யூகிக்கும், ஒவ்வொரு சூழ்நிலையையும், அவனுக்கு சாதகமாகவே (நியாயமானதை) யோசிக்கும்.

தன்னை குறித்து பேசி, தன்னை காயப்படுத்தி கொள்ளாத அளவுக்கு ஒவ்வொரு மனுஷனுக்குள்ளிருக்கும் சுய நலமாக அன்பு மிக உறுதியானது. அதேபோல் சுய நலமற்ற அன்பு பிறனையும் நேசிக்கும். அது அயலானை தன்னைப்போன்று நேசிப்பது, மாத்திரமல்ல, அயலான் அல்லது சகோதரனுக்கு கேடு விளைவிக்கும்படி பேசுவதைக் கூட வெறுக்கும், அல்லது அவனுடைய நடத்தையைக் குறித்துக்கூட பிரதிபலிக்க விருப்பபடாது. ஏனெனில், தனக்கு விரோதமாக, அப்படி ஒரு வழியை தெரிந்துகொள்ள விருப்பமில்லாமல் இருக்கும். அப்படியானால், இந்த விஷயத்தில் எந்த வழியிலிருந்து நாம் பார்த்தாலும், புதுசிருஷ்டியின் மிக முக்கியமான விஷயம் நம்முடைய இருதயங்களில் பரிபூரண அன்பை அடைவதுதான் என்று நாம் பார்க்கிறோம். இது சத்தியத்தின் ஊழியமாகிய திவ்விய ஊழியத்தில் ஒத்துழைக்குமாறும், அதிக வைராக்கியமும், முயற்சியும், தியானமும் உள்ளவர்களாக இருக்கவும், தேவனுக்கு நேராக நம்மை ஊக்குவிக்கும். மேலும் மனிதர்களிடத்திலும் நம்மை இதேபோல நியாயத்துடனும், அன்புடனும், நடக்கும்படியாக மாத்திரமல்ல, கூடுமானவரை, அனைவரைப் பற்றியும் கிருபையாய் நினைக்கவும், பேசவும் ஊக்குவிக்கும். இது பரிசுத்த ஆவியாகும். இதைக் கேட்டு நாம் ஜெபிக்க வேண்டும் என்று நம்முடைய மீட்பர் கற்றுக்கொடுத்தார். மேலும், இதைக் குறித்துதான் அவர் “பூலோகத்திலுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு

பூலோகத்திற்குரிய நல்ல ஈவுகளை கொடுப்பதை காட்டிலும், நம்முடைய பரலோகபிதா ஆவிக்குரிய நல்ல ஈவுகளை அதிகமாக கொடுப்பதற்கு மிக வாஞ்சையாயிருக்கிறார்" என்று அறிக்கையிட்டார். நம்முடைய சரீரம் முழுவதும், சிந்தையினாலும், வார்த்தையிலும், செயலிலும் அன்பு ஊற்றப்பட வேண்டும் என்பதற்காக, இந்தப் பரிசுத்த ஆவிக்காகவும், அன்பின் ஆவிக்காகவும் ஊக்கமாக ஜெபிக்க, வாஞ்சையோடு, முயற்சிக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறது. இப்படி செய்தால், நாம் பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவின் பிள்ளைகளாக இருப்போம். இப்படியாக, அவருடைய அன்புக்கும், அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற எல்லாவற்றிற்கும், நாம் பாத்திரமாக இருப்போம்.

**R2447 (col.2 P1)-**

நம்முடைய சரீர அவயவங்களில் நாவே செல்வாக்குமிக்கது. நம்முடைய சகல அவயவங்களும் இணைந்து செயல்பட்டாலும், நாவை மேற்கொள்ளவோ, அதை கட்டுப்படுத்தவோ முடியாது. ஆகவே தேவனுடைய பணியில் அதை கட்டுப்படுத்துவது மிக அவசியமாக இருக்கிறது. அழியக்கூடிய இந்தச் சரீரங்களினால் தேவனுடைய ஊழியத்தை செய்வது மிக முக்கியம். அன்பு, கனிவு, உதவி பற்றிய சில வார்த்தைகள் *ஶி* மனித வாழ்க்கையில் எவ்வளவு பெரிய மாற்றங்களை ஏற்படுத்துகிறது. மேலும் ஒவ்வொரு தேசங்கள் சீரப்டுத்துவதற்கு, எவ்வளவு காரியங்களை இந்த நாவு செய்யவேண்டும். அதே நேரத்தில் இந்த நாவு - தீமையான மற்றும் இரக்கமற்ற வார்த்தைகளை பேசி, அநீதியான செயல்களைச் செய்து, நற்கீர்த்தியுள்ள அனைத்தையும் அழித்து விடுகிறது, அல்லது அப்போஸ்தலர் கூறுவதுபோல "அது எல்லாவற்றையும் கொளுத்து விடுகிறது." இது தீவிர உணர்ச்சிகளை தூண்டிவிட்டு, சண்டைகளையும், பகைகளையும் பிறப்பிக்கும். "நாவு காட்டை கொளுத்திவிடும் நெருப்பு" **(Gehenna)** கெஹன்னா என்று சொல்லப்படும் இரண்டாம் மரணத்தை குறிக்கும் என்று யாக்கோபு சொல்லுவதில் ஆச்சரியமில்லை.

**R2156 (col.1 P5)**

இந்தப் பாடம் நாவுக்கு எதிராக மட்டும் அல்ல, இந்த நாவைக் கொண்டு மற்றவர்களுக்கு எதிராக செயல்படுத்தும் வல்லமைக்கு எதிராகவும் எச்சரிக்கப்படுகிறது. எல்லா அவயவங்களைக் காட்டிலும், நாவு அதிக ஆற்றலுள்ளது (நன்மை அல்லது தீமையை செய்ய) என்று அனுபவம் பெற்ற அனைவரும் ஒத்துக்கொள்வார்கள். மேலும், மற்ற அவயவங்களை காட்டிலும் நாவை அடக்குவது கடினம் என்று அனுபவங்களும் கற்றுத் தருகிறது. ஆகவே விழுந்து போன நிலையின் ஒவ்வொரு ஆசையையும், ஆர்வமிக்க காரியங்களையும், நிறைவேற்றிக் கொள்ள இந்தத் திறமையுள்ள ஊழியக்காரனை தீமையான காரியங்களுக்கு பயன்படுத்திக் கொள்கிறது. ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய கவனத்தையும், ஞானத்தையும் சரியாக பராமரித்து, தன்னுடைய சரீர அங்கங்களை கட்டுக்குள் வைத்து கிறிஸ்துவுக்குள் இருக்கும் புது சிந்தனைக்கு கீழ்ப்படுத்துவதில் கவனமாக இருக்கவேண்டும். இப்படிச் செய்தால் தனக்கும் மற்றவர்களுக்கும் எந்தவித பாதிப்புகளையும் ஏற்படுத்தாமல், நெருக்கமான பாதையில் செல்ல உதவி செய்யும். குதிரையின் வாயிலிருக்கும் ஒரு சிறிய கடிவாளம், அந்தக் குதிரையை முழுமையாக கட்டுப்படுத்தி நடத்துவது போலவும், ஒரு சிறிய சுக்கான் பெரிய கப்பலின் திசையை திரும்பி நடத்துவதுபோல, நம்முடைய நாவும், எழுதக்கூடிய பேனாவாக இருக்கிறது. நன்மைக்கானாலும், தீமைக்கானாலும் சரி, அநேக ஜனக்கூட்டங்களைத் திசைதிருப்பிவிடும். ஆகவே இந்த நாவு எவ்வளவு முக்கியமானது என்றும், அதை நாம் நன்மையை காட்டிலும் தீமைக்காக எந்த அளவுக்கு பயன்படுத்துகிறோம் என்றும், நம்முடைய விசுவாசத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக

எத்தனை முறை நம்முடைய விசுவாசம் குன்றிப்போய்விட்டது என்றும், நீதியையும், சமாதானத்தையும் பிறப்பிப்பதற்குப் பதிலாக எத்தனை முறை அதிருப்திகளையும், சண்டைகளையும் ஏற்படுத்தியது என்றும் நாம் கவனிக்கவேண்டும். உலகப்பிரகாரமான காரியங்கள் இவையனைத்தும், உண்மையாக இருக்கும்பட்சத்தில் தேவனுடைய ஜனங்கள் மத்தியில் இது இன்னும் அதிகமான பாதிப்புகளை ஏற்படுத்தலாம். நாளுக்கு நாள் ஷி சத்தியம், நீதி மற்றும் சமாதானத்திற்கு ஏதுவாகவோ அல்லது எதிராகவோ வழி நடத்தும் ஓர் உபாத்தியராக நாவு செயல்படுவதை, ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளவேண்டும்.

## 4. "ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறது" என்பதன் பொருள் என்ன?

யாக் 3:6 "நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!"

**R2603 –** நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறது.

"ஆகையால், (முக்கியம்) நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது."

ஒரு தீமையான நாவினால் ஏற்படும் மிக கொடிய பாதிப்புகளை உறுதியான அடையாள மொழியில் அப்போஸ்தலர் இங்கு குறிப்பிடுகிறார். "நரக (அடையாளம்) அக்கினியால் (அடையாளம்) கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது" ஒரு நாவு அக்கினியைப் போல கொளுத்தி விடுகிறது என்றால், தவறான காரியங்களைப் பிடிவாதமாக செய்யக்கூடிய மனோபாவம், சுய விருப்பம், சுயநலம், பகை, குரோதம் இவைகள் அனைத்தையும், அறிவையும் வாய்ப்பையும் பயன்படுத்தி கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து சீர்திருத்தாவிட்டால், இவர்கள் நித்தியமாக அழிக்கப்படுவதற்கு தகுதி பெறுவார்கள் - அதாவது இரண்டாம் மரணத்தை (கெஹன்னா - நரக அக்கினி) அடையக்கூடிய வகுப்பாராக இருப்பார்கள் என்று யாக்கோபு உபதேசிக்கிறார். நெருப்பைப் பற்றவைப்பது போல ஒருவர் சந்திக்கக்கூடிய அனைவரிடமும் ஒருவரைப் பற்றி தீயக் காரியங்களை நாவினால் கூறிக் கொண்டிருக்கையில், ஆயுள் சக்கரத்தை கொளுத்திவிடும். ஒரு பேச்சாளரைப் பற்றின, விரோதமான சில வார்த்தைகளை, அவருடைய சகல தீயக் காரியங்களையும் தீவிரமாக பரப்பிவிடும். அதுபோல மற்றவர்களுக்கும் ஏற்படும். இப்படியாக, இப்படிப்பட்ட காரியங்களைத் தொடர்ந்து செய்தால், இறுதியில் அவதூறு பேசக்கூடிய அந்த நபர் முற்றிலுமாக கெட்டுப்போய், இனி ஜீவிப்பதற்கான உரிமையை இழந்துவிடுவார்.

## 5. புறம் கூறுதலின் அழிவுக்குரிய பாதிப்புகள் என்ன? மேலும் விழுந்துபோன நிலை, இதற்காக சொல்லும் காரணங்களும், தப்பித்துக் கொள்வதற்கான சாக்குப்போக்குகள் என்னென்ன?

**R2443 (col.2 P3) through 2444 (col. 2 P2)**

(பாடத்தின் இறுதியில் பார்க்கவும்)

**R2445 (col.1 P3:6)**

உண்மைகளை கண்டடைவதில் என்னுடைய நேரங்களை நான் விரயம் செய்யமாட்டேன். வாழ்க்கை மிக குறுகியதாக இருப்பதால், நான் மற்றவர்களின் சொல்கேட்டு பேசாமல், எப்போதும், என்னுடைய அறிவிலிருந்து பேசத்தக்கதாக மிக கவனத்தோடு உண்மைகளை தேடிப்பிடிப்பதில் என்னுடைய சொந்த வேலைகளை செய்வதற்கு எனக்கு நேரமில்லாமல் போய்விடுமே - என்று ஒருவர் மறுத்து பேசலாம்.

இப்படியாக, வசனங்களின் அடிப்படையிலாக நீங்கள் பின்பற்றக்கூடிய பிரமாணம் என்னவெனில் - "ஒருவனையும் தூஷிக்கவேண்டாம்"

1. ஏனெனில், உங்களுக்கு உண்மைகளை அறிந்துகொள்ள நேரமில்லாததாலும், உங்களுக்கு முன் எல்லா உண்மைகளையும் வைக்கப்பட்டாலும், அவைகளை நடு நிலைமையோடு பார்க்கக்கூடிய பக்குவம் குறைவாக இருக்கக்கூடும்.

2. ஏனெனில், உங்களுக்குள் கிறிஸ்துவின் ஆவியும், அன்பும் அதிகதிகமாக தங்கியிருந்தால், உண்மைகளைக் கூறுவதற்கு சகலவிதமான ஆதாரங்கள் இருப்பினும், நீங்கள் அவைகளை எடுத்துரைக்க விரும்பமாட்டீர்கள். நீங்கள் அறிந்த உண்மைகள் தீங்கானதாக இருப்பதால் அவைகளை அறிவிக்க உங்களுக்கு வெறுப்பாக இருக்கலாம். அப்படியானால் அவதூறான புரளிகளை கட்டாயமாக கேட்க வேண்டும் என்று ஆவலோடிருக்கும் காதுகளையும், இந்தத் தீயக் காரியத்தை பற்றிய எந்த விதமான முன் அறிவும் இல்லாமல், தவறான செய்திகளை ருசிகரமாக பேசி, அந்த தீய செய்திகளை வேகமாக பரப்பும் நாவுகளின் நிலை என்னவாகும்? இவர்களுக்குள் கிறிஸ்துவின் ஆவி சிறிதளவும் இருக்க வாய்ப்பில்லை. சகோதர அன்பில் இல்லாதவர்களும், "பொன்னான கோட்பாடுகளை" இந்நாள் வரைக்கும் இவர்கள் கற்றதுமில்லை என்று பொதுவாக காணப்படுகிறது.

## 6. தீமையான எண்ணம் கொள்வது என்றால் என்ன? மேலும் தீமையான எண்ணம் கொள்வதற்கும் அல்லது அவதூறாக பேசுவதற்கும் என்ன சம்பந்தம்?

**R3594 (col.1 P1-5):**

தொட்டா சினுங்கி போல, மற்றவர்களால் எளிதில் துன்பப்படாதீர்கள். மற்றவர்களின் வார்த்தைகளையும், செயல்களையும் அன்புள்ளதாக ஏற்றுக்கொள்ளுங்கள். அற்பமான காரியங்களும், சிறிய தர்க்கங்களும், அன்பு என்னும் வஸ்திர மூடலினால் கவனியாமல் விட்டுவிடலாம். முக்கியமான குற்றங்கள் தற்செயலாகவோ, அறியாமையினாலோ நடந்து விட்டதாக நாம் அனுமானிக்கலாம். மேலும் இவைகளை விசாரிக்கும்போது, கோபத்தை கிளறிவிடாமல், கிருபை பொருந்திய வார்த்தைகளினால், கனிவோடு பேசவேண்டும். அநேக பிரச்சனைகளில், குற்றங்களை பொருள்படுத்தாமல் எளிதில் அவர்களை மன்னித்துவிடலாம்.

"தீமையான அனுமானங்கள்" - மற்றவர்களின் வார்த்தைகளுக்குள்ளும், கிரியைகளுக்குள்ளும் உள்ள நோக்கங்களைத் தீமையாக கற்பனை செய்யக்கூடாது, என்ற பிரமாணத்தின் கீழ் இந்தக் கட்டளை கொடுக்கப்படுகிறது. நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் தெய்வீகத்திற்கு - "தீமையான அனுமானங்கள்" முற்றிலும் எதிரான நிலையில் இருப்பதாக அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். மேலும் கறைப்பட்ட சிந்தனை,

மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகள், பொறாமைகள், சண்டைகளையும் இதற்கு ஒப்பாக பேசுகிறார். - 1 தீமோ 6:3-5, கலா 5:19-21

பாடத்தின் மறுபக்கத்தில், புதிதாக ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய ஜனங்கள், நித்தமும் வளர்ச்சி அடைய வேண்டிய, ஆவியின் கனிகளை பற்றிய கட்டளைகளை, பவுல் வரிசைப்படுத்துகிறார். இதில் வளர்ச்சி அடைவதே "வெற்றி பெற்றதற்கு" முக்கிய ஆதாரமாக நிரூபிக்கப்படுகிறது. "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்." (1 கொரி 13:4-7) என்று அவர் கூறுகிறார்.

இப்படிப்பட்ட தீமையான எண்ணங்கள் அடிக்கடி தூண்டப்பட்டு, தீமையான விருப்பங்கள் உருவாக வற்புறுத்தப்படும். ஆனால் அன்பின் ஆவியை பெற்றவர்கள் மிகவும் மிருதுவாக இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர்கள் பெற்ற அனுபவத்தினால், "தேவனுடைய பக்தியையும், பயத்தையும் உடனடியாக புரிந்துகொள்ளும் திறனும்" அதிகரித்து, அன்பில் வளர்ச்சி அடைந்த நிலையை பெறுவார்கள். மேலும், தீமையை பார்க்கும் போதே, அவர்கள் எச்சரிப்பாக இருப்பார்கள். தீமையான எண்ணங்கள் மறுக்கமுடியாதளவுக்கு உண்மையான ஆதாரங்களோடிருப்பினும் அவர்கள் எச்சரிக்கையாயிருப்பார்கள். அறியாமையில் உள்ள மனுஷனை பழிச்சொல்லி, அபாய நிலையை அடைந்து, சில இழப்புகளை சந்திப்பதற்கு பதிலாக, அற்பமான காரியங்களை விட்டுவிடுவது நலமாயிருக்கும். நாம் இந்தக் கட்டளைகளை பின்பற்றுவதினால், சந்திக்கும் இழப்புகளை, சரியாகவும், அதற்கு மேலாகவும், சரிகட்டுவதற்கு இப்படிப்பட்ட, ஆலோசனையைக் கொடுத்த தேவன், வல்லமையுள்ளவராக இருக்கிறார். அவரை உண்மையாக நேசிப்பவர்களுக்கு இப்படிப்பட்ட அனுபவங்கள் அனைத்தும் நன்மைக்கு ஏதுவாக நடக்க அவர் விருப்பமுள்ளவராக இருக்கிறார். அவருடைய முன்னேற்பாட்டில், கீழ்ப்படிதலை முதலில் வைத்திருக்கிறார். "நீங்கள் என்னுடைய சீஷர்களாக இருந்தால் என்னுடைய கட்டளைகளை கைக்கொள்ளுங்கள்"

"தீமையான அனுமானங்கள் அல்லது அவதூறு பேசி." தேவனுடைய கற்பனைகளை புறக்கணிக்கும், ஒருவர் தனக்கு தானே வலையை பின்னிக் கொண்டு எவ்வளவு சாதுரியமாக மற்ற காரியங்களில் நடந்துகொண்டாலும் தானே அதில் விழுந்துவிடுவார், ஏனெனில், சகோதரரைப் பொறுத்தவரையில் அவரின் இருதயம் சந்தேகங்களினாலும், அவ நம்பிக்கையினாலும் நிறைந்திருப்பதால் தேவனையும் சந்தேகிக்க மனது ஆயத்தப்படுகிறது. அதாவது கசப்பான ஆவி தேவ ஆவியோடும், அன்பின் ஆவியோடும் போராடுகிறது என்று பொருள்படுகிறது. ஏதோ ஒன்று மற்றொன்றை ஜெயிக்கும். தவறான ஆவி விரட்டப்படவேண்டும். இல்லாவிட்டால் புது சிருஷ்டியை மாசுபடுத்திவிட்டு, அழித்துவிடும். இதற்கு எதிராக புது சிருஷ்டி ஜெயித்துவிட்டால் - தீமையான எண்னங்கள் மேற்கொள்ளப்பட்டு, பிரச்சனைகள் மற்றும் விரோதிகளுக்கு எதிரான போரட்டம் மேற்கொள்ளப்படும். எண்ணங்கள் இருதயத்திலிருந்து தோன்றும், அவைகள் நம்மை நன்மையான வார்த்தைகளுக்கும் கிரியைகளுக்கும் அல்லது தீமையான வார்த்தைகளுக்கும் கிரியைகளுக்கும் வழி நடத்துகிறது.

## 7. “இரகசியமான குற்றம் என்றால் என்ன?” இவைகளின் இரண்டு வகைகள் என்ன?

சங் 19:12-14 “தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். என் கன்மலையும் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.”

**R2448 (col.1 p6)**

உண்மையான கிறிஸ்தவனின் இருதயத்தின் நோக்கங்களில் இருக்கும் முழுமையான அர்ப்பணிக்கப்பட்ட சிந்தையை தீர்க்கதரிசனமான ஜெபம் அடையாளப்படுத்தும்.

“அவருடைய நீதியை விசுவாசித்ததினால் கடந்த காலத்தில் தேவனுடைய நீடிய பொறுமையினால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதை உணர்ந்துபார்க்கையில், கிறிஸ்து இயேவுக்குள் இருந்த தேவனுடைய கிருபையினால் நம்முடைய பாவங்களை அவர் சுமந்ததை நாம் சரியான முறையில் உணர்ந்தால் நிச்சயமாக நாம் குற்றங்கள் புரிவதை தவிர்க்க முயற்சிப்போம். இரகசியமான இந்தக் குற்றங்கள் இரண்டு வகைப்படும். நமக்குள் இரகசியமாக செய்யப்படும் குற்றங்களாக இருக்கும். - சறுக்குதல்கள், அறியாமையில் அல்லது எந்த நோக்கமும் இல்லாமல் செய்யப்படும் குற்றங்கள். ஆனால், தேவனோடு நல்ல ஐக்கியப்பட ஒருவருடைய உண்மையான இருதயமும் அதன் விருப்பமும் நிச்சயமாக அறியாமையில் செய்யும் பாவங்களுக்காகவும் வருந்தி இப்படிப்பட்ட குற்றங்களை மேற்கொண்டு ஜெயிக்கவும், திவ்விய கிருபைக்காகவும், வேண்டி ஜெபிப்பார். இவைகளுக்கு அப்பாற்பட்ட மற்ற இரகசியமான குற்றங்களும் உண்டு. இவைகள் நமக்கும் தேவனுக்கும் மட்டுமே தெரிந்ததாக இருக்கிறது. நம்முடைய பாவங்களின் உண்மையான வடிவத்தை வெளிப்படுத்துவதற்கு முன் நம்முடைய சிந்தையில் இருக்கும் அபூரணங்களையும் அல்லது குற்றங்களையும் அகற்ற வேண்டும்.

## 8. தீமையான ஆலோசனை பாவமாக இருந்து, இரகசிய குற்றமாக மாறுவது எப்படி?

**R2248 (col.1 p7 through col.2 p5):**

எந்த விதமான பாவங்களும் சிந்தையில் இரகசியமாக தோன்றாமல் பகிரங்கமாக வெளிப்படுத்தப்படுவதில்லை என்று அனைத்து கிறிஸ்தவர்களின் நன்மையான வழியில் பெற்ற அனுபவங்களும், “பாவத்திற்கு எதிரான போரட்டமும் கற்பிக்கிறது. பெருமையின் ஆலோசனையின்படி ஒருவர் தன்னைதான் மிக மேன்மையாக உயர்த்திக்கொள்வது பாவமான ஒரு சிந்தையாகும். பேராசையினால் சட்டவிரோதமாக சம்பாதித்த சொத்தாகவும் இருக்கலாம், அல்லது மாம்சத்திற்குரிய விருப்பமாகவும் இருக்கலாம். இவைகளைப் பற்றி நம்முடைய சிந்தையில் வரும் ஆலோசனைகள் பாவம் அல்ல. இப்படிப்பட்ட காரியங்களுக்கு நாம் செவிகொடுப்போமா, கொடுக்கமாட்டோமா என்று நம்முடைய சிந்தையைத் தூண்டுகிறது. நாம் எடுக்கக்கூடிய முயற்சிகளில், நம்மை சுற்றியுள்ள காரியங்களில் நம்மை நாம் காத்து கொள்ளலாம். அநேகர் தீமையான சிந்தைனைக்கு இணங்கினாலும், அவ்வப்போது தீமையான கிரியைகளைச் செய்வதற்கு எல்லாவிதமான ஆலோசனையும் புறக்கணித்து விடுவார்கள். ஆனால் ஒருவேளை அந்தத்

தீமையான சிந்தனை ஊக்குவிக்கப்பட்டால் அது இரகசிய பாவமாக மாறிவிட்டு, காலப்போக்கில் பாவத்தின் செயல்பாடுகள் விருத்தி அடைந்து, பகிரங்கமாக வெளிப்படுத்தப்படும். இது தீமையான நடத்தையிலிருந்து மிக மோசமான நிலையை சென்றடையும். எடுத்துக்காட்டாக *ஸி* ஒருவருடைய மேன்மையையும், பேர் புகழையும், மகிமையையும் இரகசியமாக கெடுத்து, அதனால் அவர்களுக்கு வரும் அனைத்து நன்மைகளையும் நாம் பெறுவதற்கான தீமையான சுய நலமுள்ள ஆலோசனையை நாம் ஊக்குவித்தால், பகையும் விரோதங்களும், சச்சரவுகளும் நம்மை வெகு சீக்கிரத்தில் சூழ்ந்துகொள்ளும். அவரைப்பற்றி மற்றவர்களிடம் புறம் கூறுதல் மற்ற மாம்சத்தின் கிரியை அனைத்திற்கும் நாம் எளிதாக வழி நடத்தப்படுவோம். துவக்கங்கள் எப்போதும் சிறியவைகளாக இருக்கும். அதை மேற்கொள்வது எளிதாக இருக்கும். அதே நேரத்தில் அது வளர்ச்சி அடைந்துவிட்டால் அதை கட்டுப்படுத்துவது மிக கடினம். “இரகசியமான பாவங்களிலிருந்து என்னை சுத்திகரியும் அவைகளினால் பகிரங்கமான பாவங்களுக்கும் என்னை காத்தருளும்” என்று தீர்க்கதரிசனமாக ஜெபித்திருக்கிறார்கள்.

“அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.” என்று யாக்கோபு 1:14,15 வசனங்களை நாம் வாசிக்கிறோம். இங்கு அதே கருத்து வேறுவிதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சோதனையின் போது முதலில் சிந்தையில் வரும், அசுத்தமான அல்லது கனிவற்ற அல்லது அவிசுவாசமுள்ள ஆலோசனை தோன்றுகிறது. ஆனால் அது பாவம் அல்ல. அதே தீமையானவைகளை செய்வதற்கு அசைபோடும் போது, நம்முடைய சிந்தைகளை திசை திருப்பி வசீகரமான யோசனைகளால் ஈர்க்கப்பட்டு தீமைகளை செயலாற்ற முடிவு செய்கிறது. இந்தக் கட்டத்தில் நாம் எதை விரும்புகிறோம் என்பது உறுதிப்படுகிறது. (தீமையானதை பற்றியிருக்கிறோமா அல்லது புறக்கணித்து விடுகிறோமா?) ஒருவேளை நாம் தவறான முடிவுகளை எடுப்போமானால் அதைத் தொடர்ந்து இரகசியமான தவறுகள் துவங்குகிறது. சாதமான சூழ் நிலையில் மட்டுமே இதன் வளர்ச்சி அதிகமாக இருக்கும். இதன் விளைவாக பகிரங்கமான பாவங்கள் வெளிப்படும். எட்டுத்துக்காட்டாக பிறனை பற்றித் தவறான காரியத்தைக் கூறி அல்லது புறங்கூறி செயல்களை சொல்லும்போது தீமையான செயல்களை செய்யும் தீமையான ஆலோசனை ஜாக்கிரதையாக துவங்கி விடுகிறது. அதற்குப்பின் பகிரங்கமாக வெளிப்படும். அவர்களின் முழு வாழ்க்கையும் பாதிக்கப்படும் அளவுக்கு எப்போதும் அவர்கள் அபாய நிலையில் இருப்பார்கள். ஏனெனில் எந்த நேரத்திலும் அவர்கள் அத்துமீறி செயல்பட்டு மிகப் பெரிய குற்றங்களை மனமுவந்து, துணிகரமாக திட்டமிட்டு செயல்படுத்துவார்கள். அதன் சம்பளமாகிய மரணம், அதாவது இரண்டாம் மரணத்தை பெற்றுக்கொள்வதற்கு வழிவகுத்துவிடும்.

**R2568 (col.2p2):**

சோதனை என்றால் பாவம் இல்லை என்ற மற்றொரு பாடமும் நமக்குண்டு. இப்படியாக நம்முடைய ஆண்டவரும் சோதிக்கப்பட்டார். அவருக்குள் பாவம் இல்லாததினால் அவைகளை அவர் மேற்கொண்டார். அதேபோல அவருடைய சகோதரர்களும் சுத்த இருதயத்தோடும் சுத்த நோக்கத்தோடும் பிதாவின் சித்தத்தை தேடுபவர்கள், அவருடைய மாதிரியைப் பின்பற்ற வேண்டும். நமக்குள் சோதனைகளை அனுமதித்தால் மட்டுமே பாவம் நமக்குள் நுழையும். ஆனால் தவறான சிந்தை வந்தபின் தாமதிக்கும்போது, சோதனையின் வலிமையை அதிகரிக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மேலும் சாத்தான் சோதனை காரணாக இருந்து நம்மை தவறான

பாதையில் நடத்தி அதில் அகப்படுத்த மிகவும் சிரமப்பட்டு முயற்சிகள் எடுக்கிறான் என்பது குறிப்பிடக்கூடியதாக இருக்கிறது. ஆனால் தேவன் அப்படி அல்ல, "அவர் எந்த மனுஷனையும் சோதிப்பதில்லை" (யாக் 1:13) அவர் சாத்தானையும் அவனுடைய பிரதி நிதிகளையும் அவருடைய ஜனங்களை சூழ்ந்துகொண்டு சோதிக்க அனுமதித்தாலும் அந்தச்சோதனைகள் மூலமாக அவர்கள் தீமையை எதிர்த்து அதிகமான விசுவாசத்தை பெற கிறிஸ்துவின் குணலட்சணத்தில் வளர்ச்சி அடையவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நம்முடைய விசுவாசத்தின் பலம் அதிகரிப்பதற்காக இந்தச் சோதனைகள் அனுமதிக்கப்பட்டாலும் நம்முடைய திராணிக்கு மேல் நாம் சோதிக்கப்படுவதற்கு அவர் அனுமதிப்பதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அதிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள வழியையும் ஏற்படுத்துவேன் என்ற உறுதியையும் தேவன் நமக்கு தருகிறார் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

## 9. வெளிப்படையான பாவங்கள் என்றால் என்ன? இரகசியமான குற்றம் பகிரங்கமான பாவமாக மாறுவது எப்போது?

## 10. இந்த மிகுதியான துணிகரத்திற்கு வழி நடத்தும் பாவங்கள் என்ன?

**R2248 (col.2p5):**

ஒரே சிந்தை வெவ்வேறு கோணங்களில் வெளிப்படுத்தப்படுவதை காண்கிறோம். அசுத்தமான அல்லது பணிவற்ற அல்லது அவிசுவாசமுள்ள மனதில் ஏற்படும் முடிவுகள் நிமித்தம் முதலில் சோதனை வருவதைக் காணலாம். ஆனால் அதில் எந்த பாவமும் இல்லை. தவறும் இல்லை. ஆயினும், இந்த தீமையான முடிவுகளை நாம் அசை போடும் பொழுது பாவம் கருத்தரிக்கப்படுகிறது. அந்த சிந்தையை நாம் தவிர்க்காமல் வளர்ச்சிக்குள்ளாகும் போது இரகசியமான பாவங்களுக்கு வழிவகுக்கிறது. நாம் அதை ஊக்குவித்தால் அந்த பாவம் வளர்ச்சியடைந்து சாதகமான சூழ் நிலைகளில் வெளிப்படையான கிரியைகளை நடப்பிக்கும். எடுத்துக்காட்டாக அயலானுக்கு விரோதமாக சொல்லப்படும் தவறான காரியங்கள் அல்லது வதந்திகள் அல்லது தீய காரியங்கள் - இந்த தீமையான முடிவுகள் மிக ஜாக்கிரதையாக செயல்படுத்தப்படுகிறது. ஆனால் முடிவில் மனப்பூர்வமாக துணிந்து முன் திட்டமிட்டு செய்யக்கூடிய பாவங்களுக்கு நம்மை வழி வகுத்து அதன் கூலியாக இரண்டாம் மரணத்தை பெறச் செய்யும்.

"அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும் போது, மரணத்தைப் பிறப்பிக்கும்."

(யாக் 1:14,15) என்று யாக்கோபு குறிப்பிடுகிறார். இங்கு ஒரே சிந்தைவேறுவிதமாக சொல்லப்படுகிறது.

## 11. இப்படிப்பட்ட பாவங்களிலிருந்து நம்முடைய இருதயங்களை எவ்வாறு சுத்திகரித்து காத்துக்கொள்வது?

**R2517 (col.1p6 to end of article)**

இந்தப் பாடத்தின் முடிவில் இதற்கான விளக்கத்தை காணலாம்.

**R2249 (col.1 p1 through col.2p1):**

ஒவ்வொரு அறிவுள்ள கிறிஸ்தவர்களும் இதற்காக தொடர்ந்து ஊக்கத்தோடு மனதார ஜெபிக்கையில் இரகசியமான குற்றங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு பகிரங்கமான துணிகர பாவங்களை கட்டுப்படுத்த முடியும் எனத்தோன்றுகிறது. பாவங்களின் துவக்க நிலையை கண் காணித்து கொண்டு, தேவைப்படுகிற நேரங்களில் தொடர்ந்து கிருபாசனத்தண்டையில் சேர்ந்து தேவனுடைய உதவியோடு இருதயத்தை சுத்தமும், பரிசுத்தமான நிலையில் காத்துக் கொள்ளலாம். தங்களுடைய சிந்தையில் இரகசியமான பாவங்களை துவக்கத்திலேயே புறக்கணிப்பதை விட்டு விட்டு மிகவும் கஷ்டப்பட்டு, வெளிப்புறமான பாவங்களை தவிர்ப்பதின் மூலமாக தேவனோடு நெருக்கமாகவும், பரிசுத்தமாகவும் ஜீவிக்க விரும்பும் யாவரும், நியாயமான காரியத்தை மூடத்தனமாகவும், முயற்சிக்கிறவர்களாக இருக்கிறார்கள். நாம் அம்மை நோயை தடுப்பதற்கு வெளிப்புறமான சுகாதாரத்தில் கவனம் செலுத்திவிட்டு, அந்தக் கிருமி நம்முடைய சரீரத்திற்குள் அனுமதித்தால் என்ன பிரயோஜனம்? வெளியரங்கமான பாவங்கள் முதலில் கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் போல சிந்தையில் நுழைந்துவிடுகிறது. தடுப்பூசிகளாகிய சத்தியத்தையும், அதன் ஆவியையும் அனுப்ப அந்தப் பாவ சிந்தைகள் வளர்ச்சி அடைந்த நம்முடைய நடத்தையில் அந்தத் தீய குணங்களும் செயல்பாடுகளும் பயங்கரமாக வெளிப்படுவதற்கு முன், அவைகளை அழிக்கவேண்டும்.

எடுத்துக்காட்டாக *ஸி* பெருமை மற்றும் சுயமரியாதை என்ற கிருமிகள் நம்முடைய சிந்தையில் நுழையும்போது, பெருமை - மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியையாக இருக்கிறது என்றும், அது கிறிஸ்துவின் ஆவிக்கு விரோதமானது என்ற தடுப்பூசியை நாம் உடனடியாக போடக்கூடியவர்களாக இருக்கிறோம். அந்தக் கிருமியை அழிக்கக்கூடிய தடுப்பூசியில் போடப்படும் சரியான அளவு மருந்தை நாம் இங்கு காணலாம். "தன்னை உயர்த்திக் கொள்கிறவன் தாழ்த்தப்படுவான், தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்' மற்றும் அழிவுக்கு முன்னாது அகந்தை."

நம்முடைய சிந்தையில் பகை என்னும் கிருமி நுழந்துவிட்டால், பகை மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியையாகவும் நம்முடைய உடன்படிக்கையில் நமக்குரியது என்று சொல்லக்கூடிய கிறிஸ்து இயேசுவின் ஆவிக்கு எதிராகவும் இதுவே பகை என்னும் கிருமிக்கு, எதிராக பயன்படுத்தக்கூடிய தடுப்பூசியாகும். மேலும் பகையானது, குரோதம், விரோதம், சண்டை, சச்சரவு போன்ற தீமையான எண்ணங்களோடு இணைந்து செல்லும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. புதிய உடன்படிக்கையை மற்றும் நம்முடைய ஆண்டவரின் விளக்கவுரையின்படி இப்படிப்பட்ட குணங்கள் கொலைக்கு சமமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. 1 யோவா 3:15, மத் 5:21,22.

நம்முடைய சிந்தையில் பேராசை என்ற கிருமி நுழைந்துவிட்டு, அவைகளுக்கு இசைவாக அநீதியான முறைகளை பயன்படுத்தினால் - "ஒருவன் உலகத்தையே ஆதாயப்படுத்திக் கொண்டு தன்னுடைய ஜீவனை நஷ்டப்படுத்திக்கொண்டால் அதனால் என்ன பயனுண்டு" மற்றும் "பண ஆசையே எல்லா தீமைக்கும் வேராக இருக்கிறது . அநேக வேதனை தங்களை உருவ குத்திக்கொள்கிறார்கள்" என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளாகிய தடுப்பூசியை நாம் உடனே போட்டுக்கொள்வோம்.

இந்தப் பாடத்திற்கு நாம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு பாவத்தின் துவக்கமாக சிந்தையில் நுழையக் கூடிய இரகசிய குற்றங்களைப்

பற்றி, வசனங்கள் சொல்லக்கூடிய சத்தியங்களை நம்முடைய சொந்த அனுபவங்கள் மூலமாக நாம் அறிவுறுத்தப்படுகிறோம். "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்திலிருந்து ஜீவஊற்று புறப்படும்." (நீதி 4:23) என்ற வசனத்தை நாம் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும்.

நம்முடைய சிந்தையில் சோதனைகள் வரும்படியாக தேவன் நம்மை அழைத்திருக்கிறார் என்பதில் நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை அல்லது சோதனைகள் வரும்போது நாம் ஜெபிக்கக்கூடாது என்று சொல்லப்படவும் இல்லை. ஏனெனில் இப்படிப்பட்ட சோதனைகளும், பிரச்சனைகளுமின்றி நம்முடைய தரப்பில் பாவங்களை மேற்கொள்ளுதலோ, சாத்தானை ஜெயிப்பதிலோ எந்தவிதமான வெற்றியும் பெறமுடியாது. ஆனால் இந்த ஒரு காரணத்திற்காக நாம் கிறிஸ்துவின் பள்ளியில் பயிற்சி பெற்று கொண்டிருக்கிறோம் என்று நாம் நன்கு அறிந்திருக்கிறோம். ஆகையால் வரும் அனைத்து சோதனைகளும் நம்மை அணுகாதபடி தேவன் நமக்கு பாதுகாப்பு கவசம் போடவில்லை. அதற்குப் பதிலாக நம்முடைய போதகரிடமிருந்து சோதனைக்காரனை சந்திக்க கற்றுக்கொள்ளலாம். மேலும் நம்முடைய ஆண்டவரின் கிருபையாலும், உதவியாலும் பாவத்திற்கு எதிரான போராட்டங்களில் நாம் வெற்றி பெறலாம். இந்தப் பிரச்சனைகளில் நம்முடைய வெற்றியின் அளவு, நாம் பெற்ற விசுவாசம் மற்றும் ஆண்டவரின் மேல் உள்ள நம்பிக்கையைச் சார்ந்துள்ளது. அவருடைய ஞானத்தின் மேல் உள்ள நம்பிக்கையை உணர்ந்தால், அவருடைய கட்டளைகளை முழுமையாக கடைபிடித்து நம்முடைய இருதயத்தை முழு எச்சரிப்போடு காத்துக் கொள்வோம். அவருக்கு முழுமையாக கீழ்ப்படிவதின் மூலம் தேவனுடைய ஞானத்தின் மேல் உள்ள நம்பிக்கை மற்றும் நமக்கு தேவைப்படும் நேரங்களில் அவருடைய உதவியைப் பெறலாம். ஆகவே "உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாக இருக்கிறது" என்று எழுதியிருக்கிறது. அதாவது கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசத்தை செயலாற்றுவதன் மூலம் ஸ்ரீ "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே." (ரோம 8:37)

## 12. ஆண்டவர் நம்மை எவ்வாறு நியாயந்தீர்க்கிறார்?

மத் 12:34-37 "விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய், அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்."

**R1937 (col.p2,3):**

நாம் சபை என்றும், இக்காலத்தில் மாம்சத்தில் இருக்கும் நம்மை, இரண்டாம் வருகையில் வந்திருக்கும் மணவாளன் பார்வையிட்டு கொண்டிருக்கிறார் என்பதையும் (மத் 22:11) உணர்ந்திருக்கிறோம். ஆகவே இந்த நியாயத்தீர்ப்பும்,தெரிந்து கொள்ளுதலும் நடக்கக்கூடிய கோட்பாடுகளை நாம் மிக துல்லியமாக கவனிக்கவேண்டும்.

நம்முடைய இருதயம் மற்றும் வாயும் விசேஷித்த கவனிப்பின் கீழ் அல்லது ஆழ்ந்த சோதனையின் கீழ் வைக்கப்பட்டிருப்பதை நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள் குறிப்பிடுகிறது. இருதயத்தின் சோதனை தனிப்பட்ட குணங்களையும், வாயின் வார்த்தைகள் அந்த குணங்களின் முன்னுரையை குறிப்பிடப்பட்டுள்ளது *ஶி* "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும். வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து." (நீதி 4:23,24) சரியான வார்த்தைகள் வெளிப்படுத்த சரியான மன நிலை தேவைப்படுகிறது என்ற காரியம் தெளிவாக குறிப்பிடப்படுகிறது. ஏனெனில், ஒவ்வொரு மனுஷனின் அனுபவத்தின்படியும் இருதயத்தின் நிறைவால் வாய்பேசும்" என்று எழுதியிருக்கிறது. ஆகவே நம்முடைய ஆண்டவரின் எதிர்பார்ப்புக்கு தக்கதாக, நம்முடைய வார்த்தைகள் நியாயத்தீர்ப்பின் கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். தேன் தடவப்பட்ட வார்த்தைகள் வஞ்சகத்திற்கு போடப்படும் முகமூடியாக இருக்கிறது என்றும் சுயநலமான காரியங்களுக்கு தேவையான மாற்றங்கள் ஏற்படும்போது அந்த முகமூடிகள் வெகு சீக்கிரத்தில் கழன்றுவிடும் என்றும் நம்முடைய ஆண்டவர் குறிப்பிடுகிறார். நம்முடைய முழு வாழ்க்கையிலும் செயல்படுத்தப்படும் நடத்தை நம்முடைய இருதயத்தின் உண்மையான காரியங்களின் முன்னுரையாக இருக்கிறது.

## 13. நாம் ஏதாகிலும் கெடுதல் உண்டாக்கும் வார்த்தைகளுக்கு நித்தமும் தேவனிடத்தில் ஏன் கணக்குக் கொடுக்கவேண்டும்?

**R1938 (col.1 p4 through col.2p2):**

நாம் அபூரணமாக இருப்பதால் வார்த்தையிலும், கிரியைகளிலும் பூரணமாக இருக்க இயலாது. நாம் எவ்வளவு கடுமையாக முயற்சித்தாலும் நம்முடைய திறமையான வார்த்தைகளும் விசுவாசமான முயற்சிகள் கண்காணிப்போடும் காரியங்களை நடத்தினாலும், வார்த்தையிலும், செயலிலும் குற்றங்கள் ஏற்படுகிறது. ஆனால் கேடுண்டாக்கக்கூடிய ஒவ்வொரு வார்த்தைக்கு நம்முடைய நியாயத்தீர்ப்பின் நாளில் கணக்குக் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனின் அன்றாடக் கடமையின்படி நம்முடைய அன்றாட வாழ்க்கையை ஆழ்ந்து சோதிக்கையில் தேவனை கனவீனப்படுத்திய வார்த்தைகளை நாம் நினைவில் கொண்டவர்களாக "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." (1 யோவா 2:1) நமக்காக பரிந்துபேசுபவர் மூலமாக கிருபாசனத்திற்குச் சென்று நம்முடைய தப்பிதங்களை உணர்ந்ததை விவரித்து, தேவனுடைய நாமத்தையும், அவருடைய பரிசுத்தமான செயல்களையும் கனப்படுத்துவதற்குத் தவறியதால் அடையும் மனம் வருந்துதலை அவரிடம் அறிக்கையிட்டு அந்த பாவங்களை அவருடைய கிருபையின் மூலமாக கிறிஸ்துவின் வழியாகவும் மனத்தாழ்மையோடு, கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தில் நம்முடைய நம்பிக்கையும், விசுவாசத்தையும் நிலைப்படுத்திக்கொண்டு பாவமன்னிப்பை கேட்கவேண்டும்.

இப்படியாக நம்முடைய ஒவ்வொரு தகாத வார்த்தைகளுக்கும் கணக்கு கொடுக்க வேண்டும். மேலும் நம்முடைய மனம் வருந்துதலை வார்த்தைகளினாலும் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் மூலம் பெற்ற நன்மைகளையும் மன்னிப்பை பெற்றுக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் தேவனை மகிமைப்படுத்த தவறின தகாத வார்த்தைகள் நமக்கு எதிராக நம்மேல் குற்றம் சாட்டும், அதற்கேற்ற பலனை நாம்

கட்டாயமாக அனுபவிக்கவேண்டியதாகும். இதில் முதலில் நம்மை நாம் படுகாயப்படுத்திக்கொண்டு, ஒவ்வொரு வார்த்தைகளும் நம்முடைய தேவையற்ற குணங்களை உறுதிப்படுத்திக் கொண்டு, அநீதியின் வழியில் நம்மை சாய்த்துவிடும். அடுத்து மற்றவர்களுக்கு இது ஒரு மோசமான எடுத்துக்காட்டாகும், அவர்களுக்குள்ளும் இந்தத் தீமையான காரியங்கள் நுழையத்துவங்கும். "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்." (நீதி 15:1) இப்படியாக, ஞானமற்ற அல்லது இரக்கமற்ற வார்த்தைகளை நாம் கேட்பதன் விளைவாக, நமக்குள் அநேக கஷ்டங்களை உருவாக்கி, சுய கட்டுப்பாடு, மற்றவர்களை பற்றின இரக்கம் பரிவு உணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய நீதியுள்ள பாடங்களை நாம் கற்றுக்கொள்வோம். பொதுவாக எல்லா காரியங்களிலும் தங்களுடைய சொந்த தவறுகளினால் ஏற்படும் சோதனைகளை ஆண்டவரை (அல்லது சாத்தான்) குற்றம் சாட்டுவது வழக்கமாக இருக்கிறது. மேலும் உபத்திரவகளின் காரணத்தை கண்டுபிடிக்க தவறினவர்கள் (தங்களுக்குள்ளே) தேவனுடைய வார்த்தைகளை கீழ்ப்படிவதன் மூலமும், வைராக்கியமான சுய ஒழுக்கத்தின் வழியாகவும் தாங்களே அகற்ற வேண்டிய காரியங்களை அந்தப் பிரச்சனையை அற்புதமாகத் தீர்க்கவேண்டும் என்று வீணாக ஜெபிக்கிறார்கள். "நாம் நம்மையே நியாயந்தீர்த்தால் நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம். ஆகையால் என் சகோதரரே, நீங்கள் போஜனம் பண்ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்." (1 கொரி 11:31,32) மேலும் வரும் அனைத்து கஷ்டங்களுக்கும் தேவனாலோ அல்லது பிசாசினாலோ நேரடியாக ஏற்படுவதில்லை என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். "அவனவன் தன் தன் இச்சையினால் இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான் ." பொதுவாக எந்தப் பழியையும் மற்றவர்கள் மேல் சுமத்துவதே பழக்கமாயிற்று. நாம் பொறுமையை இழந்து, வெறுப்பான வார்த்தைகளை பேசி, தவறுகள் செய்வதற்கு வெகு எளிதாக மற்றவர்களை காரணம் காட்டிவிடுகிறோம். "என்னை போல நீதியான மனதை அனைவரும் பெற்றிருந்தால் (குடும்பம், சபை, சமுதாயம்.) வானத்திலிருக்கும் பரலோகம் இந்த பூமியின் மேல் வந்தது போல் தோன்றுமே ." என்ற சிந்தையில் எத்தனை பேர் தங்களையே வஞ்சித்துக்கொண்டு தங்களை ஊக்குவித்து கொள்கிறார்களோ என்று தெரியவில்லை. அருமையானவர்களே நம்மை நாம் சோதித்துப் பார்க்கலாம். தாழ்மையாக இருக்கலாம். நம்மை நியாயந்தீர்க்கும் நம்முடைய இருதயத்தில் சிந்திக்கக்கூடிய சுய திருப்தியில் மற்றும் சுய புகழ்ச்சிக்குரிய வார்த்தைகளை குறைத்துக்கொள்வோம். "உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே. ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள். மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள். விடுதலை பண்ணுங்கள், அப்பொழுது விடுதலை பண்ணப்படுவீர்கள். கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக்

குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்." (லூக் 6:33-38) நீடிய பொறுமையோடிருந்து, நன்மைக்காக துன்பப்படுவதையே தேவனுக்கு சுகந்த வாசனையான பலியாக அவர் அங்கிகரித்துக் கொள்வார். "ஏனெனில், தேவன் மேல் பற்றுதலாயிருக்கிற மனசாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும் போது பொறுமையோடே சகித்தால், அதினாலே என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்." (1 பேது 2:19-21) ஆகவே அன்பார்ந்தவர்களே நாம் நீதிக்காக மட்டுமே துன்பப்பட்டு, அதற்காக நம்முடைய தேவனையோ, அயலகத்தாரையோ, பழி சொல்லாமல், அதன் விளைவாக நாம் பெற்ற அனுபவங்களும் அதனால் நாம் பெறும் நல்ல குணங்களையும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

"நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரண புருஷனும், தன் சரீர முழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக் கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்." (யாக் 3:2) ஆனால் அப்படிப்பட்ட ஒரு மனுஷன் ஒருவரும் இல்லை. நமக்காக பரிந்து பேசுகிறவரும், நம்முடைய இரட்சகரின் நன்மைகளுக்காக நாம் அனைவரும் நித்தமும் தொடர்ந்து மன்றாட வேண்டும். இதை செய்து கொண்டு நம்முடைய அனைத்து நினைவுகளையும் கிறிஸ்துவின் சிந்தைக்கு அடிமைப்படுத்தினால், தேவபக்தியோடு பரிபூரணமான பரிசுத்தத்தில் வளர்ச்சி அடைய வேண்டும்.

இந்த உண்மையை காணும் போது, தேவ ஜனங்கள் யாவரும் இவைகளை நன்கு உணர்ந்து கொள்ள முயற்சிப்பார்கள் என்று நாம் நம்புகிறோம். அதாவது நாம் இப்போது நியாயத்தீர்ப்புக்கு முன் நின்று கொண்டிருக்கிறோம். இதைக் குறித்த பேதுருவின் வார்த்தைகளுக்கு செவி சாய்ப்போம். "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" (2பேது 3:11) தேவ சாயலை அணிவோர் எந்த விதமான துன்பம் கொடுக்கக்கூடிய வீண் பேச்சுக்களையும், அசுத்தமான அல்லது பரிசுத்தமில்லாத சம்பாஷணைகளையும், கலகத்திற்குரிய வார்த்தைகளையும் பேசமாட்டார்கள். கிறிஸ்துவின் நாமத்தில் உண்மையாகவும், உத்தமமாக இருப்பவர்கள் இவைகளை தூரமாக களைய வேண்டும். நாம் நித்தமும் தேவனிடத்தில் நம்முடைய கணக்கை முடிக்கும் போது, நாம் உச்சரிக்கும் தவறான எந்த வார்த்தைகளுக்கு மனம் வருந்தி, மன்னிப்பை பெறாமல் விட்டுவிடப்பட்டு, நம்முடைய நியாயத் தீர்ப்புக்கு முன் நின்று விடக்கூடாது. "நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தையே சம்பாஷணையாக பேசுங்கள்." நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரண புருஷனும், தன் சரீர முழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக் கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்." "கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்." (பிலி 1:27, 4:8)

ஆகவே நம்முடைய இருதயத்தில் நல்ல பொக்கிஷங்கள் இருந்தால் மட்டுமே சத்தியத்தின் வார்த்தைகளை பேச முடியும். மேலும் நாம் மகிமைப்பட பரிசுத்த நடக்கைகளையும், சம்பாஷணைகளையும் நாம் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டியதாக இருக்கிறது. இதனிமித்தம் விழுந்து போன நிலையில் இருக்கும் நாம் தீமையான எண்ணங்களையும் கிரியைகளையும் விட்டு விலக முடியும் . “கடைசியாக சகோதரரே, உண்மையுள்ள-வைகளெவைகளோ , ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைக-ளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.” (பிலி 1:27, 4:8)

## 14. நம்முடைய இருதயங்களின் முன்னுரையான வார்த்தைகள் எவ்வாறு இருக்கிறது?

லூக்கா 6:45 “நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்.”

**R1922 (col.1P4) :**

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பொதுவாக, பேசப்படும் வார்த்தைகள் மற்றும் கிரியைகள் நம்முடைய இருதயத்தின் முன்னுரையாக இருக்கிறது என்று நம்முடைய ஆண்டவர் குறிப்பிடுகிறார். “நல்ல மரம் கெட்ட கனிகளை கொடுக்காது. அதுபோல கெட்ட மரம் என்றுமே நல்ல கனிகளை கொடுக்காது. ஒவ்வொரு மரமும் அதன் கனிகளினால் அறியப்படும் ” அதுபோல “நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்.” மத் 12:35

**R1938 (col.1p1)**

நம்முடைய ஆண்டவர் சொன்ன வார்த்தைகளை நாம் மனதில் வைத்துக்கொண்டு, ஒவ்வொரு பயனற்ற வார்த்தைகளுக்கும் நாம் பதில் சொல்லவேண்டும். இக்காலத்து சபையின் நியாயத்தீர்ப்பின் நாட்களில் நம்முடைய வார்த்தைகள் அதிக முக்கியத்துவம் பெறுவதை நாம் காணலாம். நம்முடைய எல்லா வார்த்தைகளும் இருதயத்தின் முன்னுரையாக தேவன் ஏற்றுக்கொள்கிறார். நம்முடைய வார்த்தைகள் கலக-மூட்டுவதாகவும், மரியாதை இல்லாததும், இரக்கமற்றதாகவும், அவிசுவாசமுள்ளதாகவும், அசுத்தமாக இருந்தாலும் - “இருதயத்தின் நிறைவு வாய் பேசும்” என்ற கோட்பாட்டின் கீழ் நியாயந்தீர்க்கப்படுகிறது. ஆகவே நம்முடைய இருதயத்தின் நிலையை எடுத்துக்காட்டும். “அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்” எபி 4:13 என்று நம்முடைய ஆண்டவரின் வார்த்தை காலத்திற்கேற்ற எச்சரிப்பாக இருக்கிறது. “தேவன் பரலோகத்தில் இருக்கிறார். நீங்களோ பூமியில் இருக்கிறீர்கள். ஆகையால் உங்கள் வார்த்தை சுருக்கமாக இருப்பதாக” ஆகவே உங்கள் வார்த்தைகள் தேவனுக்கு முன்பாக நிற்கபோகிறதினாலே சிந்தித்ததாகவும், ஞானமுள்ளதாகவும் இருப்பதாக, தேவையற்ற புறங்கூறுதல், கோபம், வதந்திகளைப் பேசவேண்டாம்.

## 15. இருதயத்தின் பரிசுத்தம் என்பதன் முக்கியத்துவம் என்ன?

**R3114 (col.2p1):**

"பரிசுத்தமான இருதயம்" - பரிசுத்தமான சித்தம், நோக்கம், சிந்தை - இவை அனைத்தும் நீதியை நோக்கி செல்லும் என்பதை முக்கியத்துவப்படுத்துகிறது. திடீர் என்று ஒரு கடுமையான சோதனை வரும்போது மாம்சத்தின் பலவீனத்தினாலே வலது பக்கம் சாய்வதா, இடது பக்கம் சாய்வதா என்று யோசிக்கும் போது, சுத்தமான இருதயம், நீதியின் பக்கம் நம்மை எளிதில் வழி நடத்தும். சுத்தமான இருதயம் நீதியையும் சத்தியத்தையும் நேசிக்கும், அநீதியை வெறுக்கும். அசுத்தமானவைகளை, விட்டு விலகும், பரிசுத்தமானவைகளை ஏற்றுக்கொள்ளும். ஒரு மனுஷனுடைய ஆடைகளில், மொழியில் மற்றும் பழக்க வழக்கங்களில் பரிசுத்தத்தை விரும்புவார்கள். இப்படிப்பட்டவர்களின் ஐக்கியத்தை மட்டுமே அந்த இருதயம் விரும்பும். "ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கத்தை கெடுக்கும் என்று அறிந்து மற்ற எல்லாவற்றையும் புறக்கணிக்கும்.

**R3604 (col.p1):**

"நம்மை நாம் நியாயந்தீர்த்துக் கொண்டால், நாம் நியாயந்தீர்க்கப்படோம்." என்று நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை நினைவில் கொண்டவர்களாக நம்முடைய இருதயத்தின் சிந்தையை நாம் சுய பரிசோதனை செய்து பார்க்கலாம். நாம் நம்மை நியாயந்தீர்க்காவிடில், நாம் அவருடையவர்களாக இருப்பதாலும், நாம் நம்மை அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததினாலும், நாம் தேவனால் தூய்மைப்படுத்தப்படுவோம். கள்ளம் கபடம் இல்லாத இருதயத்தில் பரிசுத்தமான வார்த்தைகள் பிறக்கும். அது உண்மையும், சுத்தமும் நல்லொழுக்கம் உள்ளதாகவும் இருக்கிறது. இந்த வார்த்தையின்படி சபையிலோ, வெளியிலோ பரிசுத்தமானவர்கள் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில்லை. ஆனால், அதை புரிந்து கொள்ளுவதற்கு நம்முடைய ஆண்டவர் கொடுத்த திறவு கோலாகிய "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" *ஶி* என்ற வசனத்தை கண்டு நாம் மகிழ்ச்சி அடையலாம். ஆகவே இந்த அழியக்கூடிய அபூரணமான நிலையில் இருக்கும் வரை, பரிபூரணமான பரிசுத்தத்தில் நிலைத்திருப்பது இயலாத காரியம். ஆனால் நமக்கு இது சாத்தியமானது. பரிசுத்தமான நோக்கத்துடன், பரிசுத்தமாக இருக்கும் இலக்கோடிருக்கும் நாம் பரிசுத்தமான இருதயத்தை பெற முடியும்.

**R2250 (col.2p4):**

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனை தரிசிப்பார்கள்" பரிசுத்தமுள்ள இருதயம், சித்தம், நோக்கம் அதாவது ஒவ்வொரு வார்த்தையிலும் கிரியையிலும் முழுமையாக பரிசுத்தமாக இருப்பதற்கும்" அதற்கு விரோதமாக இருப்பதற்குரிய வித்தியாசத்தை நாம் சரியாக அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், இக்காலத்து சாதகமற்ற சூழ் நிலையில் இந்த அழியக்கூடிய சரீரங்களில் இருக்கும் வரையில் நாம் அசுத்தமாக இருப்பதால், நிச்சயமாக தேவனை தரிசிக்க முடியாது. ஆகவே இங்கு கொடுக்கப்பட்ட நிலைமை நம்முடைய இருதயத்திற்கு மட்டும் அல்ல நம்முடைய நடத்தைக்கும் பொருந்தும். "பரலோகத்திலிருக்கும் உங்கள் பிதா பூரண சற்குணராக இருப்பதுபோல நீங்களும் பூரண சற்குணராக இருங்கள்" மற்றவர்களோடு அல்ல, இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு நம்மை நாம் தொடர்ந்து அளவிட்டு பார்க்கவேண்டும். ஆகவே இந்த நிலைக்கு நம்முடைய இருதயத்தின் சிந்தைகளையும், நடத்தையையும் நாம் உயர்த்திக்கொள்ள வேண்டும். ஆனால் நம்முடைய சித்தங்கள் (இருதயம்) மட்டும் சுத்திகரிக்கப்பட்டு, மறுரூபமாக்கப்பட்டு, தூய்மைப்படும் விலைமதிப்பற்ற பொக்கிஷத்தை

பெற்றிருக்கும் நம்முடைய இக்காலத்து அபூரணமான இந்த மண்பாண்டம் உயிர்த்தெழுதல் வரைக்கும் எந்த மாற்றமும் பெறாது. அதற்குப் பிறகு நாம் பரிபூரணமாக தெய்வீக சுபாவத்தைப் பெறுவோம். அது வரையில் இப்போது குறையுள்ள நிலையில் இருக்கும் நாம் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதத்தை பெறமுடியாது.

## 16. சுத்தமான இருதயத்தின் முக்கியத்துவம் என்ன?

1 சாமு 16:7 "கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்."

**R3305 (col.2p2-5):**

நம்முடைய வார்த்தைகள் மற்றும் நடத்தையிலும் ஒவ்வொரு சிந்தையும் பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என்ற கோட்பாட்டில் நம்முடைய வசனப்பகுதியின் முக்கியத்துவம் அடங்கியுள்ளது. ஆகவே நம்முடைய சிந்தைகளை கவனமாக கண்காணிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். இருதயத்தின் நிறைவால் வாய் பேசும் என்று நம்முடைய இரட்சகரும் இதே காரியத்தை வேறு கோணத்தில் வெளிப்படுத்துகிறார்.

நாம் சரியான இருதயத்தை பெற்றிருப்பது மிக அவசியம். கசப்பான நீரூற்று தித்திப்பான தண்ணீரை கொடுக்காதது போல, பாவமுள்ள கசப்பு நிறைந்த இருதயத்தில் ஆசீர்வாதமான வார்த்தைகள் வரமுடியாது. சில வேளைகளில் தேவ கிருபை கசப்பு நிறைந்த இருதயத்திலிருந்து ஆசீர்வாதமான வார்த்தைகள் வரமுடியாது. சில வேளைகளில் தேவ கிருபை பெற்ற ஜனங்களிடமிருந்து துன்மார்க்கமான ஜனங்கள் சிலவற்றை கற்றுக்கொள்வதுண்டு. ஆனால் அதை அவர்கள் ஆழமாக கொண்டிராததினால், அவர்களுக்குள் இருக்கும் கசப்புகள் வெகு சீக்கிரத்தில் வெளிப்படும்.

இக்காலத்தில், கசப்பான நீரூற்றுகள், தித்திப்பான தண்ணீரை கொடுக்கும் என்று கர்த்தர் எதிர்பார்ப்பதில்லை. உடன்படிக்கை செய்த விசுவாசிகளின் இருதயம் மாற்றம் அடைய வேண்டும் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. ஆகவே அவர்களை "பரிசுத்தவான்கள்", தேவனுடைய புத்திரர்" கிறிஸ்துவுக்குள் சுத்திகரிக்கப்பட்டவர்கள், "ஆண்டவரின் சகோதரர்கள்" என்று ஒவ்வொரு நிருபமும் அவர்களை அழைக்கிறது. இவர்கள் தேவனுக்காக புதிய இருதயம், புதிய சித்தம் கொண்டவர்களாக தங்களுடைய ஒவ்வொரு வார்த்தையிலும், செயலிலும் சிந்தையிலும், நீதி சத்தியம் மற்றும் நன்மையான காரியங்கள் உள்ளதா என்று எப்போதும் எச்சரிப்போடு கவனித்திருப்பார்கள்.

இதற்கு இசைவாக காரியங்கள் அப்போஸ்தலன் இந்த வகுப்பாருக்கு சொல்ல விரும்புகிறார். நம்முடைய வெளிப்படையான செயல்பாடுகளையும் நடத்தைகளையும் நாம் ஆராய்வது நலமாக இருக்கும். ஏனெனில் நம்முடைய உள்ளார்ந்த நன்மையான எண்ணங்களை நம்முடைய செயல்களினால் சிலர் தவறாக புரிந்து கொள்வதற்கு அநேக வாய்ப்புகள் உண்டு. "உங்களுடைய நன்மைகள் தீமையாக பேசப்படுவதற்கு அனுமதியாதேயுங்கள்" நம்முடைய உதடுகள் பாவம் செய்யாதபடிக்கும் நம்முடைய வாய்க்கு காவல் வைப்பது" நல்லது. நம்முடைய வார்த்தைகள் தேவனை

மகிமைப்படுத்துவதற்கும் அல்லது சகோதரர்களை போஷிப்பதற்கும் அல்லது உலகத்திற்கு நன்மை உண்டாக பேச வேண்டும். ஆனால் நம்முடைய கிரியைகளுக்கும் வார்த்தைகளுக்கும் சவாலாக நிற்கும் இராணுவப்படைகள் அல்லது காவலர்களின் எண்ணிக்கை, நம்முடைய சிந்தைனைகளை காவல்காக்கும் காவலர்களின் எண்ணிக்கையை விட குறைவாகவும் வலிமை குறைவாக இருக்கிறது. ஆகவே நாம் எல்லா நேரங்களிலும் கவனமாக இருக்கவேண்டும்.

**R2891 (col.2p4,5):**

"சுத்தமுள்ளவைகள் எவைகளோ" - இந்த உலக முழுவதிலும் எல்லா இடங்களில், அதிகமான அசுத்தங்கள் நிறைந்திருக்கிறது. ஆகவே உடன்படிக்கை செய்த ஜனங்கள் அப்போஸ்தலரின் போதனைகளை பின்பற்றி மிக கவனமாக, அசுத்தங்களை நம்மை விட்டு அகற்றி, மீண்டுமாக அவைகள் தங்களுடைய இருதயத்திற்குள்ளும், சிந்தைக்குள்ளும் நுழையாமல், காத்துக் கொள்வது இக்காலத்தில் ஏற்றதாக இருக்கிறது. ஏனெனில் நாம் எவ்வளவு கிரியைகளை செய்தாலும், இந்த அசுத்தங்கள் நம்முடைய கிரியைகளின் பலன்களை கெடுத்துவிடும். சிந்தையிலும், சித்தத்திலும் பரிசுத்தத்தை காத்துக்கொள்பவர்கள், தங்களுடைய வார்த்தைகளையும், கிரியைகளையும் காத்துக் கொள்வது எளிதாக இருக்கும். ஓர் அசுத்தம் நமக்குள் நுழைய வேண்டும் என்றால் உலகம், மாம்சம் மற்றும் பிசாசு *ωι* இம்மூன்றின் வழியாக தான் நுழையும். முதலாவது அது சிந்தையை தாக்குகிறது, அங்கு போராட்டங்கள் ஏற்பட்டால் யுத்தம் ஜெயிக்கப்பட்டது என்று அறிந்து கொள்ளலாம். ஒரு வேளை எந்த விதமான போராட்டங்கள் இல்லை என்றால், அதன் முடிவு எப்படியிருக்கும் என்று சொல்ல முடியாது. "பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும் போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" யாக் 1:15

நம்முடைய சிந்தையை பரிசுத்தமாக காத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஒரு காரியம் உண்மை என்று நிரூபிக்கப்பட்டபின், அதில் எந்தவிதமான் அநீதி காணப்படவில்லை என்றாலும் அது அசுத்தமாக இருந்தால், தேவனோடு உடன்படிக்கை செய்த ஜனங்களின் சிந்தைக்கு இது தகாததொன்றாகும். அல்லது இப்படிப்பட்ட மாசுகள் சிந்தையில் நுழைந்து அதை அசுத்தப்படுத்துவதோடிராமல், அவைகளை முழுமையாக வெளியேற்றும் போது தொடர்ந்து சில வருடங்கள் இவைகள் கொடுக்கும் உபத்திரவங்களை தாங்கமுடியாது.

**R2480 (col.2p2):**

தடுத்து நிறுத்த வேண்டிய காரியம் அல்லது தவிர்க்க வேண்டிய காரியத்தை விரும்புவதும், தீமையான காரியங்களில் முன்னேறி செல்வதாகும். இப்படிப்பட்ட காரியத்திலிருந்து முற்றிலுமாக விடுபடவேண்டும் என்று அப்போஸ்தலர் கண்டிக்கிறார். இவைகளை தாழ்த்தி முற்றிலுமாக அழிக்கும்படி கூறுகிறார். பலவகையான தீமைகள், பாவம் என்று நாம் அறிந்தால் மட்டும் போதாது. அதற்கு எதிராக போராடுவோம் என்று உறுதி எடுத்துக்கொள்ளுவதை காட்டிலும் தேவனால் அங்கிகரிக்கப்படாத எல்லா காரியங்களிலும் நமக்குண்டான விருப்பங்களையும், ஏக்கங்களையும் நம்முடைய இருதயத்திலிருந்து முற்றிலுமாக வேரோடு பிடுங்கிவிட வேண்டும். இப்படிப்பட்ட ஒரு காரியம் நம்முடைய இருதயத்தையும், வாழ்க்கையையும் அதிகமாக சுத்திகரிக்கும். விசேஷமாக கிறிஸ்துவின் பெயரைக் கொண்டவர்களின் சிந்தை எவ்வளவு தூய்மைப்படும். இந்தக் குறிப்பையும் அப்போஸ்தலரின் எச்சரிக்கையை கவனியாத அநேகர், தொடர்ந்து எதிராளியானவனால் சோதிக்கப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்.

ஏனெனில் வெளிப்புறமாக தேவனுக்கு விரோதமான காரியங்களை வெறுத்து, இருதயத்தில் அவைகளை இரகசியமாக நேசித்தால் என்ன பிரயோஜனம்? இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மிக குறைவான ஆவிக்குரிய வளர்ச்சி காணப்படுகிறது. ஆகவே சரியான நேரத்தில், சிறந்த பரிசை பெற அப்போஸ்தலனாகிய பவுல், சரியான நடைமுறையை நமக்கு முன் வைத்திருக்கிறார். - நம்முடைய சிந்தை, விருப்பம் இலக்கும் மற்றும் இருதயத்தின் ஆசைகள் அனைத்தும் தேவனுடைய பரிபூரணமான சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட வேண்டும். இப்படி நடப்போர் சுவிசேஷத்தில், நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் ஓட்டப்பந்தையத்தில் சீரான பாதையில் சரியாக ஓடுபவர்களாக இருப்பார்கள்.

## 17. இருதயத்தில் பரிசுத்தத்தை நாம் எவ்வாறு பெறமுடியும்?

**R2734 (col.1p5) through R2735 (col.1p1):** (இந்த பாடத்தின் முடிவில் காணலாம்)

## 18. "நம்முடைய இருதயம் எல்லாவற்றிலும், கேடுள்ளதாக ." இருக்கும் பட்சத்தில்நம்முடைய நோக்கங்கள் பரிசுத்தமாக இருக்கிறது என்று எப்படி அறிந்து கொள்வது?

**R2734 (col.1p2:4):**

"இருதயத்தில் பரிசுத்தம்" என்பதில் உள்ள அர்த்தங்களை அநேகர் தவறாக புரிந்து கொள்கிறார்கள். இந்த மாம்சத்தில் இது கூடாத காரியம் என்று ஒரு வகுப்பார் கருதுகிறார்கள். வேறு சிலர் - ஒவ்வொரு வார்த்தைகளிலும், கிரியையிலும், சிந்தையிலும் பரிபூரணமான பரிசுத்தத்தில் இருக்க வேண்டும் என்று நம்பி, தாங்கள் அப்படியே இருப்பதாக நினைத்துக் கொண்டு, மற்றவர்களுக்கும் போதித்து வருகிறார்கள். இவர்கள் மிகப் பெரிய தவறைச் செய்கிறார்கள்.

தங்களுடைய சொந்த இருதயத்தின் நிலையை அறியாத இவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள். எடுத்துக்காட்டாக, நம்முடைய ஆண்டவரின் நாட்களிலிருந்த பரிசேயர்கள் தங்களை சட்டத்தை முழுமையாக கைக்கொள்ளக்கூடிய பரிபூரணமான நீதிமான் என்று பறைசாற்றிக்கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் அவர்களுக்கு மிக அவசியம் என்பதையும், அறியாமல், தங்களுடைய சொந்த நீதியாகிய கந்தையான வஞ்சகத்தை அணிந்து கொண்டு தங்களை ராஜ்யத்திற்கு அபாத்திரராக தீர்த்துக்கொண்டார்கள். அதே போல இந்நாளிலும், நாங்கள் வார்த்தையிலும், கிரியையிலும் அபூரணராக இருக்கிறோம் என்று கூறுகிறவர்கள், தங்களுடைய பலவீனங்களுக்கும் அபூரணத்திற்கும் தவறுகளுக்கும் தாங்களே குருடாக்கப்பட்டவர்களாக தேவனுடைய பார்வையில் மிக மோசமான நிலையில் உள்ளனர். தங்களை பாவி என்று தேவனிடத்தில் தங்களை அறிக்கையிடுபவர்களைக் காட்டிலும் இவர்களின் நிலை பரிதாபமாக இருக்கிறது. ஏனெனில் தங்களை பாவிகள் என்று அறிக்கையிடுகிறவர்கள், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தால் மூடப்பட்டு தேவனுடைய பார்வையில் நீதிமானாக எண்ணப்படுகிறார்கள்.

அதே, இக்காலத்தில் இருதயத்தில் தூய்மைப்படுவது கூடாத காரியம் என்று நினைப்பவர்களும் தவறாக சிந்திக்கிறார்கள். இருதயத்தில் பரிசுத்தத்திற்கும் - வார்த்தைகளிலும் கிரியைகளிலும் பரிப்பூரணமான நீதி வெளிப்படுவதற்கும் உள்ள மிக

பெரிய வித்தியாசத்தை அறியாததினால், இப்படிப்பட்ட தவறான எண்ணங்கள் வருவதுண்டு. இருதயம் என்பதின் சிந்தை, அதில் உள்ள சித்தம் உண்மையான மனிதனின் நோக்கத்தை குறிக்கும். இப்படிப்பட்ட யோசனைகளை நம்முடைய சிந்தைக்கு முன் கொண்டுவரும் போது, ஒருவருடைய இருதயம் தூய்மையாக உள்ளதா, அதில் உள்ள நோக்கங்கள் தூய்மையாக இருந்தாலும், தனக்குள் இருக்கும் நல்ல நோக்கத்திற்கு இசைவாக கிரியை செய்ய முடியாது என்று அறிக்கையிடுவதைக் காணலாம். இந்தச் சிந்தைகளை நம்முடன் கொண்டுவந்தபின் ஒருவர் இருதயத்தில் சுத்தமுள்ளவரா அதாவது பரிசுத்தமான நோக்கம் உடையவர்களா என்று எளிதில் அறிந்துகொள்ளலாம். இருப்பினும், இந்த நல்ல எண்ணங்களைக் கடுமையான முயற்சியினாலும் செயல்படுத்த முடியவில்லை என்று அறிக்கையிடுதலையும் நாம் புரிந்து கொள்ளலாம். ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவுக்கு முன் சுத்தமான இருதயம் கொண்டவர்கள், ஒரே சிந்தை உடையவர்களாக இருப்பார்கள். அவர்களின் பரிசுத்தமான நோக்கத்தில், முதலில் தேவனுடைய சித்தத்தை செய்ய முயற்சிக்கும். “பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்.” யாக் 4:8 என்று அப்போஸ்தலரின் உற்சாகமான வார்த்தைகள் நமக்கு ஊக்கம் அளிக்கிறது.

## 19. மனசாட்சிக்கும், இருதயத்தின் பரிசுத்தத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

**R2735 (col.1p1):**

தேவன் அன்பாகவே இருக்கிறார். அவர் நம்மேல் வைத்திருக்கும் அந்த தெய்வீக அன்பை நமக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற முக்கிய காரணத்திற்காகவே, நமக்கு எல்லா வாக்குத்தத்தங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அன்பு நமக்குள் வளர்ச்சி அடைய வேண்டுமானால், அதாவது ஆண்டவர் நம்மேல் காட்டின அன்பின் அளவிலும், சாத்தானின் சுய நலத்திற்கும் அவனுடைய சட்டத்திட்டங்களுக்கு முற்றிலும் எதிராகவும் அவருடைய அன்பின் பிரமாணங்களும் வளர வேண்டும் என்றால் முதலில் சுத்த இருதயம் நமக்குள் இருக்க வேண்டும். சரியான முறையில் இப்படிப்பட்ட வளர்ச்சியடைவதற்கு நல்ல மனசாட்சி மிக அவசியம். ஏனெனில் சிலருக்கு கெட்ட மனசாட்சிகளும் உண்டு. நம்முடைய விழுந்துபோன நிலையில் இருக்கும் மற்ற அவயவங்கள் குணப்படுவதை, உயர்ந்த நிலையில் சிந்திக்க வைப்பதற்கு சில ஒழுங்கு முறைகளை ஏற்படுத்த வேண்டும். ஒருவருடைய மனசாட்சி மணி நேரங்களை சரியாக குறிக்கப்பட்டிருக்கும் கடிகாரத்தைப் போலிருக்கிறது. ஆனால், அது சரியான நேரத்தை காட்டுவதற்கு அதற்குள் இருக்கும் முக்கிய வில்விசையை **(main spring)** முதலில் ஒழுங்குபடுத்தி வைக்க வேண்டும். அதாவது அந்த கடிகாரம் சரியாக ஓடுவதற்கு அதற்குள் இருக்கும் வில்விசையை சரியாக ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும். அதே போல தேவனுடைய வார்த்தைகளில் உள்ள அன்பின் பிரமாணத்தோடு இசைவாக இருக்கும் புதிய பரிசுத்தமான சித்தங்களை நாம் அனுமதித்தால் நன்மை இன்னதென்றும், தீமை இன்னதென்றும் சரியாக உணர்த்தப்படுவோம்.

## 20. உண்மையைச் சொல்வது தீமையானதை பேசுதல் என்று பொருள்படுமா?

**R2444 (col.1p4 through col.2p1):**

மற்றும் சில நல்ல கிறிஸ்தவர்கள், இந்தக் கேள்வியை தவிர்த்து தாங்கள் உண்மையை மட்டுமே பேசுகிறார்கள் என்று நினைத்துக் கொண்டு, பொதுவான இந்தத் தவறுகளில் தங்களைத் தாங்களே நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். வெட்டிப்பேச்சை

பேச விரும்புவோர், தங்களுடைய நியாயத்தீர்ப்பை தாங்களே திசை திருப்பி, அவர்கள் அறியாததும், அந்த விஷயத்தில் எந்த விதமான அறிவும் இல்லாமலே, அவைகளை உண்மை என்று ஏற்றுக் கொள்கிறார்கள். அல்லது அந்தக் காரியங்களை உண்மை என்று ஏற்றுக் கொண்டபின் அதைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளும் ஆர்வத்தோடு, அவர்கள் இது வரைக்கும் கேட்ட காரியங்கள் உண்மை என்று நிரூபிக்கப்படாவிட்டால், இவர்கள் பேசிய காரியங்கள் பொய்யாகிவிடும் என்று எண்ணி, அதை சரி செய்ய முயற்சிப்பார்கள். இயல்பான பெருமை கொண்ட மனது, உண்மைகளை விசுவாசிக்க மறுத்துவிட்டு, பேசின பொய்களை உண்மை என்று நிரூபிக்க முயற்சிக்கும். இப்படியாக ஒரு தீமை மற்றொரு தீமைக்கு வழி வகுக்கும்.

இருந்தபோதிலும் - "உண்மை என்று எனக்கு தெரிந்தால் மட்டுமே, நான் அதை பேசுவேன். நானே சொந்தமாக கவனித்து, என்னுடைய சொந்த அறிவின்படி அது உண்மை என்று விளங்கினால் மட்டுமே நான் அதைப்பற்றி பேசுவேன் என்று சொல்லுவார்கள். ஒரு வேளை அதைப் பற்றி நான் கேள்வி பட்டிருந்தால், நான் கேட்ட காரியத்தை மட்டும் சொல்வேன். இதை உண்மை என்று நான் அறிவிக்க மாட்டேன். இப்படியாக, நான் மற்றவர்களை பற்றி எந்த விதமான தீமைகளை பேசுவதில்லை என்று உறுதியளிப்பேன் என்று சிலர் சொல்லலாம். ஒழுக்ககேடுகளுக்கும் பின்னிருக்கும் நல்மனசாட்சிக்கு - உண்மையை பேசுவதே நன்மை என்றும் சத்தியத்தை பேசுவது வெட்டிப்பேச்சு இல்லை என்றும் தேவன் பொருள்படுத்துகிறார் என்று நல் மனசாட்சிக்கு அறிவிக்கிறது. ஆனால் வீண் பேச்சுக்களையும், தீமையாக பேசுவதும், மாம்சத்தின் கிரியையாக இருப்பதால் தவறானவைகளை பேசுவதே பாவம் என்று தேவன் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

இரு மிகப் பெரிய தவறு - ஒரு காரியம் உண்மையானாலும் சரி, பொய்யானாலும் சரி, வெட்டிப்பேச்சு - வெட்டி பேச்சு தான். இதை தேவனுடைய சட்டம் மட்டும் அல்ல நாகரீகமுள்ள மனிதனுடைய சட்டமும் இதை வலியுறுத்துகிறது. உண்மையில், மனித சட்டத்தில் வீண் பேச்சுக்களை பேசினால் என்று வழக்கு தொடுக்கப்பட்டால், அதை உண்மை என்று நிரூபிக்கப்பட்டால், அதனால் ஏற்பட்ட மன கஷ்டங்களுக்கு அவர்கள் நியாயமான தண்டனைகளைச் சட்டப் பூர்வமாக பெறுவார்கள். ஆகவே மற்றொருவரை காயப்படுத்தும்படியாக அல்லது துக்கப்படுத்தும்படி பேசக்கூடிய எல்லா அவதூறான பேச்சுக்கள், புறங்கூறுதலாகவோ இருக்கிறது. ஆகவே உண்மையோ, பொய்யோ, மனிதர்களை காயப்படுத்தக்கூடிய எல்லா வார்த்தைகளும் தேவனுடைய சட்டத்தில் மட்டும் அல்ல, மனிதனுடைய சட்டத்திலும் தவறு என்று ஒத்துக்கொள்ளப்படுகிறது.

## 21. நமக்கு தெரிந்த எல்லா காரியங்களைப் பற்றி அனைவருக்கும் கட்டாயமாக சொல்ல வேண்டுமா?

**R2588 (col. 1p3): -**

"ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு." மற்றும் "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்துப் புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" (தீத்து 3:2, எபே 4:29) என்ற கட்டளைகளின் ஆழத்தையும், அகலத்தையும், உயரத்தையும் பற்றி எப்போது கிறிஸ்தவர்கள் கற்றுக் கொள்வார்கள்? தேவனுடைய உண்மையான ஜனங்கள் இந்தக் கற்பனையை

கற்றுக்கொள்ள எத்தனை நாள் செல்லும்? உண்மையாக இருக்கும் பட்சத்திலும் அதைப் பற்றி பேசுவது தவறு என்றும் எப்போது அறிந்துகொள்வார்கள்? மற்றவர்களுக்கு பயனற்றதாக இருக்கும் என்று எதிர்பார்க்கும் பட்சத்தில் உண்மையோடு சில காரியங்களை சேர்த்து பேச வேண்டிய அவசியம் இல்லை என்று எப்போது கற்றுக் கொள்வார்கள்? மற்றவர்களின் பிரச்சனையில் தலையிடக் கூடாது என்றும், தேவையற்ற வெட்டிப் பேச்சுகளை பேசக்கூடாதென்றும் மற்றவர்களை கேலி செய்யக்கூடாது என்றும், பிறரிடம் குற்றம் காணக்கூடாதென்றும் எத்தனை பாடங்களை வரிவரியாக கற்பிக்கப்பட வேண்டும்? இவை அனைத்தும் அன்பின் குறைபாடுகளையும், கிறிஸ்துவின் சாயலை தரித்திராத ஒரு நிலையை நிரூபிக்கிறது. கடும் முயற்சியினால், இந்த குறைகள் நிறைவாக்கினால் மட்டுமே நம்முடைய பரம அழைப்பையும், தெரிந்துக் கொள்ளுதலையும் நாம் உறுதிப்படுத்திக் கொண்டு, பரலோக இராஜ்யத்தில் நல்லதோர் பங்கை பெறமுடியும்.

## 22. மனதை புண்படுத்தும் பேச்சுக்கள் - தூஷணங்களாக குறிப்பிடப்படுமா?

**R3030 (col. 1p3):**

அன்பின் செயலாற்றும் - முதலில் அயலகத்தாருக்கு அவர்களின் நன்மையான காரியங்களுக்கும் ஆசிரை வருவிக்கிறது. ஆகவே “அன்பு பிறருக்கு தீங்கு நினையாது” என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவனோடு உடன்படிக்கை செய்த ஜனங்கள் இந்தப் பாடத்தை அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த பழக வேண்டாமா? ஆகையால் நம்முடைய கரங்களை விட வல்லமையான நம்முடைய வாயின் வார்த்தைகளினால் மற்றவர்களை காயப்படுத்தாமலும், துக்கப்படுத்தாமலும் இருக்க நாம் கற்றுக்கொள்ளாமல் இருப்போமா? அதற்குப்பின் ஒரு சகோதரனைப்பற்றியோ, அயலானைப் பற்றி இழிவாக பேசும் பேச்சுக்கள் அவர்களை காயப்படுத்தும் என்று அறிந்து அதை பேசாமல் இருப்போம் அல்லவா? ஒரு வேளை நாம் இவைகளை செய்யாவிடில், தேவனுடைய அன்பின் பிரமாணங்களையும், சட்டங்களையும் சீர்குலைப்பவர்களாக இருப்போம் அல்லவா? நம்முடைய சகோதரர் அல்லது அயலகத்தார், அபாயமான ஒரு சூழ்நிலையில், அகப்படும்போது, அவர் மேல் வைத்த அன்பின் நிமித்தமாக நாம் சில உண்மைகளை சொல்லுவது தவறாகாது. அதற்குப் பதிலாக நாம் தப்பித்துக்கொள்வதற்கும், மற்றவர்களை குற்றவாளி என்று தீர்ப்பதற்கும், நம்மை அதிக நீதிமான்களாக காட்டிக் கொள்வதற்கும், பேசப்படும் வார்த்தைகள் (மற்றவர்களை பற்றிய உண்மைகள்) தேவனுக்கு முன் தவறாகும்.

மனதை புண்படுத்தக்கூடிய உண்மைகள் தேவனுடைய பிரமாணங்களையும், பொன்னான சட்டங்களையும் சீர்குலைத்துவிடும் என்றால் - இன்னும் மரியாதையற்ற வார்த்தைகள் மற்றவர்கள் பெயரைக் கெடுக்கும் பேச்சுக்களைப் பற்றி நாம் என்ன சொல்லுவோம்? ஆனால் இப்படிப்பட்ட காரியங்கள் உலகத்தார் மத்தியிலும் பெயர் கிறிஸ்தவர்கள் மத்தியிலும், உண்மையான சபை ஜனங்களிடத்திலேயும் அதிகமாக காணப்படுகிறது. எந்தச் சூழ்நிலையிலும் மரியாதையற்ற வார்த்தைகள், பெயரைக் கெடுக்கும் பேச்சுக்கள் சத்தியமாக இருப்பதில்லை. “ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும் ” இருங்கள் என்ற தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாத தேவ ஜனங்களுக்கு வெட்கத்தின் மேல் வெட்கமாம். இவர்கள் அனுபவமற்ற நிலையில், தேவனுடைய பிரமாணத்திற்கு குழந்தைகளாக இருப்பவர்கள்.

## 22. பொதுவாக அறிவிக்கப்பட்ட போதனைகளை பகிரங்கமாக கண்டனம் (விமர்சிப்பது) செய்வது தவறானதா? தீமையான பேச்சா?

**R3045 (col.2P6): -**

பொதுவாக அறிவிக்கப்பட்ட போதனைகளில் உள்ள வித்தியாசத்தை முதலில் கவனிக்க வேண்டும். தேவைப்பட்டால் பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட போதனைகளிலிருக்கும் தவறுகளை, பகிரங்கமாக கண்டனம் தெரிவிக்க வேண்டும். அதற்குப் பின் முடிவெடுக்க வேண்டிய பொறுப்புகள் அவரவரை சார்ந்ததாக இருக்கும். அன்பின் அடிப்படையிலும் மனத்தாழ்மையிலும் சத்தியத்தையும் சகோதரரை சேவிப்பதன் அடிப்படையில் நம்முடைய விமர்சனங்கள் இருக்க வேண்டும். எல்லாவற்றிருக்கும் மேலாக மனத்தாழ்மையிலும் துவங்கும் கண்டனங்கள் சரியாகவே இருக்கும் என்று நமக்கு உறுதியளிக்கிறது. இதனால் சில உண்மைகளையும் நாம் நிரூபிக்கலாம்.

## 24. அவதூறு பேசுதல் என்றால் என்ன?

**R3595 (col.2p1)**

உலகத்தின் அளவுகோலின்படி அவதூறு பேசுபவன் ஒரு திருடன் என்று - ஷேக்ஸ்பியர் எழுதியிருக்கிறார்.

**R2444 (col.1P5-col.,2P2): -**

முதலாவதாக செய்யப்பட்ட தவறு, அடுத்துவரும் தவறை நியாயப்படுத்த முடியாது என்று தெய்வீக சட்டங்களும், மனித சட்டங்களும் ஒத்துக் கொள்கிறது. ஒரு குற்றம் புரிந்துவிட்டால், உலகப்பிரகாரமான நீதிமன்றங்கள் குற்றவாளிக்கு நியாயமான தண்டனைத் தீர்ப்பு அளிக்க முயற்சிப்பார்கள். ஆனால் அதே நேரத்தில், பாதிக்கப்பட்டவர்களின் கைகளினால் தண்டனைகள் அனுமதிக்கப்படுவதில்லை. முரட்டாட்டமான வார்த்தைகளினாலும், நாவைப் போல கூர்மையான ஆயுதங்களினாலும், பகையினாலும் பொறாமையினாலும் குற்றம் புரிந்தவரின் பெயரைக் கெடுப்பது போன்ற எந்தக் காரியங்களும் அனுமதிக்கப்படுவதில்லை. உண்மையில் அவதூறு பேசுகிற அநேகர் என்றுமே குற்றப்படுத்தப்படுவதில்லை. இப்படிப்பட்ட அவதூறான பேச்சுக்கள் பேசுபவர்களுக்கும் தங்களை சமுதாயத்திற்கு காலப்போக்கில் அதிகமான கேடுகளை விளைவிக்கும். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய நல்ல பெயரை தாங்களே கெடுத்துக்கொள்கிறார்கள்.

## 25. தவறான சாட்சி என்றால் என்ன? ஒரு வார்த்தையும் பேசாமல், மௌனமாக இருந்து கொண்டு தவறான சாட்சி பகிரக்கூடுமா?

**R3045 (col.2p3,4):**

தவறான சாட்சிகள் பொய் சொல்லுவதற்கு சமமானது. ஆனால் ஒரு காரியத்தை தவறாக சொல்லும் போது அது ஆழமான பொய்யாக மாறிவிடுகிறது. நேரடியான வாக்கியமாக இருந்தாலும் சரி, மறைமுகமான வாக்கியமாக இருந்தாலும் சரி, ஒருவரிடம் தவறான காரியங்கள் அறிவிக்கப்பட்டால் பொய் பேசுவதைக் காட்டிலும் அதிக பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. உண்மையில் நாகரீகமுள்ள ஜனங்கள் மத்தியில் அவர்களின் மனசாட்சியின் உக்கிரத்தை தணிக்க, இப்படிப்பட்ட தந்திரமான பேச்சுக்களை பேசிவிட்டு, தங்களுடைய இருதயங்களில் திருப்தியடைகிறார்கள். ஒருவர் தவறான காரியங்களை சொல்லும்போது மௌனமாய் இருந்தாலும் அல்லது தலையை மட்டும்

அசைத்தாலும், அந்தத் தவறுக்கு சாட்சியளிப்பவராக இருக்கிறார். இதற்குத் தொடர்பாக தவறான ஒரு வாக்கியம் பேசப்படுவதைக் காட்டிலும் மௌனம் சம்மதத்திற்கு அறிகுறியாக புரிந்து கொள்ளப்படும். தேவனுடைய வீட்டில் மோசேக்கு கீழுள்ள ஊழியக்காரராகிய யூதர்களுக்கு நியாயப்பிரமாணத்தில் இது ஒரு முக்கிய கற்பனையாக கொடுக்கப்பட்டிருக்க, புதிய உடண்படிக்கையின் கீழுள்ள தேவ புத்திரர்கள் எவ்வளவு முக்கியமாக கடைபிடிக்க வேண்டியதாக இருக்குமே, இந்தக் குறிப்பிட்ட வார்த்தைகளை இந்தக் கற்பனை தடை செய்கிறது. ஓர் அயலானை பொறுத்தவரையில், உண்மையல்லாத காரியங்களை பேசுவது மட்டும் அல்ல, அவருடைய தரத்தை குறைக்கக்கூடிய எந்தவிதமான காரியத்தையும் அவரை பற்றி பேசுவது தவறாகும். அது உண்மையாக இருக்கும் பட்சத்திலும் அவரைப்பற்றி பேச அவசியமில்லை. ஒரு வேளை மற்றவர்களை அழிவினின்று காக்கவும், சட்டத்தின்படி விடுதலை செய்யவும் அல்லது ஒருவரை எச்சரிக்கவேயன்றி இப்படிப்பட்ட உண்மைகளை நாம் எங்கும் பேசிவிடக்கூடாது. மேலும் இப்படிப்பட்டச் சூழ்நிலையில் தேவைப்பட்ட காரியங்களை மட்டுமே பேச வேண்டும். இவையனைத்தும் அன்பின் அடிப்படையில் செயல்படுத்த வேண்டும்.

அன்பின் பிரமாணத்தினால் நம்முடைய சகோதரர்களோடு நாம் ஐக்கியப்-பட்டிருக்கிறோம். ஆகவே நம்முடைய முழு கவனத்தை அந்த ஐக்கியத்தின் மேல் வைக்க வேண்டும். நம்முடைய ஆண்டவரின் பாடங்களை முழுமையாக கற்றுக் கொள்வதற்கு கிறிஸ்தவர்களுக்கு சற்று கடினமாக தோன்றுகிறது. தனிப்பட்ட காரியங்கள் அல்லது பொதுக்காரியங்களிலும் ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரியைக் குறித்து குறைகள் இருந்தால் நாம் மற்றவர்களிடம் அல்ல அந்த நபரிடமே அந்தக் காரியங்களை குறித்து பேச வேண்டும்.

## 26. ஒரு சகோதரனாவது சகோதரியாவது தீய காரியங்களை அறிவிக்க துவங்கும் போது நாம் எப்படி நடந்து கொள்வது?

**R3595 (col.p7,8):**

ஒருவர் உங்களிடம் மற்றவர்களை குறித்து தவறான செய்தியை சொல்ல துவங்கும் போது மிக அன்போடு அதிக உறுதியோடும் உடனடியாக தடை செய்ய வேண்டும். “கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்.” அவர்களுடைய எந்தச் செய்தியையும் நீங்கள் பகிர்ந்து கொள்ளவேண்டாம். நம் ஆண்டவரின் கற்பனைக்குக் கீழ்ப்படியாமல், அப்படிப் பகிர்ந்து கொள்ளும் பட்சத்தில் சபைகளில் மிகப் பெரிய குழப்பத்தை உண்டுபண்ணும். ஒரு வேளை அந்த நபர் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடையாத குழந்தையாய் இருந்தால் முறைப்படி அவர் வளர்வதற்கு இந்தப் பாடத்திற்கு ஏற்ற தேவனுடைய வார்த்தைகளை எடுத்துக் காட்ட வேண்டும். (மத் 18:15, 1 தீமோ 5:19) ஒரு வேளை இந்தச் சம்பாஷனை நேரடியாக உங்களிடம் வரலாம். உங்கள் காதுகளில் மட்டும் விழுந்தால், அந்த செய்திக்கு மறுப்பு தெரிவிக்கும் விதத்தில் உடனடியாக அந்த இடத்தில் இருந்து சென்று விடுங்கள்.

ஒரு வேளை ஆண்டவருடைய கற்பனைக்குச் செவி சாய்ப்பதற்கு அழைப்பு பெற்றும் தொடர்ந்து தவறான காரியங்களைப் பேசுவார்களானால் *ஶ்ரீ* “நான் உன் செய்தியை கேட்க மாட்டேன், ஒரு வேளை நாம் கேட்டால் ஆண்டவரின் பிரமாணத்தை மீறக்கூடிய குற்றவாளியாவேன்.” என்று சொல்லி அவரை கண்டிப்போடு எச்சரிக்க வேண்டும். மேலும் நாம் அந்தக் காரியங்களை நம்பினால், நம் ஆண்டவரின் வார்த்தைகளை மதியாத

கிறிஸ்தவர்களாகி விடுவோம். ஏனெனில், ஆண்டவரின் கற்பனைகளைக் கைக் கொள்ளாதவர்கள் சகோதர ஐக்கியத்தின் மத்தியில் அவர்களுக்கு உள்ள காரியங்களை மாற்றி கூறுவதற்கு அவர்கள் தயங்குவதில்லை. ஒருவேளை நாம் இப்படிப்பட்ட சம்பாஷனைகளை கேட்டுக் கொண்டிருந்தால் இந்தப் பாவத்திற்கும், அதன் விளைவுகளுக்கும் நாமும் பங்காளிகளாவோம். இந்தக் கசப்பான வேர் நமக்குள் வளர்ச்சியடைந்தால், நாம் தேவனுடைய கிருபையை இழந்துவிடுவோம். (எபி 12:15)

## 27. தவறாக பேசக்கூடிய உலகத்தாரிடம் நாம் எப்படி நடந்து கொள்வது?

“கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள். அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே.” (எபேசி 5:11-12)

**R2444 [col.1 P1-3]:**

“மதத்தின் மேல் மற்றவர்களிடம் நாம் ஆன்மீகத்தைப் பற்றி பேசலாம், ஆனால் உலகத்தாரோடு அல்லது வேலை ஸ்தலத்தில், மதத்தின் மேல் நாட்டம் இல்லாத உலகத்தாரோடு நாம் என்ன பேசுவது? சூழ் நிலைகள் ஏற்படும் போது நாம் பேசாமல் இருந்தாலும், அவர்களின் வெட்டிப்பேச்சுக்களையும், செய்திகளையும் கேட்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சம்பாஷனைகளில் கலந்து கொள்ளாவிட்டால் அனைவரும் என்னை ஒதுக்கி விடுவார்களே” என்று வெட்டிப் பேச்சை பேசுவதற்கு அநேகர் இப்படிப்பட்ட சாக்குப்போக்கை சொல்லிவருகிறார்கள். ஆம், பரிசுத்தவான்கள் இந்த உலகத்தாரோடு என்றுமே ஒத்துப்போக முடியாது. அவர்கள் இந்த உலகத்திலிருந்து பிரித்து எடுக்கப்பட்டதினால் அவர்கள் எங்கிருந்தாலும் தனித்தே காணப்பட வேண்டும் என்று நாம் பதிலளிக்கலாம். உலகத்தார் மேலோட்டமாக மதத்தை தழுவலாம் அல்லது வாரத்தில் ஓர் நாள் ஆன்மீகத்தில் ஈடுபாட்டை காட்டலாம். ஆனால் உண்மையில் மதம் என்பது இருதயத்திலிருந்து வரக்கூடியதாயும், நம் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியிலும் அதன் பிரதிபலிப்பு இருக்கவேண்டும். தெய்வீக கட்டளைகளை கண்டிப்பாக நாம் கடைபிடித்தோமானால், தீமையை விரும்பக்கூடிய நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பலரிடம் இருந்து உண்மையில் பிரிய வேண்டியதாய் இருக்கும். தேவனுடைய புத்திரர்களாக அவருடைய ஆவியை பெற்றவர்கள் உலகத்தாராய் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

இதை புரிந்து கொண்ட நம்முடைய ஆண்டவர், உலகத்தார் செல்வது விசாலமான பாதை என்றும் சீஷர்கள் செல்வது குறுகலான பாதை என்றும் வேறுபடுத்தி காட்டினார். “நீங்கள் ஒருவரையும் தூஷிக்காமல் இருக்கவேண்டும். அவதூறு பேசாமல் இருக்கவேண்டும்” என்பது கிறிஸ்துவின் அன்பின் பிரமாணத்திற்கு கட்டுப்பட்டது. புது சிருஷ்டிகளாக இருப்பதினால் விருந்தாளிகளையும் மகிழ்ந்து களிகூறலாம். ஏனெனில் கிறிஸ்துவின் நிமித்தம் நீங்கள் சின்ன சின்ன பாடுகளை அனுபவிப்பதற்கு வாய்ப்புகள் கிடைத்திருக்கிறது. முதலில் நாம் அடையக்கூடிய நஷ்டம் மிகப் பெரியதாக தோன்றலாம். ஆனால் நம்முடைய வரக்கூடிய மகிமைக்கு ஒப்பிட்டு பார்க்கும்போது இந்த பாடுகள் மிகக் குறைவாகவே இருக்கும். (பிலி 3:7,8 11 கொரி 4:7)

நமக்கு நேரிடும் சகலமும் நம்முடைய நன்மைக்காக ஏற்படுகிறது என்று நம் ஆண்டவர் வாக்களித்ததினால் நாம் மகிழ்ந்து களிகூறலாம். புது சிந்தையில் நடக்க வேண்டும் என்று விரும்பக்கூடிய ஒருவர் உலகத்தாரின் சிந்தையோடு இசைந்து நடப்பது

ஆவிக்குரிய மனிதனின் வளர்ச்சிக்கு பாதிப்புகளை ஏற்படுத்தலாம். ஆகவே இப்படிப்பட்ட உலக சிநேகத்தை நம்மை விட்டு விலக்குவது நம்முடைய ஆவிக்குரிய சிந்தையை, வளர்த்து நம் ஆண்டவரோடும் அவர் வார்த்தைகளோடும் மிக நெருங்கிய ஐக்கியத்தை கொடுக்கும். இப்படிச் செய்வதினால் கிறிஸ்துவின் உண்மையான சரீர அங்கங்களோடு நாம் தொடர்பு கொள்வது எளிதாயிருக்கும். இந்தக் காரியங்களை அடிப்படையாக கொண்டு “உலக சிநேகம், தேவனுக்கு முன்பாக பகை’ என்று யாக்கோபு கூறுகிறார். (யாக் 4:4) இந்த ஒரு காரியத்தை தம்முடைய ஜனங்கள் தம்முடைய முழு விருப்பத்தின்படி குறுகலான வாசலில் பிரவேசிக்க விரும்ப வேண்டும் என்று எதிர்பார்த்து ஒவ்வொருவருக்கும் ஏற்ற சூழ்நிலைகளை தேவன் அமைத்து தருகிறார். ஒன்று அவர்கள் தெய்வீக உறவையும், ஐக்கியத்தையும் இழக்க வேண்டும் அல்லது உலகத்திற்குரிய நண்பர்களையும் ஐக்கியத்தையும் இழக்க வேண்டும். தேவன் விரும்பும் காரியங்களை இந்த உலகம் வெறுப்பதினாலும் இந்த உலகத்தின் தீமையான பேச்சுக்களையும், சிந்தைகளையும், கிரியையும் அன்பையும், விரும்புவதாலும், அநேகர் தேவனுடைய ஐக்கியத்தை தொலைத்து விடுகிறார்கள். அவருடைய ஆவியையும் இழந்து விடுகிறார்கள். “தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.” (ரோமர் 8:9)

**R2967 [col.1p3]:**

நம்மிடம் பொதுவாக காணப்படும் இப்படிப்பட்ட குறைவான நிலையிலிருந்து (சிந்தை, வார்த்தை, கிரியைகள்) நாம் உயர வேண்டும். ஏனெனில், தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும் நாம், அவருடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதால், இந்த உலக காரியங்களோடு எந்த ஐக்கியமும் வைத்துக் கொள்ளமுடியாது. அப்போஸ்தலர் சொல்லுகிறபடி இவைகள் “இருளின் கனியற்ற கிரியைகள்” என்று நாம் விட்டுவிட வேண்டும். கனியற்ற நிலை என்பது அழிவுக்குரிய பாவ நிலை என்று அப்போஸ்தலர் தெளிவாக நமக்கு கூறுகிறார். இது மரணத்திற்கு வழி வகுக்கும். இதற்கு எதிராக, கிறிஸ்துவின் சிந்தை, கனி கொடுக்கக்கூடியதாகவும், அதில் வளர்ச்சி அடைவதும், ஆசீர்பெற்று, உயர்நிலைக்கு நம்மை வழி நடத்தும். தனிப்பட்ட கிறிஸ்தவர்களை மட்டும் அல்ல, நம்முடைய ஆண்டவர் சொல்லியபடி அவரை சார்ந்த அவருடைய மற்றவர்களும் அதனால் பயன் அடைகிறார்கள். உண்மையுள்ள கிறிஸ்தவன் எப்படிப்பட்ட இருளான பாவத்திலும் ஒளிவீசக்கூடியவராக இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பூமிக்கு உப்பாக இருந்து, பூமி கெட்டுப்போகாமல் அதை பாதுகாக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இன்றைய நாகரீகம் நிறைந்த உலகத்தில், பரிசுத்த ஆவியைப் பெற்ற தேவ ஜனங்களினால் சில ஒழுக்கங்கள் அல்லது நன்மையான காரியங்கள் நடை பெற்று வருகிறது. “இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது.” (மத் 5:16) நாம் வாழும் அனுதின வாழ்க்கையில் ஜீவிக்கக்கூடிய நிரூபங்கள், நம்முடைய பாவங்களை உணர்த்தி எச்சரிக்கிறது. இது சரியானதாக இருப்பினும், நம்முடைய கடமையாக இருக்கிறது. நாம் இருளுக்கு விரோதமாக செயல்பட்டாலும், தெய்வீக ஒளிக்குள் பிரவேசித்து, சத்தியத்திற்கு சாட்சி பகிர்ந்து, பரிசுத்த ஆவியை வெளிப்படுத்தி பாவங்களை துணிந்து தகர்த்து எறியலாம்.

**R2406 [col.2p5]:**

தேவனுக்கு பயந்து அவருடைய நாமத்தை கனப்படுத்தி அவருடைய வார்த்தைகளை தியானித்து அவருடைய மாதிரியை பிரதிபலித்து தெய்வீக வழி நடத்துதலுக்குத் தங்களை

உட்படுத்தி, ஜீவிப்பவர்களுக்கு மத்தியில் எந்த விதமான பகையும், பொறாமையும், மாம்சத்தின் கிரியைகளும் வேலை செய்ய வாய்ப்பு கிடைப்பதில்லை. ஆகவே மேல் கூறப்பட்ட காரியங்களை நாம் செய்தால், சகலவிதமான தீய பேச்சுக்களும் கிரியைகளும் மறைந்து போய்விடும். மாம்சத்தின் எந்தக் கிரியையும் தேவனிடமிருந்து அல்ல சாத்தானிடமிருந்தே வருகிறது என்று இவர்கள் எளிதில் அறிந்து கொண்டு மற்றவர்களுக்கும் அன்போடு எடுத்துக்காட்டலாம். அல்லது இப்படிப்பட்ட சம்பாஷனைகளை உடனடியாக தவிர்த்து நம்முடைய அதிருப்தியை தெரிவிக்கலாம். அதற்குப் பின் அப்படிப்பட்டவர்களின் கூட்டங்களையும் தவிர்க்கலாம். அதற்குப் பின் நம்முடைய சொந்த வார்த்தைகளையும் நடத்தைகளையும், கவனித்து, "இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வரவழைத்தவரை துதிக்க வேண்டும்."

## 28. உலகத்தாருக்கு விரோதமாக பேசப்படுவதைக் காட்டிலும் கிறிஸ்துவுக்குள் ஒரு சகோதரனுக்கு எதிராக பேசக்கூடிய வார்த்தைகள் மிகப் பெரிய குற்றமாக கருதப்படுமா?

**T62 [p3]:**

இவைகள் நம்முடைய இருதயத்தில் என்னென்ன பாடங்களை புகட்டுகிறது? பரிசுத்த ஸ்தலத்தில் நம்முடைய பலிகள் உண்மையாக செலுத்தப்படும் வரை அல்லது பிரகாரத்தில் விசுவாச வீட்டாரின் ஐக்கியத்தில் விசுவாசத்தை காத்துக் கொள்ளும் வரை, இக்காலத்து உண்மையான பலிகளை நாம் மாசுபடுத்துவதில்லை. மேலும் நாம் இந்நிலையில் இருக்கும்பட்சத்தில் பகை, குரோதம், பொறாமை போன்ற துர்க்குணங்களினால் நாம் குருடாக்கப்படுவதில்லை. ஆகவே, அங்கீகரிக்கப்படும் பலிகளை நம் மனக் கண்களினால் உணர முடிகிறது. இப்படியிருக்க, ஒரே பலியை ஒரே தூபபீடத்தில் பங்காளிகளாக சகோதரர்களாக ஒருமித்து செலுத்தின பின் ஒருவர் மற்றொருவரைக் குறித்து குறை பேசும் அளவுக்கு வெவ்வேறு ஆவிகளை பெற்றுவிட்டார்கள். இவர்கள் எதிராளிகள் அல்லவே. இப்படியிருக்க காரியங்களுக்கு உண்மையில் நாம் அஞ்ச வேண்டும். (எபி 4:1) ஏனெனில், இப்படி பேசுபவர்கள் பரிசுத்த ஸ்தலத்தை விட்டும் வெளியே சென்று "காரிருளுக்குள் பிரவேசித்து விடுகிறார்கள். (உலகம்) நம்மால் முடிந்த வரைக்கும் அவர்களை மீண்டும் வெளிச்சத்திற்கு அழைத்து வர முயற்சிக்க வேண்டும். (யாக் 5:20) இந்தக் காரியங்களை செய்யும் போது தீமைக்கு பதில் தீமை செய்யாமல், பழிக்கு பழி வாங்காமல், எந்தச் சூழ்நிலையிலும் நாம் பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியேறாதபடி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். விசுவாசத்தில் வளரக்கூடிய ஆசாரியர்கள் மகா பிரதான ஆசாரியனின் அடிச்சுவட்டை அவசியமாக பின்பற்ற வேண்டும். சத்துருக்களை நேசித்து தங்களை உபத்திரவப்படுத்துபவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். "பாடுபடும் போது பயமுறுத்தாமலும் வையப்படும்போது திரும்பி வையாமலும் நியாயமாய் தீர்ப்பு செய்யக்கூடிய தேவனிடத்தில் தன்னை ஒப்புக் கொடுத்த நம் ஆண்டவரை போல நாம் இருக்க வேண்டும். (1 பேதுரு 2:23)

**R3275 [col.p4,5]:**

"ஒருவரையும் அவதூறாக பேச வேண்டாம்." என்று வசனங்கள் அறிவிக்கிறது. இந்தக் காரியத்தை உண்மையான் வெளிச்சத்தில் காணக்கூடிய "ஒவ்வொருவரும் தேவன் பேரிலும், அவருடைய நீதிக்காகவும், பற்றி எரிகிற வைராக்கியத்தை வெளிப்படுத்துவார்கள். அந்த வைராக்கியத்தில் சகல விதமான பலவீனங்களும், பாவங்களும் விசேஷமாக நம்முடைய சொந்த மாம்சத்தில் இருக்கும் குறைகளையும்

சுட்டெரித்துவிடும். ஆனால் ஒருவேளை மற்றவர்களை குறித்து குறை பேசுகையில் தேவனுக்கு, அவருடைய அன்பின் ஆவிக்கும் எதிரிடையாக செயல்படுகிறவர்களாய் இருப்போம். ஆண்டவரின் சரீர அங்கங்களைக் குறித்து நாம் குறைபேசுவது அவருடைய பார்வையில் மிகப் பெரிய தீமையாய் இருக்கும். இந்தத் தீமையை செய்பவர்கள் முதலில் தேவனுடைய இரக்கத்தை இழக்க வேண்டியதாய் இருக்கும். அதற்குப் பின் அவரை விட்டும் அவருடைய சரீரத்தை விட்டும் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடும்."

உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறக்கிறாய், உன் நாவு சற்பனையைப் பிணைக்கிறது. நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, உன் தாயின் மகனுக்கு (சாராளின் உடன்படிக்கையின் கீழ் விசுவாச வீட்டார், கிறிஸ்துவின் சகோதரர்கள்) அவதூறு உண்டாக்குகிறாய். இவைகளை நீ செய்யும்போது *ஶ்ரீ* நான் மவுனமாயிருந்தேன், உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய்; ஆனாலும் நான் உன்னைக் கடிந்துகொண்டு, அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன். தேவனை மறக்கிறவர்களே, இதைச் சிந்தித்துக் கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் நான் உங்களைப் பீறிப்போடுவேன், ஒருவரும் உங்களை விடுவிப்பதில்லை." (சங் 50:19-22)

## 29. வதந்திகள், புறங்கூறுதல், தீயப்பேச்சுகள், அவதூறு பேசுவது போன்ற காரியங்களை தவிர்ப்பதற்கும், வசனங்கள் மூலமாக சரி செய்வதற்கும் என்னென்ன வழி உண்டு?

மத் 18:15-17 "உன் சகோதரன் உனக்கு, விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய் நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக் கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவி கொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவி கொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக."

### R3594 [col.2p4] through R3595 [col.1p6]:

புறங்கூறுதல், பின்னாக பேசுவது, வெட்டிப் பேச்சு போன்ற அனைத்து காரியங்களும் தேவனின் பிள்ளைகளுக்குக் கண்டிப்பாக தடை செய்யப்பட்டிருக்கிறது. ஏனெனில் இந்தக் காரியங்கள் முழுமையாக தேவனின் அன்பின் ஆவிக்கு விரோதமானது. இவையனைத்தும் உண்மையாக இருந்தாலும் இந்தக் காரியங்களை தேவனுடைய பிள்ளைகள் தவிர்க்க வேண்டும். இவைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள மேல் கூறப்பட்ட வசனமே சிறந்த வழியாக நமக்கு காட்டப்படுகிறது. (மத் 18:15-17)

வளர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்களும் இந்தத் தெய்வீக சட்டத்தை உணராமல் தவறுகள் செய்யலாம். ஆகவே குறிப்பாக நம்முடைய ஆண்டவரின் பிரமாணங்களில் இந்தக் கட்டளை விசேஷித்ததாக கொடுக்கப்பட்டுள்ளது. "என்னுடைய கட்டளைகளை நீங்கள் கைக்கொள்வீர்களானால், நீங்கள் எனக்கு சீஷர்களாக இருப்பீர்கள்" ஆகவே இந்த வசனத்தை பார்க்கும் போது இன்னும் அநேகர் கிறிஸ்துவின் சீஷர்களாக வளர்ச்சி அடையவில்லை என்பது தெளிவாகிறது.

புறங்கூறுதல், ஒருவர் பின்னாக பேசுவது, தவறான வதந்திகள் போன்ற காரியங்களை தடுக்கக் கூடிய இந்தச் சட்டத்தை சற்று கவனமாகப் பார்ப்போம்.

முதல் பாதிக்கப்பட்ட இருவர் மட்டுமே ஒன்று கூடி பேச வேண்டும். குற்றம் சாட்டுபவர் மற்ற நபரால் பட்டபாடுகளை அறிவிக்கும் போது, தான் நீதியுள்ளவர் என்பதை வெளிப்படுத்துகிறார். குற்றம் சாட்டின இவரை நாம் "**A**" என்று அழைக்கலாம். மேலும் குற்றம் சாட்டப்பட்டவரை நாம் "**B**" என்று அழைக்கலாம். தங்களுடைய நோக்கங்கள், தங்களை பொறுத்தவரைக்கும் சரி என்ற சிந்தையோடு இவர்கள் இருவரும் "சகோதரர்களாக" சந்தித்து, பேச்சு வார்த்தைகளை நடத்தி, இருவரும் ஒரே முடிவுக்கு வந்தால், பிரச்சனைகள் தீர்ந்துவிடும், சமாதானம் நிலவும்.

இவர்கள் ஒத்துப் போகவில்லை என்றால், "**A**" தன்னுடைய சம்பாஷனைகளை அடிப்படையாகக் கொண்டு அவதூறான காரியங்களை மற்றவர்களிடம் பேசாமலும், தன்னுடைய உற்ற நண்பரிடம் கூட "இதை ஒருவரிடம் சொல்லிவிடாதே, நான் சொன்னேன் என்று சொல்லாதே" போன்ற காரியங்களை சொல்லாமல் இருக்கலாம். இந்தக் காரியத்தை "**A**" மிக முக்கியமானதாக கருதினால், இந்தப் பிரச்சனையை தொடர்ந்து பேச வேண்டும் என்று விரும்பினால், அவருக்கு முன் ஒரு வழி திறக்கப்படுகிறது. இரண்டு பேர் அல்லது மூன்று பேரை "**B**"யினிடம் அழைத்துச் சென்று அவர்களோடு இந்தப் பிரச்சனைகளை கலந்தாலோசித்து, அவர்களின் பார்வையில் சரியான முடிவை அல்லது தீர்வைக் காணவேண்டும். அழைத்து செல்லக்கூடிய நபர்கள், கிறிஸ்துவ குணலட்சணங்களில் வளர்ச்சி அடைந்தவர்களாயும், நல்ல எண்ணங்கள் உள்ளவர்களும், நல்ல ஆவியை பெற்றவர்களாக இருக்க வேண்டும். இவர்கள் இருத்திரத்தாரினுடைய நியாயங்களை சீர்தூக்கி பார்க்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும். மேலும் சமாதானம் செய்ய "**A**" க்கு சாதகமாக தீர்ப்பு சொன்னாலும், அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தில் "**B**" இருக்கவேண்டும். அனைவரையும் மேற்கொண்டு பேசுவதும், தனக்கு சாதகமாக இரண்டு மூன்று பேர்களை திரட்டிகொண்டு இவர் சார்பாக மட்டுமே பேசக்கூடியவர்களாயும், "**B**"க்கு விரோதமாக தீர்ப்பு சொல்லவேண்டும் என்று முன் கூட்டியே தீர்மானித்து, அங்கு கூறும் காரியங்களை நம்முடைய ஆண்டவரின் சட்டத்திற்கும் அவருடைய ஆவிக்கும் முற்றிலும் விரோதமாக இருக்கும்.

"**B**"க்கு விரோதமாக தீர்ப்புச் சொல்லப்பட்டால் அவர் அதை கேட்டுக் கொள்ள வேண்டும். அவர் அவர்களுக்கு செவி கொடுக்கவேண்டும். அவர்களுடைய தீர்ப்பு நீதியுள்ளதாக இருந்தால், "**B**"யினிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். இப்படி நடந்தால், இருதரப்பினரும், மற்றவர்களிடம் இந்தக் காரியத்தை குறித்து பேசுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

தீர்ப்புகள் "**A**"வுக்கு பாதகமாயிருந்தால், அதை அவர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டு, தன்னுடைய குற்றத்தை ஒத்துக் கொள்ளாவிட்டால், நம்முடைய ஆண்டவரின் பிரமாணங்களை மீறுபவராக இருப்பார். மற்றவர்களின் தீர்ப்பு தனக்கு விரோதமாக இருப்பதை அறிந்து, அவர்களில் ஒருவரையும் நம்பமுடியாத சூழ்நிலை வரும்போது, தனக்குள்ளிருக்கும் தற்பெருமையான எண்ணங்களை உணர்ந்து அதை அகற்ற தேவனுடைய கோட்பாடுகளையும், நீதியையும் கவனத்தோடு வாசித்து அறிய வேண்டும். ஆனால் "**A**" இதை விட்டுவிட்டு, சபையாரிடத்திலோ, பொதுவாக இந்தக் காரியத்தைக் குறித்து எதையும் பேசக் கூடாது. ஒரு வேளை "**A**" அப்படிச் செய்தால், தீய ஆவியினால் ஏவப்பட்டு சத்தியத்திற்கும், அன்பின் ஆவிக்கும் விரோதமாக செயல்பட்டு தேவனுடைய ஆவிக்கு கீழ்ப்படியாமல் இருப்பவராக காணப்படுவார்.

வந்தவர்கள் "**B**" க்கு எதிராக தீர்ப்பளித்து "**A**" க்கு சுமாரான தீர்ப்பளித்தால், பாதிக்கப்பட்ட இருவரும் சமாதானத்தோடு பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும். அதற்குப் பின் மற்றவர்கள் யாரும் இதில் தலையிட வேண்டிய அவசியமில்லை.

ஒருவேளை "**B**" க்கு எதிராகவும், "**A**"க்கு சாதகமாகவும் அனைவரும் ஏக மனதோடு தீர்ப்பு கூறும் பட்சத்தில், "**B**" அவர்களின் தீர்ப்புக்கு கவனம் செலுத்தாமல் தன்னை திருத்திக் கொள்ள முயற்சிகாமல், "**A**"வை மீண்டும் துன்புறுத்தினால், அதற்குப் பதிலாக "**A**" அல்லது அங்கு வந்த நபர்களும் "**B**" ன் மேல் பழிச்சொல்லக்கூடாது. அதற்குப் பின் "**A**" இந்தக் காரியத்திற்குத் தீர்வு காணவேண்டும் என்று எண்ணினால் பிரச்சனையை சபைக்கு முன் கொண்டு வரவேண்டும். சபையின் முடிவுக்கு இருவரில் ஒருவர் கட்டுப்படாத பட்சத்தில் அவர்கள் மனந்திருந்தி சபையின் ஐக்கியத்தில் இணையும் வரையில் இவர்கள் ஆயக்காரனைப் போல பாவிக்கப்பட வேண்டும்.

ஒருவருடைய கடமையை மற்றொருவர் ஏற்றுக் கொள்ள முடியாது. ஒவ்வொருவரும் ஆண்டவருடைய கட்டளைக்குத் தனிப்பட்ட முறையில் கீழ்ப்படிய வேண்டும். ஒரு வேளை தேவனுடைய பிரமாணங்களை மீறி சபைக்குள் பிரச்சனைகள் எழும்போது, தேர்வு செய்யப்பட்ட சபை முக்கியஸ்தர்கள் அந்தப் பிரச்சனையை கையாள வேண்டும். இவர்கள் பிரச்சனையை தீர விசாரித்து குற்றம் செய்தவர்களை எச்சரித்து, திருத்த வேண்டும்.

ஆனால் அனைத்து விதமான கடிந்து கொள்ளுதல்களும் அன்பின் அடிப்படையில் நடப்பிக்கப்பட வேண்டும். ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் பலவீனராகவும், அபூரணராகவும் இருக்கிறோம் என்பதை மறந்து விடக்கூடாது. ஒவ்வொரு விஷயத்திலும் தண்டிப்பதற்கு அல்ல, திருத்துவதற்கே முயற்சிக்க வேண்டும். நம்முடைய ஆண்டவர் மட்டுமே தண்டிப்பதற்கு அதிகாரம் பெற்றவர். மனம் வருந்தாமல், குற்றம் உணராமல் சபையின் ஐக்கியத்திலிருந்து விலகினால், பகிரங்கமாக மனம் வருந்துதலை வெளிப்படுத்தி ஐக்கியத்தில் ஒன்று சேர வேண்டும். நம்முடைய அன்பு, சமாதானம் சந்தோஷம் அனைத்தும் நம்முடைய ஆண்டவர் தந்ததே. ஆகையால் சீஷர்களாக இயேசுவை பின்பற்றக் கூடிய நாம் இவைகளை (அன்பு, சந்தோஷம் சமாதானம்) தவிர வேறு எந்த முறைகளை நாம் பயன்படுத்தினாலும் மற்றவர்களை காயப்படுத்திவிடும்.

இப்படியாக நம்முடைய உண்மையான சீஷர்களை இப்படிப்பட்ட பாவங்களிலிருந்து காத்துக் கொண்டார். இல்லாவிட்டால் மாம்சத்தின் கிரியைகளும், சாத்தானின் வஞ்சகங்களும் சத்தியத்தையும், அன்பின் ஆவியின் வளர்ச்சியையும் தடுத்திருக்குமே. வதந்திகளையும், தீய பேச்சுக்களையும், அவதூறுகளையும் கேட்கச் கூடியவர்கள், அந்தத் தீமையான கிரியைகளின் பங்காளிகளாவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இவர்கள் ஆண்டவரின் கட்டளைகளை மீறுகிறவர்கள். எனவே இப்படிப்பட்டக் காரியங்களை தேவனுடைய உண்மையான ஜனங்கள் கேட்பதற்கு மறுக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஆண்டவரின் அதிகாரப் பூர்வமான தேவனை விட ஞானவான்களா?" என்ற வார்த்தைகளை எடுத்துரைக்க வேண்டும்.

## 30. மூப்பருக்கு எதிராக பேசப்படும் தீமையான அல்லது தவறான காரியங்களைக் குறித்து நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

1 தீமோதி 5:19 "மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் நீ ஏற்றுக் கொள்ளக் கூடாது."

**F293 through F294 –** மூப்பர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுகள்

அப்போஸ்தலர் தன்னுடைய வாக்கியத்தை கொண்டு இரண்டு கோட்பாடுகளை குறிப்பிடுகிறார்.

1.மூப்பர்கள் சத்தியத்திற்கும் தேவபக்திக்கும் மிகுந்த வைராக்கியம் காட்டுபவர்களாக இருப்பதால் தங்களுடைய மேன்மையான குண நலங்களை கொண்டு சபையோர் அனைவராலும் முன்னதாகவே அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறார்கள்.

2. சில நேரங்களில் சபையில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த நபர்களை தன்னுடைய வேலைகளை செய்வதற்காக சாத்தான் பயன்படுத்தலாம். *ஸ்ரீ* பகை, விரோதம், பொறாமை, மூர்க்கம் போன்ற குணங்களை இவர்களை கொண்டு அவனுடைய சித்தத்தை சபையில் செயல்படுத்துவார்கள்." என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்." "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்." "வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா? (மத் 10:25, யோவன் 15:18, 1 யோ 3:13) என்று நம்முடைய ஆண்டவர் இவர்களை குறித்து எச்சரிக்கிறார். விசுவாசமும், திறமையும் உள்ள சகோதரர் கிட்டத்தட்ட ஆண்டவரின் சாயலைப் பெற்றவர், மூப்பருக்குரிய ஓரளவு தகுதி பெற்றவர். இவருக்கு சாத்தான் மற்றும் சீர்கெட்ட தூதர்கள் மட்டுமே எதிரிகளாக இருப்பார்கள். அப்படிப்பட்டவரைக் கூட சாத்தான் தவறான பாதையில் வழி நடத்திவிடலாம். ஆகையால் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

இந்த காரணங்கள், எந்த ஒரு நபரும் சொல்லும் வார்த்தையை வைத்து மூப்பரை குற்றப்படுத்தாதபடி உறுதி செய்கின்றன, அப்படியில்லாவிடினும் அவருடைய வாழ்க்கை குற்றமற்றதாக இருக்கலாம். காதில் விழுந்த காரியம் அல்லது வதந்திகளைப் பொறுத்த வரையில், அவைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவே கூடாது. ஏனெனில் உண்மையாகவே நுகத்தை சுமக்கிற எவனும், ஆண்டவருடைய ஆட்சிய கவனத்தில் கொண்டுள்ளவனாய் இருக்கும்போது, வதந்திகளைப் பரப்பமாட்டான், இல்லையெனில், ஆண்டவருடைய நடத்துதல்களை இப்படியாக உதாசினம் பண்ணுகிறவர்களின் வார்த்தையில் நம்பிக்கை வைக்கமாட்டான். முதலாவதாக, அவைகளுக்குச் செவி கொடுப்பதற்கு குற்றம் சாட்டுபவர்கள் சாட்சிகளாக இருந்ததாக கூற வேண்டும். மேலும் இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் புகார் கூறினாலும் ஏற்கெனவே வரையறுக்கப்பட்டதைக் காட்டிலும் மேலதிகமாக விஷயத்தை விசாரிப்பதற்கு வேறு வழி இல்லை. மூப்பருக்கு எதிராகப் புகார் கூறும் எந்த ஒரு நபரும், தனிப்பட்ட ஆலோசனையும் பயன் அளிக்காத பட்சத்தில், அவரோடு இரண்டு அல்லது மூன்று சாட்சிகளை வைத்துக் கொள்வார், அவர்கள் இவ்விதமாக பிடிவாதமான எதிர்ப்புக்கு சாட்சிகளாவார்கள். அதன் பின்னர், இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கும்போது, தீமோத்தேயுவினால் அல்லது வேறு எவர் மூலமாகவாவது சபையினிடத்திற்கு கொண்டு வரப்படலாம்.

குற்றம் சாட்டுவதற்கு இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் இருக்க வேண்டும் என்பது, எல்லா அங்கங்களையும் மதிப்பதற்கு தேவையானதாகும். உண்மையிலேயே அப்போஸ்தலர், எந்த சகோதரருக்கும் மூப்பர் எல்லா உரிமையும், சிலாக்கியத்தையும் கொடுக்க வேண்டும் என்று நினைத்தாரோ என்று யோசிப்பதற்கு இடம் இருக்கிறது. ஒரு மூப்பர் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் நன் மதிப்பைப் பெற்றவராக இருப்பதினிமித்தம்,

ஒரு சிறிய குற்றச் சாட்டுக்கும், அவருடைய உயர்ந்த ஸ்தானத்தினிமித்தம் விசாரிக்கப்படல் வேண்டுமா என்று ஒரு வேளை சிலர் நினைக்கலாம். ஆனால், அப்போஸ்தலருடைய வார்த்தையின்படி ஒரு மூப்பருக்குக் கிடைக்க வேண்டிய தருணம் மற்றவர்களுக்குக் கிடைப்பதைப் போலவே சரிசமமாக இருக்க வேண்டும்.

இந்த சாட்சிகள் என்ற விஷயம் ஒவ்வொரு புது சிருஷ்டியின் மனதிலும் ஆழமாக பதிக்கப்பட வேண்டும். மற்றவர்கள் தங்களுக்குத் தெரியும் என்று சொல்லுவதும், அவதூறாக அவர்கள் சொல்லுவதும் கேட்கப்படக் கூடாது. மேலும், ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது. ஆண்டவர் கூறியுள்ளபடியே இரண்டு அல்லது மூன்று பேர், யாராவது ஒருவருக்கு எதிராக புகார்களைக் கொண்டு வருவார்களானால், புறம் பேசாமல், அவதூறு பேசாமல், ஆனால் கட்டளையிட்டபடி சபைக்கு முன்பாகக் கொண்டு வரும்போது, அந்த வேளையில் அவைகளை நம்பக்கூட வேண்டியதில்லை. ஆனால் அந்த வேளை தான் சபை செவி கொடுப்பதற்கேற்றதாகும். இரு தாராரும் வந்திருக்கும்போது அவர்கள் முன்னிலையில் கேட்க வேண்டும், அதன் பின்னர் தேவ பயத்துடன் கூடிய தீர்மானத்தையும், எச்சரிப்பையும் கொடுக்க வேண்டும். அதுவும் குற்றம் செய்தவரை வெளியில் உள்ள இருளுக்குள் தள்ளாமல், அவரை மறுபடியும் நீதிக்குள்ளாக வரும்படியாக, வார்த்தைகள் கவனமானவைகளாக அவருக்கு உதவி செய்கிறவைகளாக இருக்க வேண்டும்.

**F418[p1,2]:**

ஒரு தனிப்பட்ட நபர் மனக்குறைப்பட்டாலும் அனைவரும் அனுறிந்தபடி தனிநபர் பாவம் செய்தாலும், மூப்பர்கள் தனிப்பட்ட முறையில் விசாரிக்காமல் சபைக்கு முன், இந்தக் காரியத்தை கொண்டு வந்து, விசாரணை நடத்த வேண்டும். அதே போல மூப்பருக்கு எதிராக ஒருவர் வதந்திகளை பரப்பினால், தனிப்பட்ட முறையில் அவரை விசாரியாமல் சபையில் விசாரிக்க வேண்டும். ஒரு வேளை இவர்களின் நோக்கம் நியாயமான காரணங்கள் கொண்டிருந்தாலும், ஆண்டவரின் கற்பனையை மீறுபவர்களாக இருப்பார்களே. (முதலில் ஒருவராக போய், பேச வேண்டும், திருந்தாவிட்டால் இருவர் அல்லது மூன்று பேர்களோடும் போய் பேச வேண்டும்) அவதூறு செய்யும் நோக்கத்துடன், இந்தச் செய்திகளை பரப்பி, ஒருவரை மட்டும் அல்ல அநேகரிடம் சென்றடைந்ததினால், இந்த காரியங்கள் சபைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட விஷயத்தில் குற்றம் சாட்டப்பட்ட அந்த மூப்பர், மூப்பர்களின் கூட்டத்தை கூட்ட வேண்டும். அதற்குப் பின் அவர் மேல் சொல்லப்பட்டக் குற்றச் சாட்டை மறுத்து, விளக்கம் அளித்துவிட்டு குற்றம் சாட்டினவர்களை சபைக்கு முன் கொண்டு வரவேண்டும். சபையின் மூப்பர் விதித்த கற்பனைக்கு எதிராக புறம்கூறி, அவருடைய நல்ல பெயரைக் கெடுத்து குற்றம் செய்திருக்கிறார்கள். சபை ஏக மனதாக தேர்ந்தெடுத்த மூப்பருக்கு விரோதமாக இவர்கள் பேசினதால், முழு சபைக்கு விரோதமாகவும் இவர்கள் குற்றம் புரிந்தவர்களாவார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் கண்டிக்கப்பட்டு எச்சரித்து, அவர்களின் குற்றத்தை உணர்த்த வேண்டும். இவைகளை நடத்தின பின், மூப்பர் தவறு செய்திருந்தால், முன் சொல்லியபடி அவர்களுக்கு எதிராக குற்றம் சாட்டுவதற்கு நியாயமான உரிமையைப் பெறுவார்கள்.

## 31. மூப்பர் தன் நாவுக்கு கடிவாளம் போட வேண்டிய அவசியம் என்ன?

யாக் 3:2 “நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீர முழுவதையும் கடிவாளத்தினாலே

அடக்குக் கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்.”

**R2447 [col.2 p2]:**

சபையின் பொதுவான ஊழியக்கார்கள் விசேஷமாக தங்களுடைய நாவை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் - தங்களுடைய நாவை தீமைக்காகவோ அல்லது சபையோரை ஆசீர்வதிப்பதற்காகவோ, சபிப்பதற்காகவோ? எப்படிப்பட்ட காரியத்திற்கு பயன்படுத்தப்படுகிறது என்று நிதானிக்க வேண்டும். நம்முடைய ஆண்டவரின் சரீரத்தின் நாவாக செயல்படும் ஊழியக்காரர்கள் முழுமையாக அவருடைய ஆவியை பெற்றிருக்க வேண்டியது மிக அவசியமாக இருக்கிறது. இவர்களின் பேச்சுக்கள் சபையில் மட்டும் அல்ல, உலகத்தார் மத்தியிலும் கேட்கப்படுகிறது. சபையின் ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தினர்களுக்கும் கிறிஸ்துவின் நாவாக செயல் படக்கூடிய ஒவ்வொருவருக்கும் இந்தக் கோட்பாடு பொருந்தக் கூடியதாக இருக்கிறது. ஒருவர், தன்னுடைய நாவு ஞானமாகவும் அல்லது ஞானமற்ற முறையிலும், பரலோக ஞானத்திற்கும், அல்லது பூமிக்குரிய ஞானத்திற்கும் பயன்படுத்தலாம். தன் நாவினால் விசுவாசத்தை தகர்த்து, சகோதர்களின் நல்ல பெயரைக் கெடுத்து அன்பையும், நம்பிக்கையையும் தூக்கி எறியலாம். அல்லது ஆவிக்குரிய கனிகளில் வளர்ச்சி அடைவதற்கு ஏதுவாக பயன்படுத்தலாம். விழுந்து போன சுபாவத்தின் விஷம் நிறைந்த தீமையான காரியத்தைப் பேசி, சபையாகிய முழு சரீரத்தையும் கொளுத்தி விடுவதற்கோ அல்லது தூய்மைப்படுத்துவதற்கோ நாவானது பயன்படுத்தப்படுகிறது. தேவனுடைய ஜனங்கள் மத்தியில், தேவனுடைய சித்தத்தை செய்வதற்கும் நன்மையான காரியங்களை பேசுவதற்கும் தங்களுடைய நாவை தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்தவர்கள் வெகு சிலர். ஆகவே தேவனுடைய இரக்கத்தினால் நம்முடைய நாவை தேவனுடைய சித்தத்திற்கு மட்டுமே செயல்படுத்துவோம் என்ற பிரதிதினையை நாம் எடுத்துக் கொண்டு வரக்கூடிய நாட்களில் நம்முடைய சரீரத்தில் மிக முக்கியமாக கருதப்படும் இந்த நாவை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் வைத்து இருளில் இருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவரும் நம்முடைய இராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தரின் ஊழியத்திற்குக் கீழ்ப்படுத்துவோம்.

**R2157 [col.1 p1]:**

சபை கூடுதல்களுக்கு மூப்பர்களை தேர்வு செய்யும் பட்சத்தில் இந்த நாவை குறித்ததான தகுதிகள் மிக முக்கியமாக கவனிக்க வேண்டும். வார்த்தையினால் மற்றவர்களை எரித்துவிடக்கூடிய நபர்களை நாம் தேர்வு செய்யாமல், சாந்தமும், அமைதியும், தங்களால் தங்கள் நாவை கடிவாளத்தால் கட்டுப்படுத்தக் கூடியவர்களையும் தேவனுடைய வார்த்தைகளை மட்டுமே பேசுபவரை நாம் தேர்வு செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நாவு, ஒருவரை குணப்படுத்தும். இல்லாவிட்டால் மற்றவர்களை காயப்படுத்தி விடும். தேவனுடைய வார்த்தைகள் வல்லமையுள்ளதாயும், இருதயங்களை ஊடுருவும் அளவுக்கு கருக்குள்ளதாக இருந்தாலும், எந்த விதமான கசப்புள்ள நோக்கங்கல் இன்றி கூறப்படுகிறது. ஆகவே நாம் பேசக்கூடிய சத்தியம் முழுமையாக, அன்பின் அடிப்படையில் கூறப்பட வேண்டும்.

**F249 [p2]:**

இவர்கள் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்பவர்களும், ஒரே மனைவி உடையவர்களாய் இருக்க வேண்டும். பிள்ளைகள் உடையவர்களாயிருந்தால், தன்னுடைய குடும்பத்தை சரியாக நடத்துபவராய் இருக்க வேண்டும். குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றக் கூடியவர்களாய் இருக்க வேண்டும். அப்பொழுது , சபையில்

உள்ள தேவ ஜனங்களை மிகச் சரியாக நடத்தலாம். அவர் இரு நாவு உள்ளவராகவோ, வஞ்சனை பேசுபவராகவோ, சண்டையிடுபவராகவோ வாக்குவாதம் செய்கிறவராகவோ இருக்கக் கூடாது. சபைக்கு வெளியிலும் இவர் நல்ல பெயரை பெற்றவராக இருக்க வேண்டும். இந்த உலகம் பொதுவாக பரிசுத்தவான்களை மெச்சிக் கொள்வதில்லை. ஆனாலும் பரிசுத்தவான்களின் நேர்மை, நீதி, உண்மை போன்ற குணங்களுக்கு இந்த உலகம் மெச்சிக் கொள்ளும். ஒரு சபையின் தேவைக்கேற்றபடி மூப்பர்களை தேர்வு செய்யலாம்.

## 32. தவறான காரியங்களை அல்லது தீமையான காரியங்களை பேசாதபடிக்கு நாம் என்னென்ன அறிவுரைகளை கேட்டுக் கொள்ள வேண்டும்?

**F292 [top of page]:**

ஒருவரைப் பற்றி தவறாக கூறுவது நம்முடைய ஆண்டவரின் ஆவிக்கும் தேவனுடைய வார்த்தைகளுக்கும் எதிரிடையாக காணப்படுகிறது. ஒருவரிடம் அறிவுரைகளைக் கேட்பதற்கு கூட நாம் மற்றவர்களை குறை சொல்லக் கூடாது. நம்முடைய ஆண்டவரின் அறிவுரைகளை ஏற்றுக் கொண்டு இதை பின்பற்ற வேண்டும். விசித்திரமான விஷயங்களில் மூப்பரிடம் சென்று ஞானமான அறிவுரை கேட்க வேண்டும்.

## 33. பிறர் வேலையில் சம்பந்தமில்லாமல் தலையிடுவது, மற்றும் தீமையாக பேசுவது, இவைகளுக்குள்ள சம்மந்தம் என்ன?

**F 583 [p1] through F 586-conscientious medding. Reproduced at the end of this section,p.355**
**F 403 [p1:3]:**

இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நாம் மற்றவர்களின் காரியங்களில் தேவையில்லாமல் தலையிடும் போது அவரவருக்கு சாதகமாக அநேக வெட்டிப் பேச்சுக்களை பேசிவிடுவோம். அப்போது நம்முடைய இருதயத்திற்குள் தேவனுடைய அன்பும் இரக்கமும் குறைவானதாயும், உலக காரியங்கள் அதிகமாய் இருப்பதையும் நாம் புரிந்து கொள்ளலாம். நம்முடைய இருதயத்திற்குள் இப்படிப்பட்ட நிலை காணப்படும் பட்சத்தில், உடனடியாக கிருபாசனத்தண்டையில் சென்று தேவனுடைய ஆவி நமக்குள் நிரப்பப்பட ஜெபிக்க வேண்டும். ஏனெனில், தேவனுடைய நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்களுக்கு தேவ ஆவி கொடுக்கப்படும் என்று நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை இந்த வெட்டிப் பேச்சுகளும் மற்றவர்களை குறித்து, பேசக்கூடிய காரியங்களும் நமக்கு மகிழ்ச்சியை தந்தால் நம் இருதயத்தின் நிலை இன்னும் மோசமாகிவிடும். கசப்பான பகை, குரோதம், பொறாமை போன்ற காரியங்கள் நிரம்பி வழிய துவங்கும். இவைகள் அனைத்தும் மாம்சத்தின் கிரியைகள் என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். (கலா 5:19-21) இந்தப் பாடத்தை பொறுத்த வரையில் “புது சிருஷ்டி” விழித்திருந்து எச்சரிப்போடு இருக்க வேண்டும். ஏனெனில், தனக்குள் தேவனுடைய ஆவியை நிரப்பாத பட்சத்தில் தேவனுடைய நித்தியமான இராஜ்யத்திற்குள் அனுமதி பெற இயலாது.

இப்படிப்பட்ட காரியங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குள் நடத்துவதற்கு எதிராக நம்மை வழி நடத்தும். “இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களா உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே

இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன் செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை." (11 பேதுரு 1:5-11) என்ற அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறார். "உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுவாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது." (யாக் 3:14,15) என்று யாக்கோபு கூறுகிறார். வெட்டிப் பேச்சு, கசப்பான ஆவி உடைய ஒருவரும், அன்பின் ஆவி, கிறிஸ்துவின் ஆவி மற்றும் தேவனுடைய பரிசுத்த ஆவிக்கு நேர்விரோதமாக செயல்படுகிறவர்களாக இருப்பார்கள். ஆகவே வெளிச்சத்திற்கு பதிலாக இருளையும், அபிஷேகத்திற்கு பதிலாக சாத்தானுடைய ஆவியையும் நிரப்பி, தன்னுடைய தீச்செயல்களுக்கு மேன்மை பாராட்டி தன்னையும், மற்றவர்களையும் வஞ்சிக்கிறவராய் இருக்கலாகாது.

எல்லா நேரங்களிலும் தேவனுடைய ஜனங்கள் இப்படிப்பட்ட அசுத்தங்களினால் மாசுபட்டு குழப்பங்கள் அடைந்து வேதனை படக்கூடிய காரணத்தை அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். "வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு." (யாக் 3:16) விழுந்து போன மாம்ச நிலைக்கு ஒப்பிடப்படும் இந்தக் களைகள் வளர்வதற்கு அனுமதித்தால் அவைகள் வளர்ந்து, அருமையாக பூத்துக் கொண்டிருக்கும் செடிகளை அடையாளப்படுத்தும் ஆவியின் கனிகளை நெருக்கி கொன்று போட்டுவிடும்.

## 34. புறங்கூறுதலையும் வெட்டிப் பேச்சுக்களையும், வதந்திகளையும் மேற்கொள்வதற்கு தேவனுடைய தெய்வீக பிரமாணம் நமக்கு எப்படி உதவி செய்கிறது?

**F 407 –** நாம் நம்மை நியாயம் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

"நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" 1 கொரி 11:31

மற்றவர்களை குறித்தான பிரச்சனைகளையும், வெட்டிப் பேச்சுக்களையும் பேசுபவர்களின் பலவீனத்தையும் தெய்வீக பிரமாணம் நிச்சயமாக மேற்கொள்ளும். இப்படிப்பட்ட வெட்டிப்பேச்சுகள், வதந்திகள், மற்றவர்களின் பிரச்சனைக்கான விபரம் - இவைகளை தவிர பேசுவதற்கு இந்த உலகத்திற்கு ஒன்றுமில்லையே. ஆனால் தேவனுடைய திட்டங்களும், "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக" என்று தூதர்கள் பாடின பாட்டின்" முழுமையாக நிறைவேறும் காலம் வரைக்கும், புது சிருஷ்டிகள் இவைகளை சிந்தித்து கொண்டும் , வாயினால் பேசிக்கொண்டும் , மற்ற உலக காரியங்களுக்கு மௌனமாய்

இருப்பதே நலமாக இருக்கும். இவைகளே, தேவன் அங்கீகரிக்கக்கூடியதும், ஆசீர்வதிக்கக் கூடியதாய் இருக்கிறது.

அப்போஸ்தலர் நாவை குறித்துப் பேசுகையில் நம்முடைய சரீரத்தில் உள்ள அவயவங்களில் இது மிகவும் வல்லமயுள்ளது என்று காட்டுகிறார். அவைகள் பேசக்கூடிய அன்பான வார்த்தைகள் என்றும் அழிவதில்லை. ஜீவனுள்ளோருக்கும், இன்னும் பிறவாதவர்களுக்கும், ஆசீர் வழங்கக் கூடியதாய் இருக்கிறது. அல்லது விஷம் நிறைந்த வார்த்தைகள் மற்றொருவரின் வாழ்க்கையை கசப்பாக்கி அவருடைய ஜீவனை கொடூரமாய் நசுக்கி விடுகிறது. ஆகவே “துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? என் சகோதேரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது.” (யாக் 3:8-11) என்று அப்போஸ்தலர் இயல்பான மனுஷ சுபாவத்தை தெய்வீக சட்டத்திற்கு உட்பட்ட உண்மையான ஆவிக்கேற்ற சுபாவமாக மாற்றுவதற்கு நியாயப்பிரமாணம் முயற்சித்தது என்று அப்போஸ்தலர் விவரிக்கிறார். ஆயினும் அந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்ட சில தடைகள் “இதை செய்யாதிருப்பீர்களாக” என்று சொல்லக்கூடிய காரியங்கள் தெய்வீக சித்தத்திற்கு எதிராக மற்றவர்களை துன்பப்படுத்த கூடாது என்பதற்காக கொடுக்கப்பட்டது. தேவனுடைய வீட்டில் ஊழியக்காரர்களுக்கு இந்தப் பிரமாணங்கள் போதுமானதாக இருந்தது. ஆனால் தேவனுடைய வீட்டில் புத்திரர்கள் குடியேறின போதோ, (எபி 3:5,6) அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதினால், அன்பின் பிரமாணத்தை முழுமையாக உணர்ந்து நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் அதிகமாகவும் இன்னும் ஆழமாகவும் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படுகிறார்கள். “கொலைச் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, விபச்சாரம் செய்யாதிருப்பாயாக” - என்ற பிரமாணங்கள் “புது சிருஷ்டி” மட்டுமே கொண்டிருக்கும் அடிப்படையான அன்பின் பிரமாணத்திற்கு முரண்படாக இருக்கும்.

ஆனால் புதிய உடன்படிக்கையில் உள்ள புதிய பிரமாணமாகிய அன்பு - யூத உடன்படிக்கையை அடிப்படையாக கொண்டுள்ள நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் மிக ஆழமாக புரிந்து கொள்ளக்கூடிய இருக்கிறது. “செய்ய வேண்டாம்” என்று சொல்லப்படும் பிரமாணங்கள் ஏதாகிலும் இருப்பினும் அது தேவனுடைய சட்டத்திற்கு முரண்பாடாய் இருக்குமே. ஆகவே “உங்களை நேசிப்பது போல பிறனையும் நேசிப்பாயாக” என்று சுருக்கமாய் சொல்லப்பட்டிருக்கிறது. அன்பின் பிரமாணம் அநேக அத்துமீறிய காரியங்களை தடுத்துவிடுகிறது. எடுத்துக்காட்டாக பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்க “உண்மையான குற்றச்சாட்டையும்” பேசக்கூடாது என்று அன்பின் பிரமாணம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பிள்ளைகளுக்கு கூறுகிறது. அதாவது உண்மையாக இருந்தாலும் அவைகளை பேசக்கூடாது என்ற கட்டளை கொடுக்கப்படுகிறது. ஒருவேளை இப்படிப்பட்ட காரியங்களை பேசுவது நம்மேல் விழுந்த கடமையாக இருக்கும் பட்சத்தில் எந்த விதமான பகை, விரோதம், கசப்பு போன்ற காரியங்களை அடிப்படையாக கொள்ளாமல், அன்பின் அடிப்படையில் நாம் பேச வேண்டும். தேவனுடைய புத்திரர் இப்படிப்பட்ட பிரமாணத்தை அவர்களுக்குள் மட்டுமல்லாமல் அவர்களின் நண்பர்கள் உற்றார் உறவினர் இன்னும் தங்களின் பகைவர்களுக்கும் அன்பை செயலாற்றினால் வேறெந்த குற்றங்களையும் செய்வதற்கும் வாய்ப்பில்லாமல் தங்களைத்தாங்களே எல்லா விதத்திலும் மகிழ்ச்சியுடன் பலி

செலுத்துபவர்களாய் இருப்பார்களே. “கூடுமானால் விசுவாச வீட்டாருக்கும் நன்மை செய்யுங்கள்” இதுவே நம்மைப் போல் பிறரையும் நேசிப்பதாகும்.

பொன்னான பிரமாணம் - அன்பு

இந்த அன்பு மற்றவர்கள் ஆசீர் பெறுவதற்கு கிரியை செய்கிறது. “அன்பு மற்றவர்களுக்கு தீங்கு நினையாது” என்பதை நிறைவேற்றுகிறது. ஆண்டவரிடத்தில் உடன்படிக்கை செய்த ஜனங்களாய் இருக்கும் நாம் அன்றாட வாழ்க்கையில் இதை பழக்கப்படுத்த முயற்சிக்காமல், நம்முடைய கரங்களினால் ஏற்படும் காயங்களை காட்டிலும் நாவினால் ஏற்படும் காயங்கள் மிக ஆழமானது என்பதை அறிந்து வார்த்தைகளை நாம் கட்டுப்படுத்த பழகி, நம்முடைய வார்த்தைகளினால் ஒரு சகோதரையாவது ஒரு அயலானையாவது காயப்படுத்தாமல் இருப்போமா? ஒரு சகோதரனையோ, அயலானையோ குறித்து பேசும் கனவீனமான வார்த்தைகள் நிச்சயமாக அவர்களை காயப்படுத்துவதினால் தேவனுடைய அன்பின் பிரமாணத்தை (பொன்னான பிரமாணத்தை) நாம் மீறுகிறவர்களாய் இருப்போமே, ஒருவர் மற்றவரினால் பாதிக்கப்பட்டு நஷ்டமடையும் பட்சத்தில் மட்டுமே நாம் இப்படிப்பட்ட உண்மைகளை தேவையான அளவுக்கு அறிவிக்க வேண்டும் என்பதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்?

இப்படிப்பட்ட எச்சரிப்பை கொடுப்பதற்கு முன் நாம் பல முறை யோசித்து சீர்தூக்கிப் பார்த்து அதற்குப் பின் தேவைப்பட்டால் உண்மைகளைச் சொல்ல வேண்டும். மேலும் அவர்களை குறை சொல்லுவது நம்முடைய நோக்கமாயிராமல் அவரை அழிவிலிருந்து மீட்டுக் கொள்வதற்காக நாம் சில காரியங்களை பகிர்ந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். குற்றம் புரிந்த நபர் (மத் 18:15) வசனத்தின்படி தன்னை திருத்திக் கொள்ளாத பட்சத்தில் அவரிடம் தனியே சென்று இதை குறித்துப் பேசலாம். காரியங்கள் முக்கியமாக இருக்கும் பட்சத்தில் வேரிரண்டு பேரை அழைத்துச் சென்று பேசலாம். அப்போதும் திருந்தாவிட்டால் நாம் இந்தக் காரியத்தை மற்றவர்களிடம் பேச அனுமதிக்கப்படுவதில்லை, மாறாக சபையில் உள்ளே அழைத்து அவர்களின் ஆலோசனையைக் கேட்க வேண்டியதாயிருக்கும்.

அன்பு பிறருக்கு தீங்கு செய்யாது மற்றும் “தீமையானதையும் எண்ணாது” என்ற வாக்கியங்களின் அர்த்தங்களை நாம் ஆழமாக கற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் நம்முடைய நாவு அல்லது கிரியை எந்த விதமான தவறான நோக்கங்களின் அடிப்படையைக் கொண்டிராமல் தீமை செய்யும் பட்சத்தில் இப்படிப்பட்ட அன்பை செயல்படுத்துவதின் மூலம் பிரமாணத்தை நிறைவேற்றக் கூடியவர்களாய் இருப்போம். குறிக்கப்பட்டுள்ள பரிசுப் பொருளை நாம் அடைந்ததாக எண்ணிவிட முடியாது. நாம் பொறுமையோடு நம்மை நாம் இந்தத் தெய்வீக பிரமாணத்திற்குட்படுத்தி வாழ்க்கையில் செயலாற்றினால் தேவனுடைய இராஜ்யத்தின் பங்காளிகளாக அங்கீகரிக்கப்பட்டு இன்னும் பெரிதான ஆசீர்வாதங்களைப் பெறுவோம்.

**R2688 [col.2 p2,3]:**

ஆனால் இந்த அன்பின் பிரமாணம் தெய்வீக நீதியை நமக்குள் புகுத்தி அதற்கும் மேலாக தயையையும் தாராள குணத்தையும் நமக்குள் வளர்ச்சியடையச் செய்கிறது. இப்படிப்பட்ட மன நிலைகள் இருக்கும் பட்சத்தில் ஒருவருடைய இக்கட்டான காலங்களில் மனப்பூர்வமாய் உதவலாம். ஆண்டவரின் உண்மையான பரிசுத்தவான்கள் எப்படிப்பட்ட ஆவிக்குரிய குணலட்சணங்களில் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள் . இப்படிப்பட்ட

பொன்னான பிரமாணத்தின் மூலமாகவே இப்படிப்பட்ட மாற்றங்களை கொண்டுவரமுடியும். இது வாழ்க்கையின் கிரியைகளை மட்டும் பாதிக்காமல் தாங்கள் சந்திக்கக்கூடிய அனைவரிடமும் முதலில் நீதி நடப்பிக்கப்படும். அதற்குப் பின் எந்தவிதமான எதிர்ப்பார்ப்புமின்றி அவர்களை காயப்படுத்தாமல் அவர்களின் தேவைக்குத் தகுந்த உதவிகள் செய்யப்படும். கூடுதலாக இந்த அன்பின் பிரமாணம் பேசப்படும் ஒவ்வொரு வார்த்தைகளிலும் காணப்படுகிறது. இந்தப் பிரமாணத்தின் கீழ் கசப்பும், கோபமும், அவதூறான வார்த்தைகளும் காணப்படுவதில்லை. இப்படிப்பட்ட வார்த்தைககளை பிறர் பயன்படுத்தக் கூடாது என்று நாம் எந்த அளவுக்கு நாம் எதிர்பார்க்கிறோம். ஆச்சரியமல்ல. கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டவர்கள் - கோபம், பகை, விரோதம், பொறாமை, அவதூறு பேசும் அனைத்து வார்த்தைகளையும் களைந்து போடவேண்டுமென்று அப்போஸ்தலர் கூறுகிறார். கூடுதலாக இப்படிப்பட்ட வார்த்தைகளை களைந்து போடுவது மட்டுமல்ல, கனிவான வார்த்தைகளையும் அன்பான கிரியைகளையும் நடப்பிப்பதற்கு இந்தப் பிரமாணம் நம்மை வழி நடத்தும். அப்போஸ்தலர் மீண்டும் கூறுவது போல "இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டீர்களே." "ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களுமாயிருங்கள்." (கொலோ 3:8-10, 12-15)

இந்தப் பொன்னான பிரமாணம் வெளிப்புறமான கிரியைகளில் துவங்கி நம்முடைய வார்த்தைகளில் காணப்பட்டு வெகு சீக்கிரத்தில் நம் சிந்தையை வந்தடையும். நம் கிரியைகளையும் வார்த்தைகளையும் கொண்டு பிறர் நம்முடைய தேவனுடைய பிள்ளைகளென்று புரிந்து கொள்ளும்படியாக மற்றவர்களை குறித்து நம்முடைய சிந்தைகளும் கிரியைகளும் மிகவும் தாராளமாக தயவுள்ளதாகவும் இருக்க வேண்டும்.

## 35. "ஒருவரையும் தூஷிக்க வேண்டாம் என்ற கற்பனைக்கு விதிவிலக்கான ஒரே காரியம் என்ன?

நம்முடைய இருதயத்தின் விருப்பம் தீமையாக இருப்பதற்கு பதிலாக மற்றவர்கள் மேல் நாம் வைத்திருக்கக்கூடிய அன்பு அதிகமாய் காணப்பட்டு அவர்கள் நஷ்டமடையாதபடிக்கும், காயப்படாதபடிக்கும் உண்மையான தீய காரியங்களை அறிவிப்பதற்கு அனுமதி பெறுகிறோம். இதுவே இந்தப் பிரமாணத்தின் ஒரே விதிவிலக்கான காரணம். ஏனெனில் நாம் இதை அறிவிக்காத பட்சத்தில் மற்றவர் நஷ்டமடைந்து விடுவாரே. எடுத்துக்காட்டாக ஒரு கொலை நடந்துவிட்டால் அதைக்குறித்து பேசிக் கொண்டிருப்பதை காட்டிலும் சட்டத்திற்குட்பட்ட மேலதிகாரியிடம் அந்த உண்மையை அறிவிப்பது கடமையாக இருக்கும். அதே போல ஒருவரிடம் இருக்கக்கூடிய பலவீனங்களை நாமறிந்தால், அந்தப் பலவீனத்தினால் ஓர் அபாய நிலையை அடைந்து கொண்டிருக்கிறார்கள்,

என்பதை நாம் உணரும்போது அதை முறைப்படி அறிவிப்பது நம்முடைய கடமையாகும். சபைக்காவது சரி அல்லது தனிப்பட்ட நபருக்காவது நாம் அறிந்த உண்மைகளை மட்டுமே அறிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட காரியங்களை பேசுவது அவதூறாயிராது. மாறாக சம்பந்தபப்ட்ட நபரை வீழ்ச்சியிலிருந்து தப்புவிக்கும். ஏனெனில் இது நல்ல நோக்கத்துடன் பேசப்பட்டது. இப்படிப்பட்ட காரியங்களை பேசுவதற்கு முன் நம்மை நாம் சீர்தூக்கி, ஆராய்ந்து பார்க்க வேண்டும். நம்முடைய நோக்கம் சரியானதா? நம்முடைய நாவு மற்றவர்களை காயப்படுத்த பயன்படுகிறதா? அல்லது ஆசீர்வதிக்கப் பயன்படுகிறதா என்பதை நமக்குள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இதன் மத்தியில் பலவீனப்பட்ட நபரிடம் மிகுந்த அன்பை காட்டி அவர்களை மீண்டும் சத்தியத்தின் பாதையில் நடத்த முயற்சிக்க வேண்டும். அவர்களின் தவறை ஓயாமல் சுட்டிக் காட்டுவதை தவிர்க்க வேண்டும். அந்தப் பிரச்சனைக்கு தேவைபடாத அந்த நபரின் பலவீனத்தை எதற்கும் மேற்கோள் காட்டிவிடக் கூடாது.

## 36. இயேசுவின் மாதிரியில் நாம் பெறக்கூடிய ஊக்கமான, உபதேசங்கள் என்ன?

1 பேது 2:23 "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்."

**R2879 [col.2 p1, 2]:**

பொதுவாக (மாம்சத்திலிருக்கும்) சண்டை போடும் குணமுள்ளவர்கள் எப்போதும் பழிவாங்கும் உணர்வில் இருப்பார்கள். ஆனால் நம்முடைய ஆண்டவரிடமிருந்து சுயக்கட்டுப்பாட்டையும், சாந்தத்தையும் சகோதர அன்பையும் தயவும், கற்று கொண்டவர்கள் "தீமைக்கு பதிலாக தீமை செய்யாமலும், வையப்படும் போது பதில் வையாமலும்" என்ற கற்பனையை நிறைவேற்ற ஆயத்தமாய் இருப்பார்கள். நம்முடைய ஆண்டவரை பார்க்கும்போது அவருக்கு ஏற்பட்ட காரியங்களின் விதத்தை நாம் பார்க்கலாம். "அவர் வையப்படும்போது பதில் வையாமலும்", அவருடைய எதிராளிகள் அவர் மேல் எந்தவிதமான குற்றத்தையும் நீதியாக கண்டுபிடிக்கவில்லை. மேலும் அவருடைய எதிராளிகள் அவரை குற்றம் சாட்டும் அளவுக்கு எந்த விதத்திலும் பூரணப்பட்டவர்களல்ல. அவர் தன்னை முழுமையாக தெய்வீக சித்தத்திற்கு ஒப்புகொடுத்ததின் நிமித்தம் அந்த ஜனங்களின் தவறான ஏச்சுப் பேச்சுக்களையும், தூஷணங்களையும் அவர் பொறுமையாய் சகித்து, தன்னுடைய முழு விசுவாசத்தை நிரூபித்து, அவருடைய இரக்கத்தையும், உணர்வுகளையும், அன்பையும் பூரணமாக வெளிப்படுத்தினார்.

கிறிஸ்துவின் சாயலில் வளர்ச்சியடையக்கூடிய நாமும் இப்படிப்பட்ட வளர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும். நாமும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் அகப்படும்போது பழிக்குப் பழி வாங்காமல், அனைத்தையும் சகித்து, மகிழ்ச்சியுடனும் சந்தோஷத்தோடும் சோதனைகளையும், பிரச்சனைகளையும் எதிர் கொண்டு ஜெயிக்க வேண்டும். ஏனெனில் சகல காரியங்களும் நித்தியமான கன மகிமைக்காக இக்காலத்தில் நமக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று அப்போஸ்தலரின் அறிவுரைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இங்கு பேதுருவின் வாக்கியத்திற்கும் நம் ஆண்டவர் பேசின வசனங்களுக்குமுள்ள இசைவை நாம் காணலாம். (பிலி 3:8, 11 கொரி 4:17, மத் 5:44, ரோமர் 12:14) ஆகவே சாபத்திற்கு பதிலாக ஆசீர்வாதத்தை கூற வேண்டுமென்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்தப் பந்தயத்திற்கு முடிவானதும் பூரண அன்பை குறிக்கக்கூடியதும் பகைவரை நேசித்து, அவர்களை ஆசீர்வதிப்பதற்கு மனப்பூர்வமாக ஆயத்தப்பட்டு

இருளிலிருந்து அவர்களை வெளியேற்றும் அளவுக்கு நாம் அந்த உயர்வான ஸ்தானத்தை பெறாவிட்டால் நாம் தெய்வீக திட்டத்தோடு இசைந்திருக்க மாட்டோம். இப்படிப்பட்ட நிலை நமக்குள் காணப்பட்டால் சோர்வடைய வேண்டாம். நம்மால் முடிந்த வரையில் இந்தப் பரிபூரணமான நிலையை அடைவதற்கு எல்லா வழிகளிலும் நித்தமும் முயற்சிக்கலாம். வெகு சீக்கிரத்தில் இந்த நிலையை அடையும்போது "நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்." என்று அப்போஸ்தலர் குறிப்பிடுவது போல நாம் நித்தியமான ஆசீர்வாதத்தை சுதந்தரித்து கொள்ளலாம்.

மன்னா டிசம்பர் 7: "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்." (பேதுரு 2:23)

இயேசுவின் எதிராளிகள் அவர் மேல் நியாயமான குற்றங்களை கண்டுபிடித்துவிட்டு, அதை நிரூபித்ததினால் அவரை திட்டவில்லை. அல்லது அவருடைய எதிராளிகள் ஒரு பூரண நிலையில் இருந்ததினால் இயேசுவினால் எந்தவிதமான குற்றத்தை காணமுடியாததினால் அவர் மௌனமாக இருக்கவில்லை. தெய்வீக சித்தத்திற்கு அவர் தம்மை முழுமையாக அர்ப்பணித்ததினால், அபூரணமான ஜனங்கள் தன்னை திட்டும் போதும், தூற்றும் போதும் அவர் பொறுமையாக இருந்தார். இதனிமித்தம் அவர் அநேக பாடங்களை கற்றுக்கொண்டு, தனக்குள் இருந்த விசுவாசத்தையும், உண்மையான குணங்களையும் நிரூபித்தார். இந்த ஜனங்கள் தங்களுடைய அறியாமையினாலும், குருட்டாட்டத்தினாலும் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்று நன்கு உணர்ந்திருந்தார். ஆகையால், அவர்கள் மேல் அவர் கொண்டிருந்த அன்பு மிகப் பெரியது என்பதை அவர் வெளிப்படுத்தினார்.

**R3091 [col.2p2]:**

தீமையான செய்தியை கொண்டு வந்த பத்து வேவுக்காரர்களைப் பற்றி யோசுவாவுடன் இருந்த காலேபின் தாராளமான வார்த்தைகள் குறிப்பிடுவதற்கு மனரம்மியமாக இருக்கிறது. இவர்களை பற்றி குறைவாக பேசுவதற்கு எவ்வளவு வாய்ப்புகள் இருந்தாலும், தன்னைக் குறித்து மேன்மையாக எண்ணுவதற்கும், யோசுவாவிடம் தன்னை மேன்மையாக காட்டுவதற்கும், அருமையான சூழ்நிலை அமைந்திருந்தாலும், அவர் அப்படிச் செய்யாமல், மிக மேலோட்டமாக அந்தப் பத்து பேரின் தவறுகளை சொல்லி, அதனால் அவர்களை காயப்படுத்தாமலும், கோபமூட்டாமலும், "என் சகோதரர்களே" என்று பாசத்துடன் அழைத்தார். ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கும் இப்படிப்பட்ட மனநிலை காணப்பட வேண்டும். ஏனெனில் நாம் ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டு, அந்த அபிஷேகத்தின் வழியாக "தேவனுடைய ஆழமான காரியங்களை" அறிந்தவர்களாக இருக்கிறோம். மாம்சத்திற்குரிய இஸ்ரயேலர்களைக் காட்டிலும் மேன்மையான பங்கை நாம் பெறவிருக்கிறோம். ஆகவே, புதிய ஜீவனைப் பெற்று ஆவியின் கனிகளில் வளர்ச்சி அடையும் ஒருவர் தன் சகோதரருக்கு விரோதமான தீமைகளை பேசக் கேட்கும் போது "தீமைக்கு பதிலாக தீமை செய்யாதிருங்கள்" என்ற கர்த்தருடைய வார்த்தைகளை நாம் உடனே நினைவில் கொள்ள வேண்டும். ஏனெனில் தீய காரியங்களை பேசுவது மாம்சத்தின் கிரியையாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை என்று அப்போஸ்தலர் முன் அறிவித்திருக்கிறார். இதற்கு மிக சரியான எடுத்துக்காட்டாக நம்முடைய பிரதான தூதனாகிய மிகாயேல் இருக்கிறார். சாத்தான் தன்னோடு வழக்காடுகையில், சாத்தானை

குற்றப்படுத்தாமலும், தூஷிக்காமலும் “கர்த்தர் உன்னை கடிந்து கொள்வார்” என்று சொன்னார். அப்போஸ்தலனாகிய பவுலின் குறிப்பான அறிவிப்பை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். மற்றவர்களை பற்றி பேசக்கூடிய தீய காரியங்கள் மாம்சத்தின் அசுத்தத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. நாம் தேவனுடைய ஜனங்களாக இருந்தால் இப்படிப்பட்ட அசுத்தத்திலிருந்து நாம் நிச்சயமாக சுத்திகரிக்கப்பட வேண்டும். அப்போது நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவோம். ஏனெனில், தீமையான காரியங்களை பேசுபவர் தேவனுடைய இராஜ்யத்தை சுத்திகரிக்கமாட்டார்கள்.

## 37. தீமையான அனுமானங்களையும், தீய பேச்சுக்களையும் எவ்வாறு மேற்கொள்வது?

(**A**) இருதயத்தை சுத்திகரிப்பதன் வழியாக.

நீதி 4:23 “எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.”

**F409 [p2]:**

சிந்தனைகள் உருவாகும் இருதயம், அதில் உள்ள ஆவியையும் கவனிக்காமல், மாம்சத்தை சுத்திகரித்து, நாவுக்கு கடிவாளம் போடுவது வீணாக இருக்கும். ஏனெனில் இருதயத்தில் உருவாகும் சிந்தையே வார்த்தைகளினாலும், கிரியைகளினாலும் மாம்சத்தில் அசுத்தங்களை வெளிப்படுத்துகிறது. விடாமுயற்சியோடு ஜெபிப்பதினால் மட்டுமே நாம் இவைகளை சுத்திகரிக்க முடியும். “நம்மை சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.” நாம் முழுமையாக சுத்திகரிக்கப்படாவிட்டாலும், நம்முடைய இருதயத்திலும், அதில் உள்ள நோக்கத்திலும், சிந்தையிலும், ஆவியிலும் நாம் பூரணமாக சுத்திகரிக்கப்படவேண்டும். (இருதயத்தில் சுத்திகரிக்கப்பட்டால் காலப்போக்கில் நம்முடைய வார்த்தைகளும் கிரியைகளும் பரிசுத்தப்படுமே) ஆகவே நம்முடைய ஆண்டவர் நம்முடைய இருதயத்தில் உள்ள பரிசுத்தத்தையும் அவருக்கு உண்மையாக இருக்கும் நிலையையும், காலப்போக்கில் புதிய சரீரத்தை பெறுவதற்கான அன்பின் பிரமாணத்தை பார்க்கக்கூடியவராக இருக்கிறார். ஏனெனில் “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்.” - மத் 5:8

(**B**) ஜெபத்தின் வழியாக

சங் 141:3 “கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்.”

சங் 19:12-14 “தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக் காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.”

**R2249 [col.3 p2]:**

நாம் தேவனோடு உடன்படிக்கை ஏற்படுத்தினால் நம்முடைய ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் சோதனைகளிலும், பிரச்சனைகளிலும் நம்முடைய ஆண்டவர்

அருகிலிருந்து நமக்கு தேவையான காரியங்களை அவர் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அதை ஏற்றுக் கொண்டு அதற்கு தகுந்தபடி நடந்தால் நாம் சரியாக வழி நடத்தப்படுவோம். ஆகவே, நம்முடைய தேவைகளுக்கு ஏற்றபடி அவருடைய உதவிகளை வேண்டி ஜெபிக்கவேண்டும். நித்தமும் அவருடைய கிருபைக்காகவும், ஆசீர்க்காகவும் பொதுவாக ஜெபிக்க வேண்டும். சோதனையின் நேரத்தின் போது முழு நம்பிக்கையோடும், அவர் அன்பை புரிந்துகொண்டு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நமக்கு நடக்கிறது என்ற நம்பிக்கையோடு, அவர் நமக்காக யாவையும் செய்வார் என்ற உறுதியோடும், நம்முடைய இருதயம் உடனடியாக நம்முடைய ஆண்டவரை நோக்கி உயரவேண்டும். இப்படிப்பட்ட நேரங்களில் நாம் நம்முடைய ஆண்டவரின் ஆலோசனையைக் கேட்கும்போதும், நீதி, சத்தியம், பரிசுத்தம், அன்பில் வளர்ச்சி அடைவதற்கு உதவிகளை நாடும்போது நிச்சயமாக நாம் அவருக்குள் நெருங்குவோம். இப்படியாக, நாம் மணி நேரங்களுக்கு ஒரு முறையும், தினமும், மாதந்தோறும் மற்றும் இறுதியாக் முழு வெற்றியையும் கண்டடைவோம்.

(**C**) நம்முடைய மனதை பரிசுத்தமும், தூய்மையான சிந்தைகளினால் முழுமையாக நிரப்புவதின் வழியாக.

பிலி 4:8 "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவை-களெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்."

**R2890 [col.2 p3 to subhead end] –** சிந்தனையை கட்டுப்படுத்துவது.

மனிதர்களுடைய மூளை வித்தியாசப்படுவதினால் எல்லோருடைய சிந்தையும் நிச்சயமாக வித்தியாசப்படும் என்றும், ஒரு மனுஷன் தன்னுடைய மூளை அமைக்கப்பட்ட விதத்திற்கு இசைவாக மட்டுமே சிந்திக்க முடியும் என்றும் சிலர் நம்புகிறார்கள். ஆனால் இது உண்மையில் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய சிந்தையைச் சீர்தூக்கிப் பார்த்து அதில் உள்ள தீமையானவைகளை களைந்து நன்மையான சிந்தனைகளை ஊக்குவிப்பதற்கு நாம் கற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒரு காரியத்தை செய்வதற்கு, நமக்கு ஒரு மாதிரி முன்னிருக்க வேண்டும். நம்முடைய வார்த்தைகளையும், கிரியைகளையும் கட்டுப்படுத்துவது போல நம்முடைய சிந்தைனைகளையும் கட்டுப்படுத்தலாம். நம்முடைய விருப்பத்தை நமக்கு முன் தலையாக நிறுத்தி அதற்கு உள்ள சிந்தனைகளை சிந்திக்க வேண்டும் என்று முடிவு செய்து அவைகளை ஊக்குவிக்கும் சிந்தனைகளை வளரச் செய்து எதிரிடையான சிந்தனைகளை தவிர்க்க வேண்டும். ஆகவே முதலில் நம்முடைய சித்தம் சரியானதாகவும், நேர்மையானதாகவும் இருக்கவேண்டும். அடுத்ததாக அவைகளை மட்டும் சிந்திப்பதற்கு நாம் உறுதி கொள்ள வேண்டும். இதற்கு எதிராக காணப்படும் சிந்தனைகளைக் கட்டாயமாக தடை செய்ய வேண்டும். உலக ஜனங்களின் மத்தியில் தன்னுடைய விசேஷித்த ஜனங்கள் ஆண்டவருக்கு முன்பாக தங்கள் இருதயத்தை தொடர்ந்து ஏறெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வசனங்கள் கூறுகிறது. "என் மகனே உன் இருதயத்தை எனக்குத் தா..." மனப்பூர்வமாக பாவம் செய்பவர்களை தேவன் இப்படியாக அழைப்பதில்லை. தேவனுடைய புத்திரர்களாக இருப்பவர்களை தேவன் அழைக்கிறார். ஏனெனில் தேவனுடைய புத்திரராய் இருப்பவர்கள் கிறிஸ்து இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தினால் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, தேவனுடைய சிந்தைக்கு

இசைவான சிந்தையைக் கொண்டு இருக்கிறார்கள், மேலும் நாளுக்கு நாள் அவர்கள் பூரணப்பட்டு கொண்டு இருப்பதால் தங்களுடைய இருதயங்களையும் சித்தங்களையும், தேவனுக்கே அர்ப்பணித்து விடுகிறார்கள்.

இப்படியாக இருதயத்தையும் அதிலுள்ள சித்தத்தையும் தேவனிடம் கொடுத்தபின் தெய்வீக சித்தத்தை அறிந்து கொள்ளவும் தெய்வீக சிந்தைனைகளை பெற்றுக்கொள்ளவும் வார்த்தைகளினாலும், கிரியைகளினாலும் அவைகளுக்குக் கீழ்ப்படிய முயற்சிக்க வேண்டும். இவைகளின் சரியான அளவில் வளர்ச்சியடைந்தால், புதிய சிந்தை சுலபமான முறையில், வெகு சீக்கிரத்தில் வளர்ச்சியடையும். அப்பொழுது நம்முடைய ஆவிக்குரிய விருப்பங்கள், நம்பிக்கைகள், முயற்சிகள் அனைத்தும் புதிதாக்கப்படும். அல்லது புதிய துவக்கங்களை உருவாக்கும். ஆகவே தேவனுடைய தெய்வீக சித்தமும் திட்டமும் விசுவாசிகளுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. இப்படியாக அவர்கள் அறிவில் வளர்ச்சியடைந்து இவைகளை குறித்தே சிந்தித்து, தெய்வீக திட்டத்தினாலும் விருப்பத்தினாலும் இருதயத்தை நிரப்பும் போது வாழ்க்கையின் ஒவ்வொரு கோணத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டு நாம் மறுரூபமாக்கப்படுவோம்.

**R3129 [col.2 p1:4]:**

பிலி 4:9 “நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்.” என்ற இந்த வசனத்தை எத்தனை பேரால் கூறமுடியும்? இதுவே ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் வைக்கப்பட்ட அளவுகோலாகும்” ஏனெனில், ஒவ்வொருவரும் ஆண்டவரின் பிரதிநிதியாய் இருப்பதினால் அவருக்குள் காணப்படும் சகலமும் ஒரு கிறிஸ்தவனுக்குள் காணப்பட வேண்டும். அவர்களின் வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும் நடமாடும் நிரூபங்களாக இருந்து மற்ற சகோதரர்களின் நன்மைகளை நாட வேண்டும். இப்படியிருப்பதால் சமாதானத்தின் தேவன் உங்களோடு இருப்பார் என்று அப்போஸ்தலர் சொல்லுகிறது ஆச்சரியமல்லவே. இப்படியிருந்தால் தேவன் அந்த அப்போஸ்தலரோடிருந்தார். அவரோடு மட்டுமல்ல, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்ற கூடிய ஒவ்வொருவரோடும் இருப்பார்.

பிலி 4:10 “என்னை விசாரிப்பதற்கு நீங்கள் இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்தபடியினாலே கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன்; இப்படிச் செய்ய எண்ணங்கொண்டிருந்தீர்கள், சமயம் மாத்திரம் உங்களுக்கு நேரிடவில்லை.” அப்போஸ்தலரை குறித்து சிந்தித்தார்கள் என்பதை இந்த வார்த்தைகள் காட்டுகிறது. மேலும் அவரை சேவிப்பதற்கான வாய்ப்பை அதிகரித்து கொண்டார்கள். அதற்குப் பின் அவர்களுடைய வார்த்தைகளை உங்களுக்கு நேரிடவில்லை.” என்று உரைத்தார்.

மற்ற சகோதரர்களின் உணர்வுகளை தேவையில்லாமல் காயப்படுத்தி விடக்கூடாது என்று தேவனுடைய இந்த மனுஷன் எவ்வளவு கவனமாக இருந்தார் என்று சற்று சிந்தித்து பாருங்கள். தேவனுடைய அன்பை பிரதிபலிக்க வேண்டிய நாமும் எவ்வளவு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நம்முடைய நாவினாலும், கிரியைகளினாலும் மற்றவர்களை காயப்படுத்தாமல் காயத்தை ஆற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும். தனக்கு குறைச்சலிருப்பதாக அப்போஸ்தலர் குறிப்பிடாமல் மகிழ்ச்சியாயிருப்பதற்கு அவர் கற்றுக் கொண்டார் என்பதை மையப்படுத்தி பேசுகிறார். கவலைக் கேதுவான சிந்தனைகளை நம்மைவிட்டு அகற்றி, ஜெபத்தினால் தேவனிடம் பெற்ற அனைத்திற்கும்

நன்றி செலுத்தினால் சமாதானத்தை பலனாக அடைவோம். நம்முடைய தேவைகள் எவ்வளவாய் இருப்பினும், இப்படிப்பட்ட மனநிலையில் பிதா கொடுக்கக்கூடிய காரியங்களில் நாம் நிச்சயமாக திருப்தி அடைவோம். நமக்கு தேவையான அனைத்தையும் பிதாவாகிய தேவன் பூரணமாக கொடுத்து கொண்டிருக்கிறார் என்று விசுவாசித்தோமானால் நிச்சயமாக நாம் பெற்ற அனைத்திலும் திருப்தியடைவோம் என்று பவுல் நமக்கு கற்றுத்தருகிறார். “எல்லாவற்றிலும் மனரம்மியமாக இருக்க கற்றுக் கொண்டேன்” நாம் விசுவாசத்தினால் ஜீவிப்பவர்கள். ஆகையால் மற்றவர்களின் உழைப்பினாலும், வேலையினாலும் நாம் திருப்தி அடையக்கூடாது. நாம் பெறக்கூடிய ஆவிக்குரிய வாய்ப்புகளில் திருப்தி அடைந்து விடக்கூடாது. நம்மால் முடிந்த வரைக்கும் இன்றும் அதிகமான வாய்ப்புகளில் நம்முடைய தாலந்துகளை பயன்படுத்தி முடிந்தவரை கர்த்தரின் பணிகளை செய்வதற்கு ஜெபத்தில் மன்றாட வேண்டும். இப்படிப்பட்ட முயற்சிகளின் பலன்களால் நாம் திருப்தியடையலாம்.

பறவைகளை பிழைப்பூட்டும் பரலோக பிதா, காட்டு புஷ்பங்களை அழகாக உடுத்தக்கூடிய பரலோக பிதா நம்முடைய தேவைகளை எந்த அளவுக்கு கவனித்து நம்மை பராமரிப்பார் என்பதை சிந்திக்க வேண்டும். ஆகவே தேவன் நமக்குக் கையளித்ததில் முழு திருப்தியடைந்து நம்முடைய பங்கை நம்மால் முடிந்த வரைக்கும், தேவனுடைய சித்தத்திற்குச் செயலாற்ற வேண்டும். தேவன் நமக்குக் கொடுத்த வாய்ப்புகளில் நம்முடைய தாலந்துகளையும், திறமைகளையும் பயன்படுத்தி கிடைக்கக்கூடிய பலன்கள் குறைவாயிருக்கும் பட்சத்தில் நாம் நிறைவான பலன் பெறும்வரை, திருப்தியடையக்கூடாது. “போதும் என்ற மனதோடுக்கூடிய தெய்வ பக்தியே மிகுந்த ஆதாயம்” என்ற வார்த்தைகள், நம்முடைய தாலந்துகளையும் வாய்ப்புகளையும் அசட்டை செய்துவிடக் கூடாது. ஏனெனில், நாம் நியாயம் தீர்க்கப்படாதபடிக்கு நாம் பெற்ற அனைத்தின் மேலும் நல்ல உக்கிரானக்காரனாக இருந்து அவைகளை நாம் விருத்தியாக்கிக் கொள்ள வேண்டும்.

**R3596 [col.1 p2 through col.2 p2]:**

“இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்”

**(**பிரமாணம்**) VII** சுத்தமுள்ளவர்களாயிருங்கள்: தேவனுக்கும் மனுஷனுக்கும் முன்பாக திறந்த மனசாட்சியுடன் இருங்கள். முதலில் இதை உங்களின் சிந்தைகளில் துவங்குங்கள். தீமையான எந்தக் காரியங்களையும் உங்கள் மனதில் நுழைத்து விடாதேயுங்கள். இதை உறுதிப்படுத்திக் கொள்ள கிறிஸ்து இயேசுவை கண் முன் மாதிரியாக வையுங்கள். எப்போதெல்லாம் தீமையான எண்ணங்கள் உங்கள் சிந்தனைக்குள் வந்தாலும் உடனடியாக தேவனிடத்தில் ஜெபத்தில் ஏறெடுங்கள். உங்கள் சிந்தையை ஜெபத்தோடு எப்போதும் இணைந்து வையுங்கள். “என்னுடைய வாயின் வார்த்தைகளும், இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாக இருப்பதாக.”

**(**பிரமாணம்**) VIII** வசனங்களில் உள்ள வெவ்வேறு குறிப்பிட்ட பிரமாணங்களை பின்பற்றுவதற்கு நாம் முயற்சிக்கும் போது தெய்வீக பிரமாணத்தின் கீழ் மறைந்துள்ள, கோட்பாடுகளை ஆழமாக புரிந்துக் கொள்ள அதிகமாக முயற்சிக்க வேண்டும். இந்தக் காரியம் நம்முடைய வாயின் வார்த்தைகள் சரியானதா தவறானதா என்று சீர்தூக்கி பார்க்க உதவியாயிருக்கும். உண்மையில், தெய்வீக பிரமாணத்தின் கோட்பாடுகளை நாம் எந்தளவுக்கு புரிந்துக் கொள்கிறோமோ அந்த அளவுக்கு தெய்வீக வார்த்தைகளில் உள்ள தேவனுடைய ஆவியை நாம் பெற முடியும். - சங் 110:97-105

(பிரமாணம்) **IX** குற்றம் கண்டுபிடிக்கும் மனப்பாங்கையும், சண்டைப் போடக்கூடிய குணமும் கிறிஸ்துவின் அன்பின் ஆவிக்கு எதிராய் செயல்படக்கூடியது.

இந்த உலகத்தில் மாம்சத்தையும், பிசாசையும், விதவிதமான கண்ணிகளையும் மேற்கொள்வதற்கு சிறிதளவு வாதம் செய்யக் கூடிய தைரியம் தேவைப்படுகிறது. நம்முடைய ஆண்டவரின் பார்வையில் நியாயமான காரியங்களுக்காகவும், ஞானமான காரியங்களுக்காகவும், நமக்குள் இருக்கும் பாவத்திற்கு எதிராக இந்தக் குணத்தை பயன்படுத்துவது நமக்கு பயனுள்ளதாக இருக்கும். சாத்தானுக்கும், அவனுடைய சகல இருள் மற்றும் மூட நம்பிக்கையான வல்லமைகளுக்கும் எதிராக, தேவனுடைய ஜனங்களை மீட்பதற்கு மேலும் இந்தக் குணத்தை பயன்படுத்தலாம். இதை நல்லப் போராட்டம் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. நன்மைக்காகவும், சத்தியத்தியத்துக்காகவும், அவருடைய ஜனங்களின் சுயாதீனத்திற்காகவும், இந்த யுத்தக் களத்தில் நல்ல போர்ச்சேவகர்களாக நாம் போராடுகிறோம். நம்முடைய அதிபதியின் மகிமைக்காகவும், வாக்குவாதம் செய்யக்கூடிய இந்தக் குணம், நன்மையான நோக்கத்திற்கு பயன்படுத்தப்படுவதை இப்பிரபஞ்சத்தின் தேவன் விரும்புவதில்லை. சாத்தான் நேரடியாக ஒருவரை திசைதிருப்பாவிட்டாலும், மறைமுகமாக அந்த வேலையை செய்வான், நியாயமான காரணங்களுக்காக சண்டையிடத் துவங்கி, அதுவே அவர்களின் குணலட்சணங்களாக மாற்றிவிட அவன் ஊக்குவிப்பான். காலம் செல்ல செல்ல அவர்கள் இருளின் வல்லமைக்குள் தள்ளப்பட்டு, சகோதரர் மத்தியிலிருக்கும் சின்ன சின்ன குறைகளுக்கும், அறியாமைக்களுக்கும் எதிராக சண்டைபோட்டு தேவனுடைய அன்புக்கு தங்களை குருடாக்கி கொள்கிறார்கள். இறுதியில் அந்த நபரை தேவனுக்கு எதிராக போராட செய்யும் சாத்தானின் இலக்கு வெற்றி பெறும். இதை குறித்து நாம் எச்சரிப்போடு இருக்க வேண்டும். முதலில் நம்மை நாம் சோதித்தறிந்தபின் மற்றவர்களுக்கு இடறல் உண்டாகாதபடிக்கு நம்முடைய நடைகளையும் வார்த்தைகளையும் காத்துக் கொண்டு நம்முடைய இருதயங்களுக்குள் இருக்கும் தவறான கருத்துக்களை வெளியேற்ற முயற்சிக்க வேண்டும். “ஒரு பட்டணத்தை அடக்குவதைக் காட்டிலும், தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்” சத்தியத்தை காத்துக் கொள்வதற்கு நமக்குள் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். சுயமகிமைக்காக அல்ல, சத்தியத்தின் மேல் உள்ள அன்பும், ஆண்டவரின் மேல் உள்ள அன்பும் அவருடைய ஜனமாகிய நம்முடைய சகோதரர்கள் மேல் வைக்கக் கூடிய அன்பும், நமக்குள் வளர்ச்சி அடைய நாம் பிரயாசப்பட வேண்டும். இதனிமித்தம், அனைவரிடமும் கனிவாயும், பொறுமையாயும், அன்பாகவும், மனத்தாழ்மையுடனும் நடப்பதற்கு வழி வகுக்கும். இப்படியாக தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயம் நமக்குள் வல்லமையாக செயல்பட்டு, தேவையில்லாத காரியங்களை வெட்டியெறிய அனுமதிப்போம்.

(பிரமாணம்) **X** - ஆகவே சகல விதமான சிந்தைகளுக்கும் உணர்வுகளுக்கும், பகை, பொறாமை, கோபம், மூர்க்கம் போன்ற குணங்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருக்கும் சகல காரியங்களுக்கும் நாம் எச்சரிக்கை-யாயிருக்க வேண்டும். ஒரு நொடி பொழுதிலும் இப்படிப்பட்ட காரியங்களுக்கு உங்கள் இருதயத்தில் இடம் கொடுத்து விடாதீர்கள். எனெனில் இவைகள் நம்மை மிகப் பெரிய அழிவுக்கு கொண்டு செல்லும். நம்மை மட்டுமல்ல, நம்மை சேர்ந்தவர்களும் நஷ்டம் அடைவார்கள். உங்களுடைய இருதயங்களையும் உங்கள் விருப்பங்களையும், உங்கள் நோக்கங்களையும் தேவனுக்கும் அவருடைய சகல சிருஷ்டிகள் மேலுள்ள அன்பினால் நிரப்புங்கள் விசேஷமாக அவருடைய ஆவியை பெற்று, அவருடைய வழியில்

நடப்பவர்களிடம் நாம் அதிகமான அன்பை காட்ட வேண்டும்.

**R2588 [col.1 p4,5]:**

உங்கள் இருதயத்தில் கற்றுக் கொண்ட நன்மையான காரியங்கள் அனைத்தையும் நடைமுறைப்படுத்த முயற்சித்து, அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை என்றும் தியானிக்க வேண்டும். "உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைக-ளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்." (பிலி 4:8)

ஏனெனில், இவைகளையே சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள், மற்றவர்களிடம் இவைகளை குறித்தே பேசுவார்கள். ஆகவே நம்முடைய இருதயத்தை நல்ல விஷயங்களினால் நிரப்புவது மிக முக்கியமானதாகும். ஏனெனில் இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்பதை அறிந்திருக்கிறோம். (லூக் 6:45)

இப்படிபட்ட முயற்சிகளினால் அவர்கள் தேவனுடைய புத்திரர்களாக அழைக்கப்படுவார்கள் என்ற விலைமதிப்புள்ள வாக்குறுதியை பெறுவார்கள். இவர்கள் தேவனுடைய ஆவியைப் பெற்று, தேவகுமாரனின் சாயலை தங்களுக்குள் பதிய வைத்து சத்தியத்தினால் சுத்திகரிக்கப்பட்டு, இறுதியில் ஒளியில் உள்ள பரிசுத்தவான்களின் பங்கை அடைவார்கள். இப்படிப்பட்ட இருதயங்களை பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரர்களாக, தன்னுடைய ஒரே பேறான குமாரனுடைய உடன் சுதந்திரர்களாகவும் அவருடைய இராஜ்யத்தில் அங்கீகரிக்கப்படுவோம். மேலும் நம்மை நாம் அறிந்து கொள்வதற்கு இந்தப் பரீட்சை பயனுள்ளதாயிருக்கும். ஓரளவுக்கு பிறரையும் பிறரின் ஆவிக்குரிய நிலையையும் நாம் புரிந்து கொள்ளலாம். ஆகவே தேவனுடைய பிள்ளைகளாக வளர்ச்சியடையக்கூடிய நாம் மிக ஜாக்கிரதையுள்ளவர்களாக இருந்து, நம்முடைய நோக்கங்களும் சிந்தனைகளும் சமாதானத்துக்குரியதாக இருக்கிறதா என்று நித்தமும் கவனிக்க வேண்டும்.

## 38. "தீமை" என்ற தலைப்பின் கீழ் பரலோக மன்னாவின் முன்னுரையில் காணப்படும் கூடதலான குறிப்புகள் என்னென்ன?

## 39. தீமையான வதந்திகளை ஓரளவுக்கு நம்முடைய வாழ்க்கையில் மேற்கொள்வதற்கு எப்படிப்பட்ட விசேஷித்த அனுபவங்களும், பழக்கங்களும் உங்களுக்கு உதவியாக இருந்தது?

## 40. புதிய சிருஷ்டியின் எதிராளி வல்லமையுள்ளவனும், தந்திரம் உள்ளவன் என்பதை உணர்ந்து நம்முடைய அன்றாட ஜெபங்கள், எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

சங் 119:12-14 "கர்த்தாவே, நீர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்; உம்முடைய பிரமாணங்களை எனக்குப் போதியும். உம்முடைய வாக்கின் நியாயத் தீர்ப்புகளையெல்லாம் என் உதடுகளால் விவரித்திருக்கிறேன். திரளான செல்வத்தில் களிகூருவது போல, நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன்."

சில கேள்விகளுக்குண்டான நீண்ட குறிப்புகள் தொடருகிறது

**R2443 [col.2 p3] through R2444 [col.2 p2]**
(5ஜ வது கேள்வியை பார்க்கவும்)

வெகு காலத்திற்கு முன்பு தீய பழக்கங்களை விரட்டிய பின்பும், பாவமென்று தெளிவாக அனைவரால் புரிந்துக் கொள்ளப்பட்ட பின்னும், சகோதரர் மத்தியில் இது பிரபலம் இல்லாத போதிலும் விழுந்து போன மனித நிலை அநேக உபாயதந்திரங்களை குறிப்பாக பயன்படுத்தி, மனசாட்சியின் குரலை அடக்க முயற்சித்து, தீமையான வழிகளை பயன்படுத்துவதை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்கிறது.

1.“நான் ஒருவருக்கும் தீங்கு செய்வதில்லை, ஆனால் என் நண்பர்களோடும், அயலகத்தாரோடும் அமர்ந்து சிறிது நேரம் பேசுவது போல சுவாரஸ்யமான காரியம் ஒன்றும் இல்லை. இதை தவிர வேறு பொழுது போக்கு எனக்கொன்றுமில்லை.” என்று நம்முடைய மனசாட்சி கூறலாம். ஆயினும் வெளிச்சத்தின் பிள்ளைகள் இப்படிப்பட்ட பேச்சுகளுக்கு நிச்சயமாக கணக்கு ஒப்பிக்க வேண்டும் அல்லவா? “உங்கள் சம்பாஷனை பரிசுத்தவான்களுக்கு ஏற்றவிதமாக இருக்கக்கடவது” என்று வசனங்கள் நமக்கு கற்பிக்கிறதே”

“அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.” “கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.” (பிலிப் 1:27, கொலோ 4:6, எபே 4:29) என்ற கட்டளைகளை வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட அவதூறு பேசும் நபர்கள் தங்களுடைய வார்த்தைகளையும், செயல்களையும் சுத்திகரித்த போதிலும், வெகு தூரத்தில் இப்படிப்பட்ட பேச்சுக்கள் நடந்துகொண்டிருக்கையில், மீதியுள்ள அந்தக் காரியங்களை சொல்லுவதற்கு மிகத் துரிதமாய்ச் சென்று விடுவார்கள். சரியோ தவறோ அல்லது அவர்களுக்கு தேவையான செய்தியோ தேவையில்லாத செய்தியோ, அவர்கள் இருதயத்தில் உள்ள எண்ணங்கள் அதிகதிகமாக தூண்டப்பட்டும் காட்டை கொளுத்திவிடும் நெருப்பாக அவர்களின் நாவு துரிதமாக செயல்படுகிறது. இது போல் மற்ற பலவீனங்களிலும் தேவனுடைய ஜனங்கள் எளிதில் விழுந்துவிடுகிறார்கள். விழுந்து போன நிலை இப்படிப்பட்ட காரியங்களில் மிகவும் மகிழ்ந்து, விருந்துண்கிறது. தாங்கள் செய்வது மிகச் சரியான காரியம் என்றும் பாவத்திற்கு எளிதாக போதித்து விட்டார்கள் என்று எண்ணியும் தங்களை நீதிமான்களாககாட்டிக் கொண்டோம் என்ற மகிழ்ச்சியிலும், அவர்கள் சந்தோஷம் அடைகிறார்கள். ஐயோ பாவம், விழுந்து போன மனிதனின் கிரியைகள் தேவனுடைய நீதிக்கு முன்பாக நிற்க முடியாமல் போய்விடுகிறது.

இதைக் குறிப்பாக கடைப் பிடிப்பதற்கு கிறிஸ்தவ சம்பாஷனைகளில், வெட்டிப் பேச்சுகளையும், குறை பேசுதலையும், முற்றிலும் அகற்றி விடுவது நலமாயிருக்கும். “அவதூறான பேச்சுக்களையும், தூஷணங்களும் உங்கள் வாயிலிருந்து புறப்படலாகாது.” என்ற நம்முடைய அப்போஸ்தலரின் கட்டளைகளை கண்டிப்பாக நாம் கடைபிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். கிறிஸ்தவர்களின் மத்தியில் எல்லாக் காரியங்களையும் பேசுவதற்கு நாம் அனுமதிக்கப்படுவதில்லை. கிறிஸ்து இயேசுவுக்குள் உண்டான தேவனுடைய கிருபையின் ஐசுவரியங்கள் மற்றும் தேவனுடைய வார்த்தைகளில் உள்ள விலையேறப்பெற்ற வாக்குறுதிகளை மட்டுமே பேசுவதற்கு

அனுமதி பெற்றிருக்கிறோம். மேலும், இவைகளை பேசும் போது கேட்போருக்கு மட்டும் அல்ல பேசக்கூடியவர்களும் உண்மையாக கிருபை பெறுகிறார்கள். இப்படிப்பட்ட சம்பாஷனைகள் அங்கு கூடியுள்ள அனைவர் மேலும் ஆசீர்வாதங்களைப் பொழியும். அழிந்துக் கொண்டிருக்கும் பழைய மனுஷனின் கிரியைகளை புறம்பாக்கும். மேல் சொல்லப்பட்ட காரியங்களை அப்போஸ்தலர் மனதில் வைத்து - "அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளிக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதற்காக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்" என்று கூறினார். மேலும் அன்பின் ஆவி தேவனுடைய ஆவி, சத்தியத்தின் ஆவி நிரம்பி வழியக்கூடிய இருதயங்களின் வாயிலாக எந்தத் தீமையான காரியங்களும், மற்றவர்களை காயப்படுத்தும் வார்த்தைகளும் வெளிவராது. ஒரு வேளை தீமையான காரியங்கள் வந்தால் இருதயம் பரிசுத்தமாக காத்துக் கொள்ளவில்லையென்பது உறுதிப்படுகிறது. "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." மத் 5:8, 1 பேது 2:9, மத் 12:14)

2. 27வது கேள்வியின் பதிலை காண்க

3. இப்படிப்பட்ட கேள்விகளை நல்ல கிறிஸ்துவ ஜனங்கள் வேறுவிதங்களில் தவிர்த்து விட்டு, தாங்கள் சத்தியத்தின்படி நடப்பதாக எண்ணி, மனிதனின் பொதுவான தவறுகளுக்கு நியாயம் கற்பிக்கிறார்கள். ஆனால் வழக்கமாக பேசும் அவதூறான காரியங்களையும், உண்மையில்லாத காரியங்களும் தங்களை நியாயத்தீர்ப்புக்கு உட்படுத்தும் என்று அறியாமல் பேசக்கூடிய காரியங்கள் மெய்யா, பொய்யா என்பதையும் அறியாமல் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட தவறான பேச்சை பேசி முடித்தபின், அவைகள் தவறாய் இருக்கும் பட்சத்தில் தேவனுக்கு முன்பாக அவர்களை பொய் சாட்சிகளாக நிறுத்திவிடும். அந்தத் தவறை கட்டாயமாக சரிசெய்ய வேண்டும் என்ற சூழ்நிலைக்குள் வந்தாலும், மாம்ச சிந்தைக்குள் வளர்ந்திருக்கும் பெருமை, சத்தியத்தை விசுவாசிப்பதற்கு மறுத்து, தங்களை திருத்திக்கொள்ளக்கூடிய சூழ்நிலைகளை தவிர்க்கும். இப்படியாக ஒரு பாவம் மற்றொன்றுக்கு வழி வகுக்கும். இப்படிப்பட்டவர்கள், "உண்மையை தவிர நான் எதையும் பேசுவதில்லை. என் கண்களினால் கண்டு, தனிப்பட்ட முறையில் அது உண்மை என்று உறுதிப்படுத்திக் கொண்டபின் மட்டுமே நான் பேசுவேன். உண்மை என்று நிரூபிக்கப்படாத காரியம் எதுவானாலும் சரி - நான் மிக ஜாக்கிரதையுடன் இவைகள் எனக்கு சொல்லப்பட்டது என்று சொல்லி முடித்துவிடுவேன். இப்படிப்பட்ட பேச்சுக்களுக்கு நான் உறுதியளிக்க மாட்டேன். இப்படியாக நாம் யாரைக் குறித்தும் தீமையான காரியங்களை பேசுவதில்லை" என்று சிலர் கூறலாம். இப்படிப்பட்ட துன்மார்க்கமான காரியங்கள் மனசாட்சிக்குபின் ஒழிந்துக் கொண்டு உண்மையைப் பேசுவது மட்டுமே மிகச் சரியானது என்று கூறிக்கொண்டு இருக்கிறது. ஏனெனில், உண்மை பேசுவது மட்டுமே, மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகளான தீய பேச்சுக்கள் என்று சொல்லப்படுகிறதே.

இது மிகப் பெரிய தவறாகும். தீமையான பேச்சுக்கள் உண்மையானாலும் சரி, பொய்யானாலும் சரி அது தீமையான பேச்சு தான். தேவனுடைய சட்டத்தில் மட்டுமல்ல நாகரீகமுள்ள எந்த மனுஷனின் சட்டத்திலும் இது நியாயமாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. உண்மையில் மனித சட்டத்தில் ஒருவருடைய தீமையான காரியங்களை பேசினதற்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டால், உண்மையாக நடந்த சம்பவமாக இருந்தாலும், அதைக் குறித்து பேசினதற்காக அவர்கள் குற்றம் சாட்டப்படுவார்கள். ஏனெனில் அவரின் வார்த்தையினால் காயப்பட்டு அல்லது பாதிக்கப்பட்டவருக்கு இந்த உலக பிரகாரமான நீதிமன்றங்கள் நியாயம் செய்ய

விரும்புகிறதே, ஆகவே உண்மையானாலும் சரி பொய்யானாலும் சரி, ஒருவரை காயப்படுத்தக் கூடிய நோக்கத்துடன் எந்தக் காரியங்களையும் நிச்சயமாக பேசக்கூடாது. மற்றவர்களை துன்புறுத்தக்கூடாது என்ற விஷயத்தில் தேவனுடைய சட்டமும் மனுஷருடைய சட்டமும் ஒன்றுக்கொன்று இசைவாக காணப்படுகிறது.

மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால் முதல் தவறை இரண்டாவது தவறு நியாயப்படுத்தாது என்ற பிரமாணத்தை, மனித நேயமும் தெய்வீக கற்பனையும் ஒத்துக்கொள்ளுகிறது. ஒரு தவறு நடந்துவிட்டால், தவறு செய்பவர்களை தண்டிக்க நீதி மன்றங்கள் உள்ளது. ஆனால் பாதிக்கப்பட்டவர் அந்தத் தீமைக்கான தண்டனையை - ஆயுதங்களை பயன்படுத்தியோ, தங்கள் நாவினால் தீமையான முறையில் புறங்கூறியோ, அவரின் குணலட்சணங்களை கசப்பான வார்த்தைகளை பேசுவதினாலோ தங்களது சொந்த கரங்களினாலோ, கெடுப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்று மனித சட்டம் கூறுகிறது. உண்மையில் இப்படிப்பட்ட அநேகர் குற்றம் சாட்டப்படுவதில்லை, ஆயினும் அமெரிக்காவில் இப்படிப்பட்ட மானநஷ்ட வழக்குகள் நீதி மன்றங்களில் அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது.

**R2517 [col.1P6 to end of article]**
(11ம் கேள்வியை காண்க)

சிந்தனைகளில் அசுத்தம் இருப்பதாக் காணப்பட்டால் ஒருவர் என்ன செய்ய வேண்டும்? நன்மையை காட்டிலும் தீமையும், சுயநலமும், மன்னிக்க இயலாத மனநிலைகளும், பகையும், பொறாமையுள்ளவர்கள் தங்களை புகழக்கூடியவர்களை மட்டும் நேசிப்பவர்களை குறித்து ஏதாகிலும் நம்பிக்கைகள் உண்டா? இப்படிப்பட்டவர்களை தேவன் முற்றிலுமாக நிராகரித்து விடுவார் அல்லவா?

தேவன் மிகுந்த இரக்கமுள்ளவர், நாம் அனைவரும் துரோகிகளும் பாவிகளுமாய் இருக்கையில் நமக்கான ஈடுபலியை கொடுத்தாரே. ஆகவே இப்படிப்பட்ட மன நிலையை பெற்றவர்களும் தாங்கள் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்று விரும்பினால் நிச்சயமாக பரிசுத்தப்படுவார்கள்." என்னுடைய அழுக்கான பாவங்களை அவருடைய இரத்தம் சுத்திகரிக்கும்."

ஆனால் மனம்வருந்தி சீர்பொருந்த வேண்டும் என்பதே உண்மையான குற்றமுணர்ந்த நிலையாகும். குணமடைவதற்கு நம்முடைய பரம வைத்தியரின் உதவிகளை நாட வேண்டும். ஏனெனில் அவர் மட்டுமே சகல நோய்களையும் குணமாக்குகிறவர் என்று எழுதியிருக்கிறது. அவரால் பரிசுத்தமாக்கப்பட்ட ஒவ்வொருவரும் - "அவருடைய பணியை செய்வதற்கு நாங்கள் அபாத்திரர்" என்று கூறுவதைக் காணலாம். உண்மையில் ஒருதரம் சுத்திகரிக்கப்பட்டும் மீண்டும் பாவத்திற்குள் பிரவேசிப்பது மிகவும் மோசமான நிலைக்கு கொண்டுசெல்லும். ஆயினும் இவர்களைக் குறித்து இன்னும் கொஞ்சம் நம்பிக்கை உண்டு. பரம வைத்தியரின் மருந்துகளை அன்றாடம் உட்கொள்வதின் நிமித்தம் மீண்டும் சுத்திகரிக்கப்படலாம். ஆனால் மனசாட்சியே மனித சுபாவத்தில் இருக்கிறது. தித்திப்பை கசப்பென்றும், பகையையும் தீமையையும் நீதியென்றும் நியாயத்தீர்ப்பை திசைதிருப்பும் அளவுக்கு அது கடினப்பட்டு இருப்பதினால் பாவத்தின் காரியங்களை பரிசுத்தமாக எடுத்துக்காட்டுகிறது. இந்நிலையில் அவர்களை சுத்திகரிப்பது நம்பிக்கையற்றதாகிவிடுகிறது.

நம்முடைய பரம வைத்தியர் இப்படிப்பட்ட விஷம் நிறைந்த இருதயங்களுக்கேற்ற தடுப்பு மருந்தினை குறிப்பிட்டிருக்கிறார். இப்படிப்பட்ட மருந்துகளை சரியான முறையில் உட்கொள்வதின் மூலம் கடினமான இருதயங்கள் இலகுவாக்கப்படும். குரோதமும் பகையும் உருவாக்குவதற்கு பதிலாக அன்பு நிறைந்த வழியும், சண்டைகளும் சச்சரவுகளும், எதிர்பேச்சுகளும் தீமையான பேச்சுக்களும், பின்னாக பேசுவதும், புறங்கூறுதலும், கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து அன்பையும் அதற்கேற்ற வார்த்தைகளையும் பிறப்பிக்கும். ஒருவரை குறித்தும் தீங்கு நினையாது, எந்த அயலானை குறித்தும் அவதூறு கூறாமலும், நீடிய பொறுமையுடன் சகலத்தையும் சகித்து, தன்னுடைய புகழ்ச்சியை நாடாமல் தேவனுடைய மகிமையைத் தேடும். இப்படிப்பட்ட ஆவியே கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் அன்பின் பிரமாணமாகும். இந்த மருந்துகள் மிக மோசமாக வியாதிப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, கிறிஸ்துவ ஜீவியத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் நமக்கும் தேவைப்படுகிறது. கொடுக்கப்பட்ட மருந்துகள் சிலவற்றை காணலாம்.

“அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்.” 1 யோவா 3:3

நாம் தேவனுடைய புத்திரர்களாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறோம் என்ற நம்பிக்கை மேற்கூறப்பட்ட வசனத்தில் காண்பிக்கப்படுகிறது. அவரைப் போல் இருப்பவர்கள் அவர் மகிமையடைந்த நிலையில் தாங்களும் மகிமையடைந்து, அவரை காண்பார்கள் என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய இருதயத்தின் சிந்தனைகள் இந்த ஒரே நம்பிக்கையில் விரிவடையும் பட்சத்தில் நாம் இதன் அகலத்தையும் நீளத்தையும் ஆழத்தையும் உயரத்தையும், அளவிடும் போது பரலோகப் பிதாவின் அன்பையும் நம்முடைய இரட்சகரின் அன்பையும் நாம் ஒப்பிட்டு பார்க்கவே முடியாது. எனெனில் நாம் அவர்களை நேசிப்பதற்கு முன்னதாகவே அவர்கள் நம்மை அதிகதிகமாக நேசித்தார்கள். இப்படிப்பட்ட தெய்வீக அன்பின் முறையை நமக்கு மாதிரியையாக கொண்டு நாம் அதில் வளர்ந்தால் நிச்சயமாக நம்முடைய இருதயங்களில் சுத்திகரிக்கப்பட்டு பூரணமான அன்பையும், கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனத்தையும் பெறுவோம். முற்காலத்தில் நமக்குள் இருந்த அர்த்தமில்லாத சுயநலத்தைக் கண்டு அதிகதிகமாய் வெட்கப்படுவோம். நம்முடைய மாம்சத்தின் பலவீனங்களாகிய கோபம், மூர்க்கம், பகை, வஞ்சனை, தீமையான பேச்சுக்கள், வதந்திகள், புறங்கூறுதல், வெட்டிப் பேச்சுக்கள் போன்றவைகளை உண்மையான வெளிச்சத்தில் காணும்போது நாம் மிகவும் வருத்தமடைவோம். மேலும் இறுதியாக இப்படிப்பட்ட தீமையான குணங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்கு ஒருக்காலும் பொருந்தாது என்பதை நாம் எளிதில் உணர்ந்து கொள்ளலாம். இப்படிப்பட்ட தீமைகளையும் நம்முடைய ஆத்துமாக்களை நித்திய மரணத்துக்கு வழி நடத்தும். மாம்ச பலவீனங்களையும் விட்டு வேகமாக விரைந்தோடச் செய்யும். நம்முடைய இருதயங்கள் உடனடியாக சுத்திகரிக்கப்படும். நம்முடைய வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானமும் தேவனுக்கு முன் எப்போதும் பிரியமாக இருக்கும்.

2. “அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.” தீத்து 2:14

எப்படியாகவோ யார் மூலமாகவோ நாம் மீட்கப்பட்டோம் என்ற பாடத்தை தெளிவாக நாம் புரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் நாம் எதற்காக இரட்சிக்கப்பட்டோம் என்ற காரணத்தை நாம் சற்று மறந்துவிட்டால் நாம் அறிந்து கொண்ட அனைத்தும் வீணாகிவிடும். மரணத்தின் வல்லமையிலிருந்து மட்டுமே நம்மை மீட்காமல், "சகல துர்க்குணத்திலிருந்து நம்மை மீட்டார். ஒரு விசேஷித்த ஜாதியாக ஜனங்களைத் தேடாமல் விசேஷமாக சுத்திகரிக்கப்பட்ட தூய்மையானவர்களை அவர் தேடுகிறார். நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி கொள்வதற்கும், துர்குணங்களிலிருந்து நாம் வெளிவருவதற்கு மிக ஆர்வமுள்ளவர்களுக்கும் இந்த மருந்து நிச்சயமாக நமக்கு உதவிசெய்யும்.

3. அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு." 2தீமோ 2:22

நாம் சரியாக துவங்கினால் மட்டும் போதாது, சரியான வழியை தேர்வு செய்பவர்களாக இருக்கவேண்டும். அநீதியான காரியங்களை ஒருபோதும் நாம் பின்பற்ற மாட்டோம். எப்படிப்பட்ட நஷ்டம் ஏற்பட்டாலும் நீதியையும் நியாயத்தையும் பின்பற்ற வேண்டும். ஆனால் சில நேரங்களில் சிலருக்கு பிரச்சனைகள் எழும்பலாம் - சிலர் நியாயமாக தீர்ப்பளிப்பதற்கு அறியாமல் இருக்கிறார்கள். தாங்கள் காணக்கூடியவைகளையும், கேட்கக்கூடிய அனுமானங்களை வைத்தும் அல்லது பரிசேயர் சதுசேயரின் தீர்ப்பை பெற்றுக்கொண்ட ஜனங்களை போலவும், நியாயந்தீர்க்க முடிவெடுக்கிறார்கள். ஆனால் ஆண்டவரின் வாழ்க்கையில் காணப்பட்ட நன் நடக்கைகளையும், அற்புதமான வார்த்தைகளையும் கவனித்திருந்தார்களானால் நீதியான பாதையில் வழி நடக்க முடிந்திருக்கும். ஏனெனில் இயேசு பாவத்திற்கு விலகினவரும், "பரிசுத்தரும் கபடற்றவரும், மாசற்றவருமாக" இருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருப்பார்கள்.

"நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள்" என்ற ஆண்டவரின் கற்பனையை எந்நாளும் நாம் பின்பற்ற வேண்டும். இந்தக் கற்பனையை தவிர்க்கும் பட்சத்தில் அந்த இரத்தப்பழியை தங்கள் தலையின் மேல் சுமந்து, குற்றம் சாட்டப்பட்டவர்களின் தண்டனைக்கு பங்காளிகளாவார்கள். நம்முடைய ஆண்டவருக்கு நடந்தபடியே அவருடைய சகோதரருக்கும் நடத்தப்படும். ஆகவே, நம்முடைய இருதயங்கள் அதிகதிகமாக பரிசுத்தப்படும் போது, நமக்கு எதிராக பேசப்படும் தீயப் பேச்சுக்களுக்கும், புறங்கூறுதலுக்கும், நாம் பாதிக்கப்படமாட்டோம். இருதயத்தில் கசப்பான நஞ்சையுடையவர் இப்படிப்பட்ட பேச்சுக்களை மட்டுமே பேசுபவர்கள் என்பதையும் உணர்ந்து கொள்வார்கள்.

அடுத்துவருவது உண்மை அதாவது விசுவாசம், நம்முடைய ஆண்டவர் தன்னுடைய விசுவாசத்தை குறித்து சொல்லி ஒரு சகோதரனைக் காட்டிலும் நெருங்கிய உறவான சிநேகிதர் என்று தம்முடைய சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார். இப்படிப்பட்ட இரக்கத்தை இந்த உலகம் உண்மை என்று அங்கீகரித்துக்கொண்டு முதலிடம் கொடுக்கிறது. ஆனால் தேவனுடைய வார்த்தையில் நீதி முதலிடத்தை பெறுவதை கவனியுங்கள் விசுவாசம், அன்பு சமாதானமும், நீதிக்கு இசைவாக செயலாற்றப்படும். ஆனால் அநீதி ஒரு சகோதரனுக்கு விரோதமாக நிருபிக்க இயலாது.

அப்படிப்பட்டவரிடம் நம்முடைய அன்பு, பாசம், சமாதானத்தையும் தொடர்ந்து வெளிப்படுத்த வேண்டும். உண்மையில், அவருக்கு எதிராக “நியாயமில்லாமல்” பேசப்படும் வதந்திகள் புறங்கூறுதல் அனைத்தும் குறைத்துக் கொள்ள வேண்டும். இந்த மதிப்புள்ள ஆலோசனை நம்முடைய இருதயங்களை பரிசுத்தமாக காத்துக்கொண்டு சாத்தான் வெகு துரிதமாக விதைத்துக் கொண்டிருக்கும் விஷத்திலும், கசப்பிலிருந்தும் நாம் தப்பித்துக் கொள்ளமுடியும்.

நியாயம், இருதயத்தின் தூய்மையாகும் - அநியாயத்திலிருந்து விடுதலை

நீதி, இருதயத்தின் தூய்மையாகும் - அநீதியிலிருந்து விடுதலை.

அன்பு இருதயத்தின் தூய்மை - சுயநலத்திலிருந்து விடுதலை

4. “ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாரிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூரங்கள்.” 1 பேது 1:22

மற்ற மருந்துகளை பயன்படுத்தி சுத்திகரிக்கப்பட்டவர்கள் மட்டுமே இந்த மருந்தை பயன்படுத்த வேண்டும். இருதயம் சுத்திகரிக்கப்பட்டதன் முக்கிய காரணம் *ஶி* சத்தியத்தை கேட்டதினால் மட்டும் அல்ல, அவைகளை விசுவாசித்ததினால் மட்டுமல்ல அவைகளுக்குக் கீழ்ப்படிந்ததின் மூலமே என்பதை வசனம் குறிப்பிடுகிறது. மேலோட்டமான அனைவரும் காணும்படியாகவும், பழக்க வழக்கத்தின் அடிப்படையிலான கீழ்ப்படிதல் அல்ல. ஆனால் சத்தியத்தின் ஆவிக்கு முழுமையாக கீழ்ப்படிதலின் வழியாகவே *ஶி* இந்தக் காரியங்களே உண்மையாக சுத்திகரிப்பை ஏற்படுத்தும். இவை அனைத்துமே போலியானதாக அல்ல உண்மையும் உத்தமமான கிறிஸ்துவுக்குள்ளான “சகோதர” சிநேகத்தை நமக்குள் நிலைத்திருக்க செய்யும். துவக்கத்தில் அனைவரையும் நல்ல பண்புடன் நடத்தினோம். ஆனால் அநேகரை நமக்கு பிடிக்கவும் இல்லை. அவர்களை நாம் நேசிக்கவும் இல்லை, அவர்கள் ஏழைகளும், அழுக்கானவர்களும், விசித்திரமானவர்களும், அறியாமையிலும் இருந்திருக்கக்கூடும். ஆனால் சத்தியத்தின் ஆவிக்கு கீழ்ப்படியும்போது, விலையேறப் பெற்ற இரத்தத்தை விசுவாசித்து இரட்சகரிடம் தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்களை புரிந்துகொள்ளும் பட்சத்தில் எந்த விதமான தடைகள் இருந்தாலும் அவர்களை நம்முடைய உண்மையான சகோதரர்களாக பாவிக்க வழிநடத்தும். உங்கள் ஆண்டவரின் ஆவி உங்கள் இருதயத்தில் பொங்கி வழிவதினால், சுய நலம், பெருமை, பகை, குரோதம் போன்ற காரியங்கள் காணாமல் போய்விட்டது. இந்தக் கட்டத்தை நீங்கள் எட்டினால், “நான் எல்லா சகோதரர்களையும் உண்மையாக நேசிக்கிறேன்” என்று தைரியமாகச் சொல்லலாம்.

நன்மையான பாதையில் இவ்வளவு தூரம் பிரயாணப்பட்டு வந்தபின், அடுத்து, நம்முடைய இருதயத்தை பரிசுத்தமாக காத்துக் கொள்வதற்கு நாம் செய்ய வேண்டிய காரியத்தை அப்போஸ்தலர் கூறுகிறார். “நீங்கள் ஒருவரை ஒருவர் பரிசுத்தமான இருதயத்தோடு அன்பு செய்கிறீர்களா என்று சோதித்து அறியுங்கள்” ஆம், நாம் பரிசுத்தமான இருதயத்தை பெற்றிருக்கிறோம் என்பதை என்றுமே மறந்துவிடக்கூடாது. ஏனெனில் இந்த நிலையிலிருந்து ஒரு அடி வெளியே வைக்கும் போது சாத்தானின் அன்பின் மாய வலையில் அகப்பட்டுவிடுவோம். உண்மையான் அன்பு குளிர்ச்சியாயிராது. அது

அனல் உள்ளதாகவும் “சகோதரர்களுக்காக ஜீவனை இழக்கக் கூடிய அளவுக்கு அந்த அன்பு” உறுதியானதாயும் இருக்கிறது - 1 யோ 3:16

இப்படிப்பட்ட அன்பு நம்முடைய இருதயங்களாகிய பலிபீடத்தில் தேவனுக்கேற்ற சுகந்த வாசனையாக கொழுந்துவிட்டு எரியும் போது தீமையான சிந்தனைகளுக்கும், சுய நலத்திற்கும், எந்தவிதமான இடமும் இருக்காது. கூடியிருக்கும் அனைத்து சகோதரர்களும் இப்படிப்பட்ட ஆவியை பெற்றிருந்தார்களானால், அனைவரும் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்.

ஆண்டவரின் பணியை செய்வதற்கும், நம்மை சுத்திகரிப்பதற்கும் தேவையான அனைத்து மருந்துகளை இப்போதும், எப்போதும் சகோதரர்களாகிய நாம் அதிக அதிகமாய் உட்கொள்ளுவோம்.

**R2734 [col.1 p5] through R2735 [col.1 p1]**

(17ஐ வது கேள்வியை பார்க்கவும்)

ஆனால் சுத்திகரிக்கப்பட்ட இருதயத்தின் நிலையை நாம் எப்படி பெறுவது?

“உங்கள் இருதயங்களை சுத்திகரியுங்கள்” என்ற செய்தியை நாம் பாவிகளுக்கு அறிவிக்கிறோமா? இல்லையே, பாவிகள் தங்களுடைய இருதயங்களை சுத்திகரிப்பதற்கு சுவிசேஷம் அழைக்கவில்லையே. ஏனெனில் பாவிகளுடைய இருதயங்கள் சுத்திகரிக்கப்படுவது இயலாத காரியம். தேவனோடு நல்லுறவு கொண்டு, பரிசுத்தமான அவருடைய சித்தத்தை அறிந்துக் கொள்ளக்கூடிய நோக்கமுடையவர்களே தேவனுடைய பார்வையில் பரிசுத்தவான்கள் என்று அங்கீகரிக்கப்படுகிறார்கள். இதற்கு எதிராக பாவிகள் மனந்திரும்பும்படியாக அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில் அவர்களின் இருதயம் கலகத்தினாலும், அசுத்தத்தினாலும், தீமையினாலும் நிறைந்திருக்கிறது. ஒரு பாவி பாவத்திற்காய் வருந்தினபின்பு தேவனோடும் அவருடைய நீதியோடும் இசைந்திருக்க விரும்பினால், தன்னுடைய பாவத்திற்கு ஏற்ற பலியை பெற்றுக் கொண்டு தேவனோடு ஒப்புரவாகுவதற்கு மிகப் பெரிய இரட்சகரிடத்திற்கு அவர் வரவேண்டும். ஒரு பாவி இந்த ஒரு படியை கடந்து, தன்னால் முடிந்தவரைக்கும் சீர்பொருந்தப்பட்டு, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவர் கொடுக்கும் மன்னிப்பை பெற்று நீதியின் பாதையில் நடக்க முயற்சித்தால் அவர் நீதிமானாக்கப்படுகிறார். “கிறிஸ்துவின் இரத்தத்தின் மேல் உள்ள விசுவாசத்தினால் நீதிமானக்கப்படுதல்” என்ற வசனத்திற்கு அவர் உட்படுவதினால், எல்லா காரியங்களிலும் அவர் விடுதலைப் பெற்று தேவனோடு நல்லுறவு கொண்டு, தேவனுடைய மன்னிக்கக்கூடிய அன்பினால் வரும் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் முழுமையாக உணர்ந்து கொள்ளலாம்.

ஒருவர் இவைகளை செய்து முடித்து விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட நிலையை அடைந்தபின் அந்தப் பாவி, தேவனுடைய பார்வையில் இனி ஒருபோதும் பாவியாக எண்ணப்படுவதில்லை. ஆகையால், தேவனோடு தொடர்பு கொள்ளும்போது “தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக் கொண்டதைக்குறித்து,” (ரோம 3:25) என்ற வசனத்தின்படி அவருடைய இருதயம் தூய்மையாகவும் பரிசுத்தமாகவும் இருக்கிறது. இப்படிச் சீர்திருத்தப்பட்டவரை பற்றி, ஒரு புதிய கேள்வி எழும்புகிறதே, மேலும் சாத்தானின் சோதனைகள் நமக்கு எதிர்கொண்டு நிற்கிறதே. அந்த நீதிமான், தொடர்ந்து நீதியின் பாதையில் நடக்க துவங்குகையில்,

மாம்சம், உலகம், பிசாசால் சோதிக்கப்பட்டு அகப்படுகிறார். அவர் என்ன செய்யவேண்டும்? அப்பொழுது அவர் தன்னுடைய இருதயத்தை தேடினால் தன்னைத்தான் வழி நடத்திக் கொள்வதற்கு அவர் திராணி இல்லாதவரும், அவர் பெற்ற நிலையை தக்க வைத்துக் கொள்ள இயலாதவருமாய் இருக்கிறார். அவர் சரியான பாதையில் செல்வதற்கு, மிகப்பெரிய இரட்சிப்பான இரண்டாவது படியில் அவர் கிடக்க வேண்டியதாய் இருக்கும். மற்றொரு வார்த்தையில் சொல்லப்போனால் மற்றொரு தெய்வீக கிருபையை ஏற்றுக்கொள்ளவேண்டும் - "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." (ரோம 12:1) என்று நம்முடைய ஆண்டவர் அப்போஸ்தலர் மூலம் சொல்லிய வார்த்தைகளுக்கு அவர் செவி கொடுக்க வேண்டும்.

நீதிமானாக்கப்பட்டவர் சரியான முறையில் சரியாக போதிக்கப்பட்டிருந்தால், தன்னுடைய சுய பலத்தில் கிறிஸ்துவுக்குள் நிற்பது கூடாத காரியம் என்பதை அவர் நன்கு உணர்ந்து கொள்வார். மேலும் இந்த நீதிமானாக்கப்பட்ட நிலையை தக்க வைத்துக் கொள்வதற்கு தேவனால் மட்டுமே கூடும் என்பதை அறிந்து கொள்வார். முதலில் தேவனோடு ஐக்கியப்படும் போது என்னுடைய விருப்பத்தின்படி, தேவனுடைய சித்தத்தின்படி செய்வேன் என்று சொல்லலாம். ஆனால் இது நம்முடைய ஆண்டவருக்கு திருப்தியளிக்காது, என்பதை சரியான போதனையைப் பெற்றபின் அவர் கண்டறிவார். தேவனுடைய சித்தத்தை, தேவன் விரும்பியபடி செய்தால் மட்டுமே, தேவன் அவரை பொறுப்பெடுத்துக் கொள்வாரென்றும், அவர் செய்யக்கூடிய காரியங்கள் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படும் என்பதையும் உணர்ந்துக் கொள்வார். இப்படிப்பட்டவர்களுக்கு, முழுமையாக தங்களுடைய விருப்பத்தை, தேவனுடைய சித்தத்திற்கு அர்ப்பணித்து தங்களுடைய முழு இருதயத்தில் அதை நோக்கமாக கொண்டிருப்பவர்களுக்கு, நித்தியமான கன மகிமையை வாக்களிக்கிறார்.

ஒரு பாவி இத்தனை நிலைகளை கடந்தபின் ஆண்டவரிடத்தில் தன்னுடைய இருதயத்தை முழுமையாக ஒப்புக்கொடுக்க முடியும். அன்பின் பிரமாணத்தின் கீழ் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களைப் பற்றி மட்டுமே, நம்முடைய பாடம் விவரிக்கிறது. ஆனால் இருதயத்தின் சுத்திகரிப்பும், நோக்கங்களும், இலக்குகளும், சித்தங்களும், ஆண்டவரின் கற்பனைகளை நிறைவேற்றுவதற்கு பாத்திரமாய் இல்லாவிடில் அவர் ஒரு யுத்தக்களத்தில் போராட வேண்டியதாயிருக்கும். இருதயத்தில் ஆழமாய் வேரூன்றி வளர்ந்திருக்கும் சுய நலம் தேவனுடைய அன்பின் புதிய பிரமாணத்திற்கு எதிராய் செயல்படும். ஆகையால் ஒவ்வொரு நிமிடத்திலும் குறிப்பாக இந்தக் கற்பனையை முழுமையாக நாம் கடைபிடிக்க முடியாமல் போனாலும் நம்முடைய இந்தப் பாடத்தில் தெய்வீக அன்பின் பிரமாணத்தின் பொருளை நாம் கற்றுக் கொள்ளவேண்டும் என்பதை அப்போஸ்தலர் ஆலோசனை கூறுகிறார். ஆயினும் இந்தக் கற்பனையை முழுமையாக கடைபிடிக்க முடியாமல், இந்தக் கற்பனையை கடைபிடிப்பதற்கு, சுத்த இருதயம், நல்ல நோக்கங்களும் குறையாமல் இருக்க வேண்டும். மாம்சத்தின் பலவீனம், சாத்தானின் வஞ்சகம் மற்றும் சோதனைகள் வரும்போது நாம் தோல்வியடையும், ஒவ்வொரு நேரமும் நம்முடைய பரிசுத்தமான இருதயங்கள் அல்லது சித்தங்கள் அவைகளை தடுக்கவில்லையென்பது உறுதியாகிறது.

இவ்விடத்தில் ஆண்டவரின் வாக்குறுதிகள் நமக்கு உதவுகிறது . ஏனெனில்,

நம்முடைய பலவீனங்களும் அபூரண நிலையையும் அவர் நன்கு அறிந்திருக்கிறார். அன்பின் ஆவிக்கு எதிராக செயல்படக்கூடிய சாத்தானின் வலைகளையும், உலகத்தின் ஆவியும், அபூரண நிலையின் காரியங்கள் எவ்வளவு வல்லமை உள்ளது என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். ஆகவே நாம் தவறு செய்யும் போதெல்லாம் கிருபாசனத்தண்டைக்கு இலவசமாய் சென்று அவருடைய இரக்கங்களை இலவசமாய் பெற்று இந்தக் காரியங்களை மேற்கொள்வதற்கு நம்முடைய ஆண்டவர் நமக்கு வழிவகுத்து வைத்துள்ளார். ஆகவே பரிசுத்தமான நிலையை தக்கவைத்துக் கொள்வதற்கு தேவைப்பட்ட ஒவ்வொரு நேரங்களிலும் தேவையான கிருபைகளை உதவியாகப் பெறலாம். நம்முடைய மகா பெரிய பிரதான ஆசாரியர் வழியாக கிடைக்கப்பெற்ற இந்த வாய்ப்புகளையும் கிருபைகளையும் அன்றாடம் பயன்படுத்தினால் பாவங்களுக்கு எதிரான நல்லப் போராட்டத்தில் சிறப்பாக வெற்றி அடைய முடியும். அப்பொழுது நம்முடைய மாம்சத்தின் வழியாக நம்முடைய இருதயத்திற்குள் சென்றிருக்கும் தேவையற்ற சகல காரியங்களையும், வெளியேற்றிவிடலாம். இப்படிச் செய்வதின் வழியாக மட்டுமே கிறிஸ்தவர்கள் தங்களுடைய இருதயத்தை பரிசுத்தமாய் காத்துக் கொண்டு நல்ல போராட்டத்தை போராடி, இந்த உலகத்தையும் அதன் ஆவியையும், வெற்றிகரமாய் ஜெயிப்பார்கள். இந்த அன்பின் பிரமாணத்தை பொறுத்த வரையில் நம்முடைய மாம்சத்தின் சிந்தனையும், மாம்சமும் பல வழிகளில் நம்மை ஏமாற்றுவதற்கு எத்தனிக்கும். மாம்சத்தின் சிந்தை புது சிந்தையோடு இணைந்து செயல்பட வகைத்தேடி சில விதிமுறைகளுக்குட்பட்டு அன்பின் பிரமாணத்தை வாழ்க்கையின் பிரமாணமாக ஏற்றுக்கொள்ள ஆயத்தப்படும். மாம்சத்தின் சிந்தை வார்த்தைகளினாலும் தொழில் ரீதியாகவும், தெய்வீக வடிவத்திலும் அன்பை எதிர்பார்க்கும். இப்படிப்பட்ட அன்பு சுயநலமான இருதயங்களிலிருந்து புறப்பட்டு தங்களையும், மற்றவர்களையும் ஏமாற்ற முயற்சிக்கும். அவர்கள் உதடுகளில் புன்னகையும், வார்த்தைகளில் புகழ்ச்சியும் அன்பும், கனிவும் காணப்படும். ஆனால் இருதயத்திலோ, சுயநலமான உணர்வுகளும், கசப்புகளும் பகைகளும் மறைந்திருக்கும். சாதகமான சூழ் நிலைகளில் இருதயத்தில் மறைந்திருக்கும் இந்தத தீய குணங்கள் அவதூறான பேச்சுக்களாகவும், வதந்திகளாகவும், பின்னாக பேசுவதும், புறணியாகவும் வெளிப்படும். அல்லது இப்படிப்பட்ட காரியங்கள் தொடர்ந்து இருதயத்தில் நிலைத்திருந்தால், சாதகமான சூழ்நிலைகளில் சுத்தமான இருதயத்தில் காணப்படும் புதிய உடன்படிக்கையின் அன்பின் பிரமாணத்திற்கு முற்றிலும் எதிரிடையான மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகளான கோபத்தையும் பகையையும் வாக்குவாதத்தையும், துன்மார்க்கமான கிரியையும் வெளிப்படுத்தும்.

ஆகவே நமக்காக செய்யப்படும் சகலவிதமான தெய்வீக காரியங்களும், நமக்காக கொடுக்கப்பட்ட சகல தெய்வீக வாக்குத்தத்தங்களின் முக்கியத்துவங்களும் இறுதியில் நமக்குள் தெய்வீக குணமாகிய அன்பை வளர்ப்பதே மையக்கருத்தாக இருக்கிறது. இந்தத் தெளிவான உண்மையை நம்முடைய சிந்தைக்கு முன்பாக எப்போதும் வைத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், தேவன் அன்பாகவே இருக்கிறார். இப்படிப்பட்ட அன்பு நமக்குள் வளர்ச்சியடைய தேவனுடைய அன்பின் பிரமாணத்துக்கு இசைவாகவும் சாத்தானின் சுயநலமான பிரமாணத்திற்கு முற்றிலும் எதிரான பரிசுத்தமான இருதயம் மிகவும் அவசியமாயிருக்கிறது. மேலும் இதற்கு நல் மனசாட்சியும் தேவைப்படுகிறது. ஏனெனில் மனசாட்சியும் தீய காரியங்களை வலியுறுத்தும். விழுந்துபோன சுபாவத்தில் மனசாட்சியும் விழுந்துபோன நிலையில் உள்ளது. ஆகவே மனசாட்சியில் சரியான நேரத்தை காண்பிப்பதற்கு முதலில் மனசாட்சியை சீர்ப்படுத்த வேண்டும். நேரம் காட்டும் கடிகாரத்தை ஒருவர் சாவி கொடுத்து இயக்குவதுபோல நம்முடைய மனசாட்சியை தினமும்

சத்தியத்தின் காரியங்களை செயல்படுத்துவதற்கு நித்தமும் நாம் அதற்கு நீதியின் வரிசையை காண்பிக்கவேண்டும். அப்பொழுது நாம் தவறு செய்யும் பொழுது அதை தவறு என்றும் சரியான காரியங்களை செய்யும் போது சரி என்றும் நமக்கு அறிவுறுத்தும். இந்த மனசாட்சி நீதியாக செயல்படுவதற்கும் இதனுடைய ஸ்பிரிங்கை **(Spring)** புதிய சிந்தையுடனும், பரிசுத்தமான சித்தத்துடனும் இணைக்க வேண்டும். அப்பொழுது அந்த மனசாட்சி தேவனுடைய அன்பின் பிரமாணத்திற்கு முழு இசைவோடு செயல்படும்.

**F474 through F417-**

“உன் சகோதரன் உனக்கு எதிராக குற்றம் செய்தால்?” (29வது கேள்வியை பார்க்கவும்)

“நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு, மற்றவர்களை நியாயந்தீர்க்காதிருங்கள்” என்ற நம்முடைய ஆண்டவரின் கட்டளைகளுக்கு இது முரண்பாடாக இல்லையா? முதலில் நாம் பொல்லாங்கு செய்கின்றவனை தனிப்பட்ட விதத்தில் நியாயம் தீர்க்காதிருந்து விட்டு, அதன் பின்பு அவனது பொல்லாப்பைப் பற்றிப் பேசி அல்லது வீண் பேச்சு பேசி, அதன்படி அவனுடைய காரியங்கள் முழுவதும் சபைக்கு தெரியவரும்போது, அதன்பிறகு பொல்லாப்பு செய்தவனை விலக்கி வைக்கலாமா?

அப்படி இல்லவே இல்லை. திவ்விய கட்டளையை, ஒழுங்கை சரியாகப் புரிந்து கொள்ளும்போது அதில் முரண்பாடு இல்லவே இல்லை. உதாரணமாக **“A”** என்பவருக்கும் **“B”** என்பவருக்கும் இடையில் ஒரு கருத்து வேற்றுமை இருக்கும் பட்சத்தில், **“B”** தனக்கு ஒரு தவறு செய்துவிட்டார் என்று **“A”** எண்ணுகிறார். அப்படியிருக்கும்போது, அவர் **“B”** குற்றவாளியாக நியாயந்தீர்க்கக்கூடாது. அவர் “நமக்கு இடையில் கருத்து வேறுபாடு உள்ளது, நான் செய்தது சரியானதுதான்” என்று மாத்திரம் சொல்லவேண்டும். அதே வேளையில் தன் பக்கத்தில் நியாயம் உள்ளதென்று **“B”** எண்ணலாம். இதன் காரணமாக **“A”**, **“B”** உடன் ஐக்கியம் கொள்வதை விட்டு விடாதிருக்க வேண்டும். அப்படி ஐக்கியத்தை விட்டுவிடுவது, அவனை நியாயந்தீர்ப்பது அல்லது குற்றப்படுத்துவதாகும். ஆனால்,“விஷயம் மிகச் சாதாரணமானது, இது சகோதரருக்கிடையில் இருக்கிறபடியினால் நான் அதை விட்டு விடுவேன். ஏனெனில் **“B”** ஆண்டவருக்குள் இருக்கிற ஒரு சகோதரனாக இருக்கிறார், ஆனபடியால் வேண்டுமென்று அவன் எனக்கு தவறு செய்யமாட்டான், தவறு என்னுடையதாக இருக்கக்கூடும் அவனுடையதல்ல” என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டு அந்த பிரச்சனையை விட்டுவிடலாம்.

இந்த முடிவை எடுக்க முடியாத பட்சத்தில் **“A”**,**“B”** க்கு எதிராக தீர்ப்பிடக்கூடாது. அதற்குப் பதிலாக **“A”**,**“B”** யினிடத்தில் சென்று விஷயமானது தனக்கு எப்படி தோன்றுகிறது என்று விளக்கமாகக் கூறி முடிந்தால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து சகோதரத்துவத்துடன் ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டும். ஆனால் அவர்கள் ஒத்துவராவிட்டால் சபையில் உள்ள ஞானமான, சகோதரர்கள் **“C”**, **“D”** சகோதரர்களிடத்தில் (இவர்கள் **“A”** மற்றும் **“B”** க்கும் நம்பிக்கைக்கு பாத்திரவான்களாக இருக்க வேண்டும்) சென்று, பிரச்சனைக் கூற வேண்டும். இவர்கள் **“B”** யை குற்றவாளி என்று தீர்ப்பிடாமல், முதலில் அவரின் காரியத்தையும் தெளிவாக கவனிக்க வேண்டும். இப்படியாக **“A”** மற்றும் **“B”** இருவர் முன்னிலையில் பிரச்சனைகளை தீர விசாரித்து, ஆலோசனை சொல்லவேண்டும். இது எல்லோருக்கும் திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கும் - விசேஷமாக எல்லோரும் அன்பின் ஆவியை உடையவர்களாகவும், அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்தின் அங்கங்களாகவும் இருந்து ஒருவருக்கொருவர்

நன்மை செய்ய வேண்டும் என்ற வாஞ்சையுடன் காணப்படும்போது அப்படியிருக்கும், இன்னமும் அவர்கள் மத்தியில் சமாதானம் ஏற்படவில்லை என்றால், அப்பொழுதும் கூட தீர்ப்பு சொல்லாமல், அந்தப் பிரச்சனையை சபைக்கு முன் கொண்டு வரவேண்டும்.

ஆனால் **"C"**,**"D"** யினிடத்தில் **"A"** சென்ற போது அவர்கள் தங்களுடைய கருத்தை **"A"** க்கு எதிராகவும் **"B"** க்கு சாதகமாகவும் தெரிவித்தார்களானால் அந்த விஷயம் அங்கேயே முடிவு பெறும். இப்படிப்பட்ட ஒரு சூழ் நிலையில் **"A"** இந்த விஷயத்தை சபைக்கு எடுத்துச் சொல்ல முடியாது. இந்த விஷயத்தை இன்னும் தொடர வேண்டும் என்று எண்ணுவாரானால், அவர் மூர்க்க குணமுள்ளவராக இருக்க வேண்டும். அவருக்கு ஆண்டவருடைய போதனைகள் இதற்கு மேல் அதிகமாக சிலாக்கியங்களை கட்டளையிடவில்லை. (மத் 18:15) இன்னமும் அவன் திருப்தி அடையாவிட்டால், இன்னும் இரண்டு அல்லது மூன்று திறமையுள்ள எந்தப் பக்கமும் சாயாமல், நடு நிலை வகிக்கும் மனதுடைய சகோதரர்களான **"E"**,**"F"**,**"G"** இன்னொரு முறை விஷயத்தைக் கூறி அவர்களுடைய கருத்தைப் பெறலாம்.

ஆனால் **"A"**,**"C"** யையும் **"D"** யையும் **"B"** யினிடத்தில் கொண்டு சென்று, அவர்கள் எல்லோருமே **"A"** சொல்லுகிறபடி **"B"** அவருக்கு தவறு இழைத்து விட்டார் என்று ஒருமுகமாக ஒத்துக் கொண்டாலும் தன்னுடைய நிலையை விட்டுக் கொடுக்க மறுத்தாலோ, அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் மறுத்தாலோ அல்லது தவற்றை சரி செய்யாமல் விட்டு விட்டாலோ, **"A"**,**"C"** மற்றும் **"D"** உடனும் இணைந்து சபையின் ஒரு கூட்டத்தைக் கூட்ட வேண்டும். **"A"** மற்றும் **"B"** முழு பிரச்சனையயும் சபைக்கு முன் சொல்ல வேண்டும். அதே நேரத்தில் **"B"** இன்னமும் சபையில் இருக்கவும், சபையில் ஆலோசனையையும், அதிகாரத்தையும் ஏற்றுக் கொள்ளுபவராகவும், அதோடு கூட மனசாட்சி உள்ளவராகவும் இருப்பது அவசியம். சபை அந்த விஷயத்தை கேட்கும் போது, நீதிமான்களாக்கப்பட்டு, அர்ப்பணித்தவர்கள் மட்டுமே அங்கு சபையாக கூடி வர வேண்டும். ஏனெனில், அவர்கள், தீர்ப்பு அளிக்கும்படி அவர்களுடைய தலைவரும் ஆண்டவரின் நாமத்தில் அவருடைய நியாயத்தை வழங்க இருக்கிறார்கள். இது சபையில் பாகுபாடு உண்டாவதற்கான ஒரு விஷயமாக அல்ல, மாறாக சபையின் ஒற்றுமையையும் சமாதான கூட்டையும் காத்துக் கொள்ளுவதற்காகும். **"A"** மற்றும் **"B"** வழக்கு பதிவு செய்யக்கூடாது. மேலும், இந்தக் காரியத்தில் ஆண்டவருடைய தீர்ப்பை மட்டுமே வழங்க வேண்டும் என்று விருப்பமுள்ளவர்கள் வழக்கு பதிவு செய்யக்கூடாது. எடுக்கப்படுகிற தீர்மானம் ஒருமனப்பட்ட அனைவரின் தீர்மானமாக இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் நடைமுறைக்கு சாத்தியமானதாக இருக்கவேண்டும், அதிகமான உணர்ச்சிவயப்படுதல் கட்டுப்படுத்தப்பட வேண்டியதாக இருந்தாலும் கூட, தீர்மானம் ஒரே மனதாக இருக்க வேண்டும், "நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு" (கலா 6:1) என்பதின்படியாக நியாயம் எப்பொழுதும் இரக்கத்துடன் கலந்து இருக்கவேண்டும்.

சபையின் முடிவை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படி ஒழுக்கத்தைக் குறித்தான ஒரு விஷயத்தில் (மனசாட்சியைப் பற்றியதல்ல) யாராவது ஒருவர் அதன்படி கீழ்ப்படியாவிட்டால் அல்லது அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவன் சபைக்கு எதிர்த்து நிற்பதை விடும் வரை மற்றவர்களுக்கு (அவன் அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பான்." அவன் கீழ்ப்படியும் பட்சத்தில், மன்னிக்கப்பட்டு முன்பு இருந்த மாதிரியே ஐக்கியத்திற்குள்ளாக சேர்த்துக் கொள்ளப்படுவான். இதன் நோக்கம் என்னவெனில், சகோதரனை முற்றிலுமாக ஒதுக்கிவைத்து விடவேண்டும் என்பதல்ல,

ஆனால் அவருடைய தவறான வழியை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்று காட்டுவதன் மூலம் அவன் திருந்துவதற்காக உதவி செய்வதாகும். இப்படியான ஒருவனை அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப்போலவும் நடத்துவது, அவன் ஒதுக்கி வைக்கப்பட்ட பின்னரும் அவனைப் பற்றி அவதூறாக பேசுவதற்கோ அல்லது அவமரியாதை செய்வதற்கோ அல்ல. ஆண்டவருடைய ஜனங்கள் எந்த வேளையிலும் அவதூறு பேசுகிறவர்களாகவோ அல்லது முதுகுக்குப்பின் பேசுகிறவர்களாகவோ இருக்கக்கூடாது. “பிறனைப் பற்றி பொல்லாப்பு பேசாதே” என்பதை இதற்கு மிக பொருத்தமாய் இருக்கிறது. நாம் பொல்லாங்கும் பேசக்கூடாது, அல்லது அஞ்ஞானிகளையும் பாவிகளையும் கடுப்பாக பார்க்கக்கூடாது. மேலும் அவர்களோடு தொடர்பு வைத்துகொள்ளாமலும் இருக்ககூடாது, ஆனால் பரிசுத்த ஆவியினாலும், அதன் அன்பினாலும் சமாதனத்தினாலும் நிறைந்து இருக்கின்ற புது சிருஷ்டியின் சகோதருக்கு உரியதான மரியாதையும், விசேஷமான ஐக்கியத்தையும் அவர்களுக்கு கொடாதிருக்கவேண்டும்.

**F583 [p1] through F586 –**

மனசாட்சியுடன் தலையிடுவது (33ம் கேள்வியை காண்க)

“அந்நிய காரியங்களில் தலையிடுவதினால்”, புதுசிருஷ்டியின் புதிய மனங்கள் முற்றிலும் மாறுபடும். அப்போஸ்தலர் இதை கடுமையாகக் கண்டிக்கிறார். (1 தீமோ 5:13, 1 பேது 4:15) மற்றவர்களின் காரியங்களில் துணிகரமாக தலையிடுவது தேவையற்ற காரியமாக இருக்கிறது. சில நேரங்களில் அந்த காரியத்தைக் குறித்து அறியாத போதிலும் அதில் சம்பந்தம் இல்லாமல் தலையிடுவார்கள். ஆனால், இந்த உலகத்தில் பிள்ளைகள் கூட தற்போதைய வாழ்நாளில் போதுமான அளவு தெளிந்த புத்தியுள்ளவர்களாக, தன்னுடைய சொந்த அலுவல்களைச் சரியான முறையில் பார்க்கும்படி தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுகிற அளவுக்கு, தங்களுடைய சிந்தையிலே ஞானமுள்ளவர்களாக நடந்து கொள்கிறார்கள். மேலும், அவர் மற்றவர்களுடைய விஷயங்களில் தலையிடுகிறவராகவும், மற்றவர்களுக்கு புத்திசொல்லும் அளவுக்கு திறமை உள்ளவர்களாகவும் இருப்பதாக காண்பித்துக் கொண்டு, அதன் விளைவாக மற்றவர்களுடைய வியாபாரத்திற்கு போதுமான அளவு நேரம் ஒதுக்குவாராகில், அவர் நிச்சயமாகவே ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தன்னுடைய விஷயங்களை அலட்சியம் பண்ணுகிறவராக இருப்பார். தெளிந்த புத்தியின் ஆவியினால் கர்த்தருக்குள் பிறந்த புதுசிருஷ்டிகள் இந்த உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். மேலும், மற்றவர்களுடைய விஷயத்தில் தலையிடுவதற்கு உலகத்தாரைக் காட்டிலும் தனக்கு நேரம் இன்னும் குறைவாக இருக்கிறது என்பதை உணரவேண்டும். ஏனெனில், தங்களுடைய நேரம், தாலந்து, செல்வாக்கு அனைத்தையும் ஆண்டவருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்.

இப்படிப்பட்டவர்கள் இயற்கையாகவே இந்த விஷயத்தில் தெளிந்த புத்தி இல்லாதவர்களாக இருந்தால், வேதாகமத்தில் உள்ள கட்டளைகளால், அவர்களுடைய உடன்படிக்கையின் பலியை நிறைவேற்றுவதற்கான காலம் குறுகியதாக இருக்கிறது என்ற உணர்வினால் சரியான வழியில் நடக்கும்படி பலவந்தப்படுத்தப்படுவார்கள். மேலும் புது சிருஷ்டிக்குரிய கட்டளையான, பொன்னான கட்டளை அடுத்தவர்களின் விஷயத்தில் தலையிடுவதை தடுக்கிறது என்பதையும் அவர்கள் உணர வேண்டும். நிச்சயமாகவே, மற்றவர்கள் தங்கள் விஷயங்களில் தலையிடுவதை யாரும் விரும்பமாட்டார்கள். ஆகவே,

அவர்களும் செய்யாதபடி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஆனாலும் பொதுவாக உலகத்தின் ஆவி இதற்கு எதிர்மாறாக உள்ளது என்று அப்போஸ்தலர் உணர்ந்து, அதன்படி இதைக் குறித்து பரிசுத்தவான்கள் அறிந்து, அப்பியாசப்படுத்திக்கொண்டு, கற்கவேண்டும் என்று அவர்களை எச்சரிக்கிறார். “அமைதலுள்ளவர்களாய் இருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும் வேண்டுமென்று புத்தி சொல்லுகிறோம்” (1 தெச 4:12) என்று கூறகிறார்.

மற்றவர்களுடைய அலுவல்களைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க முற்படுகிற இயற்கையான குணம், அவர்களை திருத்தும்படியாக ஒரு கரம் நீட்டுவதும், ஒருவன் தன் கண்ணிலுள்ள உத்திரத்தை அசட்டை பண்ணிவிட்டு, மற்ற சகோதரனின் கண்ணிலுள்ள துரும்பை எடுக்க முற்படுவதும், ஆண்டவர் விளக்கமாக கூறுகிறார். (மத் 7:3-5) சில சமயங்களில் புது சிருஷ்டியை ஒரு புதுமையான வழியில் தாக்குகிறது. அவன், புத்திமதி கூறுவதும், விசாரிப்பதும், கடிந்து கொள்ளுவதும், கண்டிப்பதும் தன்னுடைய கடமை என்று நினைக்கிறார். விஷயத்தை தன்னுடைய மனதில் எடுத்துக் கொள்ளும்போது, அப்படிச் செய்யாவிடில் அது பாவமாக இருக்கும் என்று தன்னை திருப்திப்படுத்திக் கொள்ளுகிறார். இப்படி, அவன் வீண் அலுவற்காரன் என்று நாம் சொல்லுகிற அளவுக்கு மற்றவர்களின் விஷயத்தில் தலையிடுகிறவனாகி விடுகிறார். இப்படி தவறாக வழி நடத்தப்பட்ட மனசாட்சியினிமித்தம், எதிர்க்கக்கூடியதாகவும் ஆகிவிடுகிறது. அநேக தடவைகளில், பணிவுள்ள நல்ல ஜனங்கள் உண்மையான புதுசிருஷ்டிகள் ஆண்டவருடைய ஊழியத்தில் அவர்கள் செய்ய முற்படுகிறதெல்லாவற்றிலும், இந்தக் குறைபாட்டினால் தடை பண்ணப்படுகிறார்கள். ஒவ்வொருவரும் தன்னை கட்டுப்படுத்தி, நீதியின் கொள்கைகளை அப்பியாசப்படுத்தவும், கற்றுக்கொள்ளவும், ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளவைகளை நேசிக்கவும் வேண்டும். அவன் சகோதர கடமைக்கும், மற்றவர்களின் அலுவல்களில் தலையிடுவதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் காணும்படி, தன்னுடைய மனசாட்சிக்கு கற்பிக்க வேண்டும். நாம் பார்த்தபடி, பெரும்பாலான ஆண்டவரின் ஜனங்கள், மாத்திரமல்ல உலகத்தாரும்கூட, நீதி, மற்றும் அன்பின் கொள்கைகள் பொன்னான கற்பனையில் இணைக்கப்பட்டிருப்பதை விரும்பி வந்தபின்னரும், அதை வாழ்க்கையின் அலுவல்களிலும், மற்றவர்களோடு பழகும்போதும் நடைமுறைப்படுத்தும் வேளையில், கடிந்து கொள்ளுதலும், அதட்டுவதும், தவறு கண்டுபிடிப்பதும், எடுத்துப் போடுவதும் மிகக் குறைவாயிருக்கக் காண்பார்கள்.

இதே போன்று, எந்த விஷயத்திலும் விசாரிப்பது நல்லது, அது என்னுடைய வேலையா? நாம் உலகத்தாரோடு பழகும்போது, பொதுவாக கவனமாக ஆராய்ந்து பார்க்கும் வேளையில், அவர்களை கடிந்து கொள்ளுவதோ, அல்லது கண்டிப்பதோ, அல்லது அதட்டுவதோ நம்முடைய வேலையல்ல என்று காண்கிறோம். நம் ஆண்டவரால் அழைக்கப்பட்டிருக்கிறோம். குறுகலான பாதையில் நடக்கும்படியாக உலகத்தின் பாதையிலிருந்து திரும்பியுள்ளோம். அதுவே நம்முடைய வேலை, நாம் ஆண்டவரை பின்பற்றும்படியாக உலகம் நம்மை தனியே விட்டுவிட வேண்டும் என்று வாஞ்சிக்க வேண்டும். அதே போன்று உலகத்தின் கவலைகளை நாம் தனியே விட்டு விட்டு, நம்மையும் நம்முடைய சுவிசேஷ செய்தியையும் “கேட்கிறதற்கு காதுள்ளவனிடத்தில்” கூற வேண்டும். உலகமானது, ஆண்டவரால் அழைக்கப்படவில்லை, “இடுக்கமான வாசலுக்குள்” வரவில்லை. ஆகவே அது தன் வழியைத் தெரிந்துகொள்வதற்கும், நாம் அதன் வழியில் குறுக்கிட மாட்டோம் என்று எதிர்பார்க்கவும் அதற்கு உரிமை உண்டு, ஏனெனில், நாமும் நம்மில் குறுக்கிடுவதை விரும்பமாட்டோம் . இது நம்முடைய வெளிச்சம் பிரகாசிப்பதை

தடை பண்ணாது, இப்படியாக, நாம் மற்றவர்களின் விஷயத்தில் தலையிடாமலும், கண்டிக்காமலும் இருந்தாலும், நாம் மறைமுகமாக உலகத்தின் மேல் தொடர்ச்சியாக செல்வாக்கை அப்பிரியாசப்படுத்திக் கொண்டிருப்போம். விஷயம் வியாபாரத்தைப் பற்றி இருக்கும் போது, அதில் நாம் பணம் சம்பந்தமாக அக்கறையுள்ளவர்களாக இருக்கும்போது, அப்பொழுது அது மற்றவர்களுடைய விஷயத்தில் தலையிடுவதாகாது. அது நம்முடைய காரியத்தையே பார்ப்பதாகும். அதில் முறைப்படியான கவனம் செலுத்துவதாகும். குடும்பத்திலும் வீட்டிலும் நடைபெறுகின்ற எல்லா காரியங்களைக் குறித்தும் பெற்றோர்கள் ஓர் அறிவுள்ள வழியைக் காட்டுவது, தலையிடுதல் ஆகாது. இருந்தாலும், இங்கு கூட குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபரின் தனிப்பட்ட உரிமைகள் கவனிக்கப்படவேண்டும், பாதுகாக்கப்படவேண்டும். புருஷனும் குடும்பத்தின் தகப்பனும் அதன் தலைவராகவும், முழு அதிகாரம் உள்ளவராகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கும் போது, அந்த அதிகாரத்தை அன்புடன் கூடிய நிதானத்துடனும், ஞானமுள்ள சிந்தனையோடும் பயன்படுத்த வேண்டும். மனைவியின் தனித்தன்மையும், அவளுக்கு பிடித்தமானவைகளும், அவனுடைய கவனத்தில் இருக்கவேண்டும். அவளும், அவனுடைய பிரதிநிதியாக அவனுக்கு உதவி செய்யும் துணையாக, வீட்டை பராமரிக்கிறவளாக, அவளுடைய விசேஷமான வரம்பிற்குட்பட்டு, முழு அதிகாரமும், ஆளுகையும் அவளுக்கு கொடுக்கப்படவேண்டும். மேலும் அவன் இல்லாத வேளையில், குடும்பத்தின் எல்லா காரியங்களைப் பொறுத்தவரையிலும் அவனுடைய வயதின்படி போதுமான அதிகாரத்தை, பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். பிள்ளைகளுக்கும் கூட, அவர்களுடைய வயதின்படி போதுமான அளவு தனிப்பட்ட முறையில் இடமும், அவர்களுடைய விஷயங்களில் தனித்தன்மையும் கொடுக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் வீட்டின் ஒழுங்கு, சௌகரியத்தைப் பொறுத்த விஷயங்களில், வீட்டில் உள்ளவர்கள் மனதில், ஒழுக்கத்தில், சரீர பிரகாரமான விஷயங்களில் வளர்ச்சி பெறுவதைக் குறித்து, அவனுடைய அதிகாரத்தையும் மேற்பார்வையையும் மாத்திரமே அப்பியாசப்படுத்த வேண்டும். பிள்ளைகள் சிறு வயதிலிருந்தே ஒரு குழந்தை மற்ற குழந்தையிடம் குற்றம் கண்டுபிடிக்காமலிருக்கவும், ஆனால் மற்றவர்களுடைய உரிமையை மதிக்கவும், பொன்னான கற்பனையின்படி மற்றவர்களுக்கு தயாளத்துடனும், அன்புடனும், உதவவும் கற்றுக்கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

வீண் அலுவற்காரராய் இருப்பவர்களுக்கு எதிராக உள்ள எச்சரிக்கையை நினைப்பதற்கு சபையைத் தவிர வேறு இடம் கிடையாது. சகோதரர்கள் வசனத்திலிருந்தும், கட்டளையிலிருந்தும், மூப்பர்களின் உதாரணத்திலிருந்தும் சீக்கிரமாக கற்றுக் கொள்ள வேண்டியதென்னவெனில், மற்றவர்களின் விஷயத்தில் தலையிடுவதோ, மற்றவர்களைப் பற்றி விவாதிப்பதோ தேவனுடைய சித்தம் கிடையாது என்பதேயாகும். ஆனால் மற்ற இடத்தில் உள்ளது போலவே இங்கேயும் ஒருவரைக் குறித்தும் பொல்லாங்கு பேசாதே" என்கிற திவ்விய கட்டளை உரியதாக இருக்கிறது. நமக்கு நேரிடையாக அக்கறையில்லாத மற்றவர்களுடைய தனிப்பட்ட விஷயங்களில் தலையிடுதல், பொல்லாப்பு பேசுவதற்கும், புறங்கூறுவதற்கும், கோபம் அடைவதற்கும், பொறாமை அடைவதற்கும், வெறுப்பு அடைவதற்கும், சண்டையிடுவதற்கும், பல்வேறு மாம்சீகத்தின் காரியங்களிடத்திற்கும், பிசாசினிடத்திற்கு வழி நடத்தும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (கொலோ 3:5-10) இப்படியாக, அநேக வேளைகளில் அவதூறு பேசும் பழக்கத்தின் சிறிய விதைகள் விதைக்கப்படுகின்றன. கசப்பின் பெரிய வேர்கள் வளருகின்றன, அதன்மூலம் அநேகர் தீட்டுப்படுகிறார்கள். புதிய மனம் உள்ள அனைவரும் இந்தப் பொல்லாங்கின் விஷத்தன்மையை உணருகிறார்கள். அவர்கள் எல்லாரும் தங்களுடைய வீடுகளிலும்

அயலகத்திலும் முன் மாதிரியாக இருக்கவேண்டும். மாம்சீக மனம், கொலை செய்வதும், கொள்ளையடித்தலும் தவறு என்று உணரலாம். ஆனால் திவ்விய பிரமாணத்தின் ஆவியை பெற்றவர்களுக்கும் இன்னும் ஓர் உயர்வான நீதியின் எண்ணம் அதாவது அவதூறு கூறுவது என்பது ஒருவருடைய குணாதிசயத்தை கொலை செய்வதாகும், மேலும் எந்த வழியிலாவது அயலானின் நல்ல பெயரைத் திருடுவது, கொள்ளையடிப்பதாகும் என்ற எண்ணம் தேவைப்படுகிறது. உலகப்பிரகாரமான எண்ணம் உடையவர்கள் இந்த விஷயத்தை ஓர் அளவுக்கு கிரகித்துக் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய உணர்வுகள் புலவரின் வார்த்தையில் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது - "என்னுடைய பணப்பையைத் திருடுகிறவன் குப்பையைத் திருடுகிறான் . ஆனால் என்னுடைய நல்ல பெயரைத் திருடுகிறவன் அவனை செழிப்பாக்காத ஒன்றைத் திருடுகிறான், ஆனால் என்னை உண்மையிலேயே தரித்திரமாக விட்டுவிடுகிறான்."

---------------------------